

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூன் 04, 2015 | புரட்சி 14 | முழக்கம் 21 | விலை: ரூ.3.00


## காவல்துறை கெடுபிடிகள் – தடைகள் தகர்ந்தன

# மேட்டூரில் நாத்திகர் விழா–பேரணி

சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மே 30 அன்று மேட்டூர் புதுச்சாம்பள்ளியில் நாத்திகர் விழா-பேரணி-பொதுக்கூட்டம் எழுச்சியுடன் நடந்தது. விழாவுக்கு காவல்துறை அனுமதி மறுத்தது. அதைத் தொடர்ந்து உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் திருமூர்த்தி, துரை அருண் ஆகியோர் கழக சார்பில் வழக்கு தொடர்ந்தனர். நீதிபதி வி. தனபால் காவல்துறை விதித்த தடையை நீக்கி, விழாவுக்கு அனுமதி அளித்தார். விழா நடைபெறுவதற்கு இரு நாள் முன்புதான் அனுமதி கிடைத்தது.

காவல்துறை விதித்த தடை தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து நிகழ்ச்சி நடைபெறவிருந்த மாரியம்மன் கோயில் நிர்வாகிகள், நாத்திகர்விழாவை எதிர்ப்பதாக ஒரு செய்தி உருவாக்கப்பட்டது. மாரியம்மன் கோயில் நிர்வாகிகள், அந்தக் கோயில் உள்ள பகுதிகளில் நாத்திகர் விழா நடப்பதற்கு எதிர்ப்பு காட்டுவதால், விழாவை வேறு தேதிக்கு மாற்றிக் கொள்ளுமாறு காவல்துறை கெடுபிடி காட்டியது. பொதுக் கூட்டத்தையும் வேறு இடத்துக்கு மாற்றிக் கொள்ள வற்புறுத்தினார்கள். கழகத் தலைவர் கொளத்தூர் மணி கோயில் நிர்வாகிகளிடம் நேரில் பேசினார். அப்போது விழா பொதுக் கூட்டத்தை மாற்று இடமான பள்ளிக்கூட மைதானப் பகுதிக்கு மாற்றுவதால் கழகத்துக்கு ஏற்படக்கூடிய பொருட் செலவை எடுத்துக் கூறி, இடத்தை மாற்றுவதற்கான வாய்ப்பு இல்லை என்று திட்டவட்டமாகக் கூறினார். அதைத் தொடர்ந்து புதுச்சாம்பள்ளி பள்ளி மைதானத்தில் மேடை, ஒலிபெருக்கி அமைக்கும் செலவுகளை தாங்களே ஏற்றுக் கொள்வதாக கோயில் நிர்வாகிகள் கழகத் தலைவரிடம் கூறினர். அதைத் தொடர்ந்து பள்ளி மைதானத்துக்கு பொதுக் கூட்டம் மாற்றப்பட்டது. இதற்காக மேடை, ஒலி பெருக்கிக்காக கோயில் நிர்வாகமே ரூ.20,000 வரை செலவிட்டது குறிப்பிடத்தக்கதாகும். மாற்றப்பட்ட இடம் மைதானமாக இருந்ததால் பொதுக் கூட்டம் திறந்தவெளி மாநாடாக சிறப்பாக காட்சியளித்தது.



எதிர்ப்புகளை எதிர்கொண்டு திட்டமிட்டபடி நாத்திகர் பேரணி, குஞ்சாண்டியூர் ஆர்.சி. பிளான்ட் அருகிலிருந்து பறை இசை, கடவுள் மறுப்பு முழக்கங்களுடன் புறப்பட்டது. பெண்கள், குழந்தைகள், கடவுள் மறுப்பு முழக்கங்களுடன் தீச்சட்டி ஏந்தி வர, கருஞ்சட்டைத் தோழர்கள் அணி வகுத்து வந்தனர். அலகு குத்தி கார் இழுத்தல், ஆணிப்

( 4ஆம் பக்கம்)

## பேரணியில் பங்கேற்ற கருநாடக குடியரசு கட்சித் தலைவர் எழுச்சி உரை

# திராவிடர் விடுதலைக் கழகம் பெரும் சக்தியாக வளரவேண்டும்

மேட்டூர் நாத்திகர் பேரணியில் பங்கேற்று கருநாடக குடியரசு கட்சித் தலைவர் முனைவர் வெங்கடசாமி பேசியதாவது:

“பெரியார் கொள்கைகளை தமிழ்நாட்டில் ஆழமாகப் பரப்புவதன் வழியாக மட்டுமே ஒடுக்கப் பட்ட மக்களை விடுதலை செய்ய முடியும். ஒடுக்கப் பட்ட மக்களின் சமூக விடுதலைக்கு பெரியார் கொள்கையில் மட்டுமே தீர்வு இருக்கிறது. பார்ப் பனியம் தனது மேலாதிக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்ள ஜாதியத்தை உருவாக்கியது. அதை நிலைநாட்ட ‘மனுஸ்மிருதியை’ பயன்படுத்தியது. பார்ப்பனர்களின் பொருளாதார அரசியல் ஆதிக்கத்துக்கும் ஜாதியமே அடித்தளமாக நிற்கிறது.

காலம் காலமாக தொடர்ந்து வரும் மூட நம்பிக்கைகளை எதிர்த்து, பெரியார் போராடினார். புத்தருக்குப் பிறகு பார்ப்பனரை வாழ்நாள் முழுதும் எதிர்த்துப் போராடிய தலைவர் பெரியார். அதேபோல் நான் சார்ந்துள்ள குடியரசு கட்சியை தோற்றுவித்தவர் அம்பேத்கர். பெரியார், அம்பேத்கர் இருவருமே சமூக மாற்றத்துக்கு சமத்துவத்தை நிலைநாட்டுவதற்காகவே உழைத்தனர்.

முதலில் உங்கள் அமைப்பு பெரியார் திராவிடர் கழகமாக இருந்தது. இப்போது இன்னும் சிறப்பாக திராவிடர்களின் விடுதலையை பெயரிலேயே வலியுறுத்தும் “திராவிடர் விடுதலைக் கழக”மாக மாறியிருப்பது மிகவும் சிறப்பானது. திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள்கூட பெங்களூர் வந்தபோது அவரை சந்தித்து விவாதித்தோம். அதன்பிறகு கொளத்தூர் மணி பெங்களூர் வந்தார்.





அவரது உரையைக் கேட்ட பிறகு எங்களுக்கு அவர்மீதும், அவர் நடத்தும் இந்த கழகத்தின் மீதும் ஈர்ப்பு ஏற்பட்டது. கருநாடக பகுத்தறிவாளர் கழக சார்பில் ஆண்டுதோறும் பெரியார் பிறந்த நாள் விழா நடத்தி, சிறந்த பகுத்தறிவாளர்கள், முற்போக்கு சிந்தனையாளர்களுக்கு ‘பெரியார் விருது’ வழங்கி வருகிறோம். பெரியார் கருத்துகளை கன்னடத்தில் மொழி பெயர்த்த வேமண்ணா (வி.சி. வேலாயுதம்) அவர்களுக்கு பெரியார் விருது வழங்கினோம். பெரியார் பகுத்தறிவு கருத்துகளை மேடைகளில் பேசுவதைவிட வாழ்க்கையில் பின்பற்றி வாழ்ந்து காட்ட வேண்டும். அதுதான் முக்கியம்.

மகாராஷ்டிராவில் மூடநம்பிக்கைகளை எதிர்த்து, உங்கள் தலைவர் கொளத்தூர் மணியைப் போல் போராடியவர் டாக்டர் தபோல்கர். அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். உடனே அங்கே காங்கிரஸ் ஆட்சி அவரது நினைவாக மூடநம்பிக்கை ஒழிப்பு சட்டத்தைக் கொண்டு வந்தது. ஆனால், பெரியார் பிறந்த மண்ணில் இப்படி ஒரு சட்டம் கொண்டு வரப்படாதது எங்களுக்கு வியப்பாக உள்ளது. இங்கே ஜெயலலிதா தலைமையில் ஒரு பார்ப்பன ஆட்சி நடப்பதால் சட்டத்தை அவ்வளவு எளிதில் கொண்டு வர மாட்டார்கள். அதற்கான போராட்டத்தை நீங்கள் தொடங்கி, ஆட்சிக்கு அழுத்தம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கருநாடக மாநிலத்தில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் கொண்டுவர மாநில அமைச்சரவை முடிவு செய்து, அதற்கான சட்ட வரைவு மூன்று முறை சட்டசபையில் அறிமுகம் செய்யப்பட்டது. பார்ப்பனர்கள் தொடர்ந்து எதிர்த்து சட்டத்தை நிறைவேற்ற முடியாமல் தடுத்து வருகிறார்கள். சட்டம் நிறைவேற்றும் வரை நாங்கள் போராடு வோம். ஒருவர், பகுத்தறிவாளர் ஆகிவிட்டால், அவர் பெரியாரிஸ்டாகத்தான் இருக்க முடியும். பெரியார் ஒரு உலகத் தலைவர். இந்தியா முழுதும் அவரது கொள்கைகள் பரவ வேண்டும்.

இங்கே நடந்த பேரணியைக் கண்டு நாங்கள் மிகவும் பூரித்துப் போனோம். பேரணி எங்களை மிகவும் ஈர்த்து விட்டது. திராவிடர் விடுதலைக் கழகம் தமிழ்நாட்டில் பெரிய சக்தியாக வளர வேண் டும். பெரியார் வலியுறுத்திய ஜாதி-மத-மூட நம்பிக்கை எதிர்ப்பு கருத்துகள் இந்தியா முழுதும் பரவ வேண்டும். திராவிடர் விடுதலைக் கழகத்துக்கு எங்கள் இயக்கம் எப்போதும் உறுதுணையாக நிற்கும் என்றார். ✦


வருகின்ற 01.06.2015 அன்று சிறப்பு பூஜைகள் செய்திட உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ள செயற்பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பூஜைகள் மேற்கொள்ளப்பட்ட விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு 02.06.2015 அன்று காலை 10.00 மணிக்குள் மின்அஞ்சல் மூலம் தெரிவித்திடவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து.,சார்பில்,

## வெட்கம்! மகாவெட்கம்!

# பொறியாளர்கள் சிறப்பு பூஜை நடத்த நீர்வளத் துறை சுற்றறிக்கை

தமிழக அரசின் பொதுப்பணித் துறையின் கீழ் உள்ள நீர்வள ஆதாரத் துறை மேட்டூர் உள்பட தமிழக நீர் தேக்கங்களில் நீர் நிரம்புவதற்கு கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடத்த வேண்டும் என்று சுற்றறிக்கை விடுத்துள்ளது. இந்தத் துறையின் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளரான சோ. அசோகன், துறையில் பணியாற்றும் பொறியாளர்களுக்கு இந்த சுற்றறிக்கையை அனுப்பியிருக்கிறார். (சுற்றறிக்கை நகல் நம்மிடம் உள்ளது) அதில்,

“மேட்டூர் அணையில் நல்ல நீர்வரத்து, நீர் இருப்பினைப் பெறுவதற்கும் மற்ற அணைகளில் நீர் நல்ல இருப்பினைப் பெறுவதற்கும், இயற்கை அன்னையின் அருள்வேண்டி அந்தந்த கோட்டங்களின் ஆளுகைக்கு உட்பட்ட முக்கிய கோயில்களில் வருகிற 1.6.2015 அன்று சிறப்பு பூஜைகள் செய்திட உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ள செயற்பொறியாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பூஜைகள் மேற்கொள்ளப்பட்ட விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு 2.6.2015 அன்று காலை 10 மணிக்குள் மின்னஞ்சல் மூலம் தெரிவித்திட வேண்டும்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுத் துறையே இப்படி பொறியாளர்களை பூஜை போடும் வேலைகளுக்கு பணிப்பது, தமிழ்நாட்டுக்கே தலைகுனிவாகும். நீர்வளத் துறை பொறியாளராக இருப்பவர் ‘இந்து’வாகவும், ‘பூஜை’ சடங்குகளில் நம்பிக்கையுள்ளவராகவும் இருக்க வேண்டும் என்பதை ஒரு நிபந்தனையாகவே இந்த ஆட்சி அறிவித்தாலும் வியப்பதற்கு இல்லை. ‘இந்து’ மதத்தைத் தவிர, வேறு மதத்தைச் சார்ந்தவர்கள் எவரும் பொறியாளராக பணியாற்ற முடியாது என்பதும் இந்த சுற்றறிக்கை வழியாக பொதுப் பணித்துறை சுட்டிக் காட்டியிருக்கிறது. கருநாடகம் காவிரி தண்ணீரைத் திறந்து விடுவதற்கும் இதேபோல் பூஜைகள் செய்யலாமே! உச்சநீதிமன்றத்தின் படிக்கட்டுகளை ஏறியிருக்க வேண்டாமே!

இதேபோல் கருநாடக அரசும் தமிழ்நாட்டுக்கு காவிரி நீரைத் திறந்து விடாமல், தங்கள் மாநிலத்தின் புதிய திட்டங்களுக்கே பயன்படுத்த சிறப்பு பூஜைகள் நடத்த உத்தரவிட்டால் அப்போது, ‘பகவான்’ தமிழ்நாட்டின் பக்கம் நிற்பாரா? அல்லது கருநாடகத்தின் பக்கம் நிற்பாரா? கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் கடும் மின்வெட்டு நிலவியபோது இதேபோல் மின்சாரம் தாராளமாகக் கிடைக்க தமிழக மின் வாரியம், கோயில்களில் சிறப்பு பூஜைகளை ஏற்பாடு செய்திருக்கலாமே! ‘அம்மா’வின் சொத்து குவிப்பு வழக்கிலிருந்து விடுதலை பெற மொட்டை அடிப்பது, மண்சோறு சாப்பிடுவது, யாகம் நடத்துவது எல்லாம் நடந்து முடிந்த பிறகும் வழக்கு உச்சநீதிமன்றத்தின் மேல்முறையீட்டுக்குப் போவதை எந்தப் ‘பகவானாலும்’ தடுக்க முடியவில்லையே! அதனால் என்ன? உச்சநீதிமன்றத்தில் ‘அம்மா’ விடுதலை பெற அடுத்தகட்ட பூஜைகள், யாகங்கள் தொடங்கினால் போச்சு என்று கூறுவார்கள் போலிருக்கிறது!

இதற்கு முன் இப்படி ஒரு சுற்றறிக்கை வந்தது இல்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். இப்போதாவது கோடையில் மழை பெய்திருக்கிறது. கடந்த ஆண்டு மழையே இல்லை. அப்போது இப்படி சுற்றறிக்கைகள் வரவில்லை. இப்போது ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர் ஆனதற்காக, அணை நீர் மட்டங்களின் பெயரில் இப்படி ஒரு சுற்றறிக்கை வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. ஜெயலலிதா, கருநாடக சிறையில் இருந்தபோது ஆயுத பூஜை வந்தது. அப்போது அரசு அலுவலகங்களில் ஆயுத பூஜைகள் கொண்டாடுவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி ஆயுத பூஜையும் நடக்கவில்லை. இந்த பூஜைகளுக்கு எந்த நிதியிலிருந்து செலவு செய்யப்படும் என்பது குறித்தும் விளக்கம் இல்லை. அதிகாரிகள் தங்களின் 10 சதவீதத்துக்கு உட்பட்ட சொத்துக் குவிப்பு பணத்திலிருந்து செலவு செய்வார்கள் போலும்!

## பொதுக் கூட்ட மேடையில் மாநாடுபோல் நடந்தது

# இந்துமதி–நிர்மல் குமார் ஜாதி தாலி மறுப்பு மணவிழா




கழகத் தோழர்கள் நிர்மல்குமார்-இந்துமதி ஆகியோரின் ஜாதி-சடங்கு மறுப்பு திருமண விழா தாலியின்றி, கிணத்துக்கடவுவில் மே 17 அன்று பொதுக்கூட்ட மேடையில் நடந்தது. இந்த புரட்சிகர மணவிழாவுக்கு கழகத் தோழர்கள் ஏராளமாக திரண்டிருந்தனர். பொதுக் கூட்ட மேடையில் திருமணம் நடத்துவதற்கு காவல் துறை அனுமதி மறுத்தது. உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து அனுமதி பெற்று இந்தப் புரட்சிகர மணவிழா நடந்தது, இதன் மற்றொரு சிறப்பாகும். மணவிழா நிகழ்வு பற்றிய செய்தித் தொகுப்பு:

தோழர்கள் இந்துமதி-நிர்மல் குமார் ஆகியோரின் ஜாதி-தாலி-சடங்கு மறுப்பு திருமண விழா, மடத்துக்குளம் வெ.ஜோதி, திராவிடர் வாழ்வியல் பண்பாட்டு உறுதி மொழியை வாசிக்க, தோழர்களோடு பொது மக்களும் இணைந்து உறுதியேற்றனர். விழாவிற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்றிட, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர் ரஞ்சிதா வரவேற்புரையாற்றிட, பொள்ளாச்சி மாவட்ட கழகத் தலைவர் விஜயராகவன், சட்ட எரிப்புப் போராளி ஆனைமலை ஏ.கே. ஆறுமுகம் அவர்களை அறிமுகப்படுத்தினர். தொடர்ந்து காவல்துறை ஏற்படுத்திய தடைகள் குறித்தும் வழக்கறிஞர்களின் முனைப்பான பணியின் காரணமாக அனுமதி பெற்றது குறித்தும், தந்தை பெரியாரின் பெரும் பணி காரணமாக திராவிடர்கள் பெற்ற கல்வி, வேலைவாய்ப்பு, சமூக நீதி ஆகியவற்றை பிற மாநிலங்களைவிட தமிழகம் முன்னணியில் இருப்பது குறித்தும் பேசினார். முனைவர் ஆ.புரட்சிக் கொடி, மருத்துவர் பெரியார் செல்வி, பூங்குழலி, தமிழ்நாடு அறிவியல் மன்றம் வீ.சிவகாமி ஆகியோர் வாழ்த்தி உரையாற்றினர்.

மணமகள் இந்துமதி - இசை ஆசிரியர் ஆவார். ‘பெண்ணே பெண்ணே போராடு’ என்ற பாடலை உணர்ச்சிப்பூர்வமாகப் பாடினார். தடையை நீக்க உயர்நீதிமன்றத்தில் வாதாடிய வழக்கறிஞர் ஆர்.திருமூர்த்தி மணமக்களை வாழ்த்திப் பேசினார். வழக்கறிஞருக்கு பொள்ளாச்சி மாவட்டக் கழகத்தின் சார்பில் ‘பெரியார்-சுயமரியாதை-சமதர்மம்’ நூல் மற்றும் ஆங்கில நூல் ஒன்றும் நிகழ்வின் நினைவாக வழங்கப்பட்டது.

சென்னிமலை ஒட்டப்பாறை பகுதியைச் சேர்ந்த இணையர் ஜோதிமணி-தேவராஜ் ஆகியோரின் மகள் கவிப்பிரியாவுக்கும், ஈரோடு தெற்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளரும், சென்னிமலை பசுவபட்டி திருவள்ளுவர் நகரைச் சார்ந்த இணையர் செல்வராஜ்-பழனியம்மாள் ஆகியோரது மகன் இசைக்கதிர் ஆகியோரின் வாழ்க்கைத் துணையேற்பு மேட்டூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி இல்லத்தில், கடந்த 7.5.2015 அன்று கழகத் தோழர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இவ்வாழ்க்கைத் துணையேற்பை இந்த மேடையிலேயே கொளத்தூர் மணி அறிவித்து, இணையர்கள் கவிப்பிரியா-இசைக்கதிர் ஆகியோரை பொது மக்களுக்கு அறிமுகப் படுத்தினார். இணையர்கள் நிகழ்வின் நினைவாக கழக வளர்ச்சிக்கு ரூ.5000 நன்கொடையாக கழகத் தலைவரிடம் வழங்கினர்.

திருப்பூர் மாவட்டச் செயலாளர் முகில்ராசு-அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் வீ. சிவகாமி ஆகியோரது மகள் கனல்மதியின் பிறந்த நாளை முன்னிட்டும், இணையேற்பு விழா மகிழ்வுக்காகவும் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தனர்.

பின்னர் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இணையர்களுக்கு உறுதி மொழியை ஏற்கச் செய்து விளக்கமாக உரையாற்றினார். மணமக்கள் மாலை அணிவித்துக் கொள்ளாமல் கைகுலுக்கிக் கொண்டனர்.

மணவிழாவின் தொடக்கத்தில், ‘காட்டாறு’ மாத இதழுக்கான 1117 சந்தாக்களுக்காக திரட்டப்பட்ட ரூ.2,23,400/-ஐ கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் கொளத்தூர் குமார், தோழர்களுடன் வழங்கினார்.

சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த அ.ப.சிவா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். மணமக்கள் சார்பில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ ஏட்டுக்கு ரூ.1000/-மும், ‘காட்டாறு’ இதழுக்கு ரூ.1000/-மும் நன்கொடை வழங்கப்பட்டது.

## அம்பேத்கரை திரிக்கும் அர்ஜுன் சம்பத் : விவாதம் நடத்த நேரில் அழைப்பு

அம்பேத்கர் கருத்துகளை சிதைத்துப் பேசிவரும் இந்து மக்கள் கட்சித் தலைவர் அர்ஜுன் சம்பத்தை ஒரே மேடையில் விவாதிக்க கோவை சமூகநீதி இயக்கத் தோழர்கள் நேரில் சென்று அழைத்துள்ளனர். ‘இந்துவாகப் பிறந்தேன்; ஆனால் இந்துவாக சாக மாட்டேன்’ என்று அறிவித்து புத்த மார்க்கத்தைத் தழுவிய அம்பேத்கரை இந்துக்களின் ஆதரவாளராக பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் பேசி வருகிறார்கள். இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த அர்ஜுன் சம்பத் என்பவரும் இதேபோல் பேசி வருவதால் கடந்த ஜுன் முதல் தேதி கோவையில் அவரது இல்லத்தில் கோவை சமூக நீதி அமைப்பைச் சார்ந்த தோழர்கள் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் தலைமையில் நேரில் சந்தித்தனர். மத்திய அரசின் ‘அம்பேத்கர் பவுன்டேஷன்’ வெளியிட்ட அம்பேத்கர் பேச்சு-எழுத்துக்கள் அடங்கிய 8ஆவது தொகுதியை அர்ஜுன் சம்பத்திடம் கொடுத்து அதை படித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொண்டனர். அம்பேத்கர் இந்துக்களின் ஆதரவாளர் என்று தொடர்ந்து உண்மைக்கு மாறாக பேசி வரும் அவரிடம் இது குறித்து நேரில் தங்களோடு விவாதிக்க நாள் குறித்துத் தருமாறும் கேட்டுக் கொண்டனர்.

விவாதிக்க அர்ஜுன் சம்பத் வருவாரா?

## திருவாரூர் நூல் வெளியீட்டு விழாவில் கொளத்தூர் மணி பேச்சு

# சத்திய மூர்த்தி அய்யரின் ஜாதி வெறிக்கு சான்றுகள்!

*தோழர் கவி தொகுத்துள்ள "மலாயா தமிழ் முன்னோடிகளும் பெரியார் வருகையும்" நூல் வெளியீட்டு விழா 8.5.2015 அன்று திருவாரூர் எத்திராஜ் திருமண மண்டபத்தில் முக்கூடல் அமைப்பின் சார்பில் நடைபெற்றது. நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட, முதல் படியை நீதிக்கட்சித் தலைவர் சர். ஏ.டி. பன்னீர்செல்வம் பேரன் மார்டின் செல்வம், டாடாஸ் இரவி, பசு. கவுதமன், த.பரமசிவம், கோவி. லெனின் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். 'நக்கீரன்' முதன்மை ஆசிரியர் கோவி. லெனின் திறனாய்வு செய்தார். நூலாசிரியர் கவி ஏற்புரை வழங்கினார்.*

*நூலை வெளியிட்டு கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி.*

பாரதிதாசன் திராவிட நாடு கேட்டு, பின்பு பெரியாருக்கு எதிராக தமிழ்நாடு என்று மாற்றிக் கொண்டார் என்று சிலர் சொல்கிறார்கள். பெரியாரையே அவர் எதிர்த்தார் என்கிறார்கள். பாரதிதாசன் எப்போது மாற்றிக் கொண்டார் என்று வரலாற்றைப் படித்துப் பார்த்தால் தெரியும். எப்போது பெரியார் 1956இல் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்று பெரியார் சொன்னாரோ அப்போது பாரதிதாசனும் மாற்றிக் கொண்டார்.

பெரியார் திராவிட நாட்டைக் கைவிட்டு, 'தமிழ்நாடு' என்ற நிலைக்கு வந்த பிறகுதான், புரட்சிக் கவிஞரும் மாற்றிச் சொல்கிறார். 1956 பதிப்புக்குப் பிந்தைய 'குயில்' இதழ்களிலெல்லாம் தமிழ்நாடு என்று மாற்றினார். அவ்வளவுதான். ஆனால், இதை வைத்துக் கொண்டு இவர்கள் ஏதோ புதிய கண்டுபிடிப்பை செய்ததுபோல் பேசிக் கொண்டு திரிகிறார்கள். பெரியாரை குறை சொல்பவர்கள் எல்லாம் அவர்கள் ஏதோ புலனாய்வு செய்து கண்டுபிடித்ததாக சொல்ல முடியாது. பெரியாரே எழுதி வைத்ததை வைத்துத்தான் சொல்கிறார்கள். ஒளிவு மறைவு இல்லாத தலைவர் பெரியார்.

"பெரியார் தன்னை கன்னட பலிஜா நாயுடு என்று சொல்லிக் கொண்டார்" என்று ஒரு பக்கம் பேசுகிறார்கள். ஆமாம் சொன்னார். எப்போது சொன்னார்? 1926ஆம் ஆண்டு, 'விதவா விவாக விளக்கம்' என்ற நூலை, திருசிரபுரம் சி.பி. இராஜ கோபால் நாயுடு என்பவர் எழுதியிருக்கிறார். அதற்கு மதிப்புரையை பெரியார் எழுதுகிறார். அப்படி எழுதும்போதுதான் தன் வீட்டில் தன் தங்கை மகளுக்கு மறுமணம் செய்து வைத்ததை எழுது கிறார். அப்போது எழுதும்போது சொல்கிறார், "நான் இந்த ஜாதியில் பிறந்தவன். எங்கள் ஜாதியில் மறுமணம் செய்து வைக்கும் வழக்கம் இல்லை" என்று சொல்லிவிட்டு சொல்கிறார் - பெருமைக்காகச் சொல்லவில்லை. அவர்கள் வைத்திருந்த பழக்கத்தை முறியடித்தேன், உடைத்தேன் என்று சொல்வதற்காகத் தான் சொல்கிறாரே தவிர, தான் பெருமைமிக்க ஜாதியைச் சார்ந்தவன் என்பதற்காக சொல்லவில்லை. இந்த ஒரு இடத்தை வைத்துக் கொண்டு சொல்கிறார்கள், அவர் தன் ஜாதியை பெருமையாகச் சொல்லிக் கொண்டார் என்று.

இந்த நூலைப் பார்க்கிறபோது சில செய்திகளை நான் சொல்லிவிட வேண்டும். எல்லாவற்றையும் நான் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. ஒரு செய்தி, பார்ப்பனர்கள் ஆணவம் மிக்கவர்களாக இருந்தார்கள் என்பதற்கு ஒரு செய்தி இதில் பதிவாகியுள்ளது.

காங்கிரஸ் தலைவர் சத்தியமூர்த்தி அய்யர் ஒரு தெருவில் குடியிருக்கிறார். அந்தத் தெருவுக்குப் பெயர் தணிகாசலம் செட்டித் தெரு. அந்தத் தெருவில் குடியிருக்க அவருக்கு விருப்பமில்லை. ஏனென்றால், ஒரு செட்டியின் பெயரால் இருக்கும் தெருவில் நான் குடியிருப்பதா என்பது அவரது நோக்கம். இவர் இரங்கசாமி அய்யங்கார் தெரு என்று மாற்ற முயற்சி செய்கிறார். ஏனென்றால் சத்தியமூர்த்தி அய்யர் மேயராக வேறு இருக்கிறார். தனது மேயர் பதவியைப் பயன்படுத்தி, தனது தெருவின் பெயரை மாற்ற முயற்சிக்கிறார். அதை பெரியார் இயக்கம் முறியடித்தது என்பது வேறு.

ஆனால், இது ஏதோ பெயர் மட்டுமல்ல, அவரது வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக சில வார்த்தைகளை சொல்லிவிடுகிறேன். தணிகாசலம் செட்டியார் என்பவர் நீதிக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வருகிறார். என்ன தீர்மானம் என்றால், "பார்ப்பனரல்லாதார் எண்ணிக்கை, அவர்களுடைய மக்கள் தொகைக்கு சமவிகிதமாக வருகிற வரை பார்ப்பனர்களை அரசு பதவிகளில் சேர்க்கக் கூடாது" என்று சட்ட மன்றத்தில் தீர்மானம் கொண்டு வருகிறார். வழிமொழிந்து பேசிய உள்துறை அமைச்சர், "அதெல்லாம் வேண்டாம்; கூடியவரை பார்ப்பனரல்லாதார் வருகின்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று முடித்துக் கொள்கிறார். அந்த கோபம் சத்தியமூர்த்தி அய்யருக்கு.

சத்தியமூர்த்தி அய்யர் பெயர் சூட்ட விரும்பிய ரெங்கசாமி அய்யங்கார் யார் என்பதையும் சொல்லிவிட வேண்டும். இப்போதைய 'இந்து' பத்திரிகையின் முன்னோடி அவர். மத்திய சட்டமன்றத்தின் உறுப்பினர். தற்போது நாடாளுமன்றம். அப்போது மத்திய சட்டமன்றம். அங்கே போகிறார். அங்கு ஒரே ஒரு பார்ப்பனரல்லாதார்தான் உறுப்பினராக இருக்கிறார். அவர் ஆர்.கே. சண்முகம் செட்டியார். பதவிக்காக நீதிக்கட்சியிலிருந்து சுயராஜ்ய கட்சிக்குப் போய் பதவியைப் பெற்றவர். பதவிக்காகக் கட்சி மாறுவது அப்போதும் இருந்திருக்கிறது. நம்ம ஆட்களும் செய்திருக்கிறார்கள். அப்போது ரங்கசாமி அய்யங்கார் ஒரு கேள்வியை முன் வைக்கிறார், "சட்டமன்றத்தில். தமிழ்நாட்டில் சம உரிமைக்கு எதிராக சில சாதிகளுக்கு மட்டும் அதிக வாய்ப்பு கொடுக்கிற சட்டவிரோத செயல் நடக்கிறது. அதை இந்த அமைச்சர் நீக்குவாரா" என்று வெள்ளைக்கார உள்துறை அமைச்சரைப் பார்த்துக் கேட்கிறார். உள்துறை அமைச்சர் சொல்கிறார், "எது சமத்துவத்திற்கு எதிராக இருந்தாலும் அதை நீக்கிவிடுவோம்" என்கிறார். அய்யங்கார் ஏன் அப்படி கூறினார்? ஒரே நம்பிக்கை. சபையில் இருப்பது ஒரே ஒரு ஆள் பார்ப்பனரல்லாதவர் ஆர்.கே. சண்முகம் செட்டியார். அவரும் நம் கட்சியைச் சேர்ந்தவர் என்று நினைத்துக் கொண்டு பேசுகிறார். ஆர்.கே. சண்முகம் செட்டியார் வெள்ளைக்கார உள்துறை அமைச்சரைப் பார்த்துக் கூறுகிறார், "அது வாய்ப்பு பறிக்கப்பட்டவர்களுக்கு வாய்ப்பில்லாமல் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கு கொடுக்கிற முறை" என்று அவர் பேசத் தொடங்கியவுடனேயே உள்துறை அமைச்சர் குறுக்கிட்டு, "புரிந்து கொண்டேன். என் பதிலை திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்" என்று சொல்கிறார். அதனால்தான் இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்ட தணிகாச்சலம் செட்டியார் தெருவில் குடியிருக்க, சத்தியமூர்த்தி அய்யர் விரும்பவில்லை. இட ஒதுக்கீடு வேண்டாம் என்று நாடாளுமன்றத்தில் போய் பேசிய இரங்கசாமி அய்யங்கார் தெருவில் இருக்க வேண்டும். இதுதான் இந்த சத்தியமூர்த்தி அய்யர் ஆசை. அதுதான் பெயர் மாற்றத்தின் பின்னால் இருக்கிற வரலாறு.

இந்த சத்தியமூர்த்தி அய்யர் மேயராக இருந்தார் என்றால் எப்படி மேயராக இருந்தார்? தேர்தலில் நின்று வெற்றி பெற்றாரா? பெரும்பான்மையான காங்கிரஸ் உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தார்களா? என்றால் அதுவும் இல்லை. நீதிக்கட்சி பெரும்பான்மையாக இருந்தபோது, அதன் மேயராக இருந்த சர்.ஏ.இராமசாமி முதலியார் எல்லா வகுப்பினரும் மேயராக வரவேண்டும் என்ற காரணத்திற்காக ஆண்டுக்கொரு ஜாதியை சேர்ந்தவர் வருவதற்கான திட்டம் வகுக்கிறார். ஒவ்வொரு ஆண்டும் ஒரு மேயர். ஒவ்வொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அளிக்க வேண்டும். அது இஸ்லாமியர்களுக்கு, கிறித்துவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்றெல்லாம் பிரித்தளிக்கிறார். அப்படிப் பார்க்கிறபோது நீதிக்கட்சி பெரும்பான்மைதான் ஒரு பார்ப்பனரை மேயராகத் தேர்ந்தெடுக்கிறது. அதனால் மேயரானவர், சத்தியமூர்த்தி அய்யர் தேர்தலில் வெற்றி பெற்று மேயரானவரில்லை.

அவர் மேயரானபோதுதான் 'வணக்கத்திற்குரிய மேயர்' (Worshipful) என்ற சொல்லை பயன்படுத்த வேண்டும் என்று அறிக்கை விட்டவர். அதற்கு முன்பு அந்த சொல் இல்லை. His Excellency என்று கேள்விபட்டிருக்கிறோம். 'வணக்கத்திற்குரிய' என்ற சொல்லை, தனக்கு வழங்க வேண்டும் என்று அவரே போட்டுக் கொண்டார், சத்தியமூர்த்தி அய்யர்.

தச்சாச்சாரி, கொல்லாச்சாரிகூட விசுவ கர்மப் பிரிவைச் சார்ந்தவர்கள், தங்கள் பெயருக்குப் பின்னால் ஆச்சாரி என்று போடக் கூடாது என்று இராஜகோபாலாச்சாரி ஒரு அரசாணை போட்டார். எதுக்கெல்லாம் சட்டம் போடுகிறார்கள்? அதுவும் முறியடிக்கப்பட்டுவிட்டது. திரும்பப் பெறப்பட்டது. அப்படிப்பட்ட சின்னச் சின்ன செயல்களையெல்லாம்கூட இந்த நூல் பதிவு செய்கிறது.

1929இல் பெரியார் மலாயா பயணம் போனதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். பயணத்தின் நோக்கைப் பற்றியெல்லாம் விரிவாக எழுதியிருக்கிறார். பெரியார் கிண்டலாகச் சொல்கிறார். மூடநம்பிக்கைப் பற்றியெல்லாம் சொல்கிறார்.

ஆங்கில அதிகாரிகள், பெரியார் பயணித்த கப்பலை நோக்கி படகில் வருகிறபோது, "உள்ளத்தில் பதட்டமும் முகத்தில் மட்டும் சிரிப்பையும் காட்டிக் கொண்டிருந்தோம்" என்று பெரியார் எழுதுகிறார். 'உள்ளத்தில் பதட்டம். எங்கடா திருப்பி அனுப்பி விடுவார்களோ என்று. ஆனால் முகத்தில் மட்டும் சிரிப்பைக் காட்டி, அவர்களை வரவேற்றோம்' என்று எழுதுவார். அதேபோல், பெரியார் கப்பலில் ஏறி போனபோது "எப்போதும் போல் இல்லாமல் கடல் அமைதியாக இருந்தது. ஏரிபோல் இருந்தது. நீங்கள் வந்ததால்தான் கடல் அமைதியாக இருக்கிறதாம்" என்று பெரியாரைப் பார்த்து கும்பிட்டார்களாம். இந்த மூடநம்பிக்கையையும் பெரியார் சுட்டிக் காட்டுகிறார். அங்கே போனபோது 'பிள்ளை வரம்' கேட்க வந்தார்களாம்.

பெரியார் இன்னொரு இடத்தில் சொல்லுவார். வைக்கம் போராட்டத்தில் பெரியார் ஈடுபட்டபோது, திருவாங்கூர் சமஸ்தான அரசர் பெரியாரின் நண்பர். வடநாடு போகிற போதெல்லாம் கேரளாவிலிருந்து வரும்போது ஈரோட்டில் இறங்கி தொடர் வண்டி மாறவேண்டும். அப்போதெல்லாம் அரசர் பெரியார் வீட்டில் தங்கியிருந்துவிட்டு போவதுதான் வழக்கம். "சில மாதங்களுக்கு முன் போகும்போதுகூட அரசரும் அவரது பரிவாரங்களும் என்னுடைய வீட்டில் தங்கி இருந்த நட்பின் காரணமாக போராட வந்த எனக்கு வரவேற்புக் கொடுத்தார்கள். பெரியாருக்கு அன்பளிப்பாக மோதிரத்தையும் கொடுத்தனுப்பியிருக்கிறார். "மன்னிக்க வேண்டும். நான் போராட வந்திருக்கிறேன். என்னை விட்டு விடுங்கள் நான் போராட்டத்துக்கு செல்கிறேன். அவருக்கு நன்றியை சொல்லுங்கள்" என்று பெரியார் மறுத்து விடுகிறார். போராட்டம் நடக்கிறது. முதல்முறை பிடித்து ஒரு காவல் நிலையத்திலேயே ஒன்றரை மாதம் வைத்து விட்டுவிடுகிறார்கள். மீண்டும் போராட்டம் நடத்துகிறார். என்னடா தொல்லையா போச்சு என்று ஆறு மாதம் உள்ளே வைத்து விடுகிறார்கள். பெரியார் சிறைக்குள் இருந்தபோது, கூட இருந்தவர்கள் எல்லாம் அரசருக்கு யோசனை சொல்லுகிறார்கள். இவனைப் போன்ற எதிரிகளை வீழ்த்தியாக வேண்டும். எதிரிகளை அழிப்பதற்கு என்று ஒரு யாகம் இருக்கிறது. 'சத்துரு சம்ஹார யாகம்' நடத்தியாக வேண்டும் என்று யாகம் செய்கிறார்கள். பெரியாருக்கு எதிராக அரசரைக் காப்பாற்ற யாகம் நடந்தது; ஆனால், யாகத்தில் இருக்கும்போது அரசர் செத்து போய்விடுகிறார். அரசர் செத்தவுடன் ஜெயிலில் இருப்பவர்கள் எல்லாம் பேசுகிறார்களாம் - "பெரியார் இவரைவிட சக்தி வாய்ந்தவர். யாகத்தாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை. யாகத்தையே திருப்பிவிட்டார்" என்று. "எனக்கு மரியாதை மிகவும் கூடிவிட்டது. வந்தவர்களெல்லாம் வணக்கம் கூறி ஆசி கோர ஆரம்பித்து விட்டார்கள்" என்று பெரியார் எழுதியிருக்கிறார். அந்த வைக்கம் போராட்டத்துக்குப் போனபோதுகூட இந்த மூடநம்பிக்கைகள் அங்கு எதிரொலிக்கின்றன என்று பெரியார் சொல்கிறார்.

(தொடரும்)

DATE OF PUBLICATION 04.06.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# அய்.அய்.டி. முற்றுகை: 70 தோழர்கள் கைது

சென்னை அய்.அய்..டி.யில் மாணவர்கள் தொடங்கிய அம்பேத்கர்-பெரியார் சிந்தனை வட்டத்துக்கு அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகம் தடை போட்டுள்ளது. இது நாடு முழுதும் எதிர்ப்பு அலைகளை உருவாக்கியிருக்கிறது. ஊர் பேர் இல்லாமல் மத்திய மனித வளத் துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்ட மொட்டைக் கடிதத்தின் அடிப்படையில் அமைச்சகம் இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. துறை சார்ந்த அதிகாரி ஒருவர், அந்த மொட்டைக் கடிதத்தை இணைத்து சென்னை அய்.அய்.டி.க்கு அனுப்பி விளக்கம் கேட்டுள்ளார். கடிதம் வந்த அடுத்த சில நாட்களிலேயே சிந்தனை பேரவைக்கு அய்.அய்.டி. தடை போட்டுள்ளது. அய்.அய்.டி. பார்ப்பன நிர்வாகத்தின் இந்த மனுதர்மத்தைக் கண்டித்து, பா.ஜ.க., அ.இ.அ.தி.மு.க. தவிர அனைத்துக் கட்சிகளும், இயக்கங் களும் போராடி வருகின்றன. தடையை நீக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன.

சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் ஜூன் முதல் தேதி மாலை 4 மணியளவில் அய்.அய்.டி. முற்றுகைப் போராட்டம் அறிவிக்கப்பட்டது. போராட்டக் களமாக மாறி நிற்கும் ‘மத்திய கைலாஷ்’ அருகே கழகத் தோழர்கள் திரண்டனர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை தாங்கினார். மே 17 இயக்கம், இளந் தமிழர் இயக்கம், மார்க்சிய லெனினிய கட்சி (மக்கள் விடுதலை) அமைப்பு களைச் சார்ந்த தோழர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர்.

போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசினார். “அய்.அய்.டி. நிறுவனத்தில் ‘வந்தே மாதரம்’ மாணவர் வட்டம், ஜெய்ஹிந்த் மாணவர் வட்டம், ‘இராமாயண’ பிரச்சார வட்டம், வசிஷ்டர் வட்டம் என்று பல்வேறு மாணவர் வட்டங்கள் செயல்படு கின்றன. ஆனால், அம்பேத்கர், பெரியார் வட்டத்துக்கு மட்டும் தடை போடுகிறார்கள். இதே கல்வி வளாகங் களில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக பார்ப்பன உயர்ஜாதி மாணவர்கள் போராடினார்கள். அதற்கு நிர்வாகம் முழுமையாக ஒத்துழைக்கிறது. ஆனால், இடஒதுக்கீட்டுக்குப் போராடிய தலைவர்கள் பெயரை பயன்படுத்தினால் அவர்களால் ஏற்க முடியவில்லை. மோடி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு சென்னை அய்.அய்.டி. நிர்வாகமே, காங்கிரஸ் ஆட்சியின் கொள்கைகளை எதிர்த்து ஆர்.எஸ்.எஸ். பிரமுகர் ஆடிட்டர் குருமூர்த்தி, கிரன்பேடி, அரவிந்த் நீலகண்டன் போன்றவர்களை சிறப்பு விருந்தினர்களாக அழைத்து, மோடிக்கு ஆதரவாக பேச வைத்தது. சில ஆண்டுகளுக்கு முன், ‘சோதிடம் ஒரு அறிவியலே’ என்று ஒரு சோதிடரை அழைத்து வந்து தொடர் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தது. மோடியின் நில ஆக்கிரமிப்புச் சட்டம்; பன்னாட்டு நிறுவனங்களுக்கு கதவு திறந்து விடும் கொள்கைகள்; மக்கள் பிரச்சினை களாகும். இவற்றை விமர்சிக்கும் உரிமை, மாணவர்களுக்குக் கிடையாதா? அய்.அய்.டி. துறைகளில் பேராசிரியர் பெயர்களை இந்தியில் எழுதுவதாகக் கூறி, சமஸ்கிருத இந்தியில் எழுதியிருக்கிறார்கள். இந்தி தெரிந்த மாணவர்களுக்கே அதைப் படிக்கத் தெரியவில்லை. இவையெல்லாம் பார்ப்பனியத் திணிப்பு அரசியல் அல்லவா?” என்று கேட்டார்.




தொடர்ந்து அய்.அய்.டி.யை முற்றுகையிட முழக்கங்களுடன் புறப்பட்ட 70 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இராஜா அண்ணா மலைபுரத்திலுள்ள சமூகநலக் கூடத் தில் அனைவரும் வைக்கப்பட்டனர். அங்கு தோழர்கள் நாத்திகன், இளைய ராஜா - பெண்ணுரிமை ஜாதி ஒழிப்புப் பாடல்களைப் பாடினர். தோழர்கள் செந்தில் (இளந்தமிழர்), அருண்ஷோரி (மக்கள் கட்சி), விநாயகம், பேராசிரியர் சரசுவதி (பி.யு.சி.எல்.), வழக்கறிஞர்கள் திருமூர்த்தி, துரை.அ ருண், அன்பு. தனசேகரன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உள்ளிட்ட தோழர்கள் பலரும் அம்பேத்கர்-பெரியார் கொள்கை சக்திகள் இணைந்து நிற்க வேண்டிய களத்தை பார்ப்பனிய சக்திகள் உருவாக்கியிருப்பதை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை விளக்கிப் பேசினார்கள். 7 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கழகப் பொறுப்பாளர்கள் தபசி. குமரன், பிரகாசு, அருண், சுகுமார், ஜான் மண்டேலா, ஏசு, தெட்சிணா மூர்த்தி, விஜயன், மாரிமுத்து, மனோகர், செந்தில், மாணவர்கழக அமைப்பாளர் பாரி. சிவக்குமார், அசுரன், காஞ்சி மாவட்டக் கழகப் பொறுப்பாளர் தினேஷ், செங் குட்டுவன் உள்ளிட்ட 70 தோழர்கள் கைதானார்கள்.

## முற்றுகைப் போராட்ட முழக்கங்கள்

அய்.அய்.டி. நிறுவனமா?
ஆர்.எஸ்.எஸ். மடமா?

இருக்குது, இருக்குது
அய்.அய்.டி.யில் இருக்குது!
‘ஜெய்ஹிந்த்’ வட்டம் இருக்குது
இருக்குது; இருக்குது!
‘இராமாயண’ வட்டம் இருக்குது
இருக்குது; இருக்குது!
‘வந்தே மாதரம்’ வட்டம் இருக்குது
இருக்குது; இருக்குது!
‘வசிஷ்டர்’ வட்டம் இருக்குது
இருக்குது; இருக்குது!
அய்.அய்.டி.யில் இருக்குது!
மறுக்குது; மறுக்குது
அம்பேத்கர் வட்டத்தை மறுக்குது!
பெரியார் வட்டத்தை மறுக்குது!

சாகிறாரே; சாகிறாரே!
தலித் மாணவர் சாகிறாரே!
அய்.அய்.டி. விடுதிகளில்
தூக்குப் போட்டு சாகிறாரே!
ஜாதி இழிவால் சாகிறாரே!
பார்ப்பனக் கொடுமையால்
சாகிறாரே! சாகிறாரே!
நீதியா? நீதியா? இது
சமூக நீதியா? நீதியா?

கொள்ளை போகுது;
கொள்ளை போகுது!
மக்கள் பணம் கொள்ளை போகுது!
கோடிகோடியாய் போகுது!
மக்கள் பணத்தில் படிக்கிறான்
படிச்சவுடன் பறக்கிறான்
வெளிநாட்டுக்கு ஓடுறான்!
நியாயமா? நியாயமா? இது
நியாயமா? நியாயமா?

**அடுத்த இதழ்...**

**மோடியின் ஓராண்டு ‘வேதனைகள்’ சிறப்பு இதழாக வருகிறது!**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

படுக்கையில் படுத்தல், முதுகில் அலகு குத்தி ‘பறவைக் காவடி’ போல் தொங்குதல் என மூடநம்பிக்கையை தோலுரிக்கும் நிகழ்ச்சிகள் பேரணியில் இடம் பெற்றன. ஒரு மணி நேரம் நடந்த பேரணியை வழியின் இருபகுதியிலும் பொது மக்கள் திரண்டு பார்த்தனர். பேரணி பொதுக் கூட்ட மேடையை 6 மணியளவில் வந்தடைந்தது.




மேட்டூர் டி.கே.ஆர். குழுவினரின் பகுத்தறிவு, ஜாதி எதிர்ப்பு இசை நிகழ்ச்சி சிறப்புடன் நடந்தது. தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டக் கழகத் தலைவர் துரை. தாமோதரன், ‘மந்திரமல்ல, தந்திரமே’ நிகழ்ச்சிகளை நடத்தினார். பொதுக் கூட்டத்துக்கு புதுச்சாம்பள்ளி மூத்த கழகத் தோழர் க.சின்னையன் தலைமை தாங்கினார். தோழர் சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார். வழக்கறிஞர் திருமூர்த்தி, ‘நாத்திகமும் பெண்ணுரிமையும்’ என்ற தலைப் பிலும், வழக்கறிஞர் துரை. அருண், ‘நாத்திகமும் அறிவியலும்’ எனும் தலைப்பிலும், எழுத்தாளர் வே. மதிமாறன், ‘நாத்திகமும் சமூகநீதியும்’ எனும் தலைப்பிலும் உரையாற்றினர். நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பெங்களூரிலிருந்து குடியரசு கட்சியைச் சார்ந்த தோழர்களும், பகுத்தறிவாளர் அமைப்புகளை சார்ந்த தோழர்களும், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களும் 20 பேர் தனி வாகனங்களில் வந்திருந்தனர். பெங்களூர் பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசிரியர் டாக்டர் சமதா தேஷ்மானே, டாக்டர் வெங்கடசாமி, சுயமரியாதை மக்கள் விடுதலைக் கழகத் தலைவர் முளி. ஆஞ்சி நேயப்பா, தோழர்கள் ஜார்ஜ், நாகரத்தினம்மா ஆகியோரும் வந்திருந்து நாத்திகர் பேரணியில் பங்கேற்றனர். அவர்களின் சார்பில் முனைவர் வெங்கடசாமி ஆங்கிலத்தில் உரையாற்றினார். தொடர்ந்து பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் உரையாற்றினார். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றினார். தலைமைக் குழு உறுப்பினர் மேட்டூர் சக்தி நன்றி கூறினார். 200க்கும் மேற்பட்ட போலீசார் குவிக்கப்பட்டு, வீடுகளின் மாடிகளிலும் நிறுத்தப்பட்டதோடு, காவல்துறை மாவட்ட தலைமை அதிகாரிகளும் குவிந்திருந்தனர். எந்தவித சலசலப்பும் இன்றி, மக்கள் ஆதரவுடன் பேரணியும் பொதுக் கூட்டமும் அமைதியாக நடந்தது. இதுவே காவல்துறையின் கெடுபிடிகளுக்கான பதிலடியாக இருந்தது.

– **நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 04 June 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூன் 11, 2015 | புரட்சி 14 | முழக்கம் 22 | விலை: ரூ.3.00

**மோடியின் ஓராண்டு**

## கார்ப்பரேட் நலன்காக்கும் ஆட்சி

- கார்ப்பரேட் நலன்களுக்காகவே நிலங்களைக் கையகப்படுத்தும் சட்டத்தைக் கொண்டுவர மோடி அரசு துடிக்கிறது. ஏற்கெனவே சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்காகக் கைப்பற்றப்பட்ட நிலங்களில் பாதியளவுகூட பயன்படுத்தாமல் கிடக்கின்றன. இப்போது மேலும், நிலங்களைப் பறிக்க ஏன் துடிக்கிறார்கள்? மன்னர்கள் ஆட்சி காலங்களில் ‘பிராமணர்’களுக்கு நிலங்களை ‘தானமாக’ வழங்கி பெருமைப்பட்டார்கள். இப்போது கார்ப்பரேட்டு களுக்கு மக்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கி, ‘தானமாக’க் கொடுக்க அரசு துடிக்கிறது. பார்ப்பன ஆதிக்கத்தை வளர்க்கும் பனியாக்களுக்கும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும்தான் இப்போதும் நிலங்கள் கைமாறப் போகின்றன. ஆக, அன்று ‘சதுர்வேதி மங்களங்கள்’; இன்று நிலப் பறிப்புச் சட்டங்கள்!
- பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பனை செய்வதில் காங்கிரசுக்கு சற்றும் குறைந்தது அல்ல பா.ஜ.க. இரண்டு கட்சிகளின் ஆட்சிகளும் ஒரே பாதையில்தான் பயணிக்கின்றன. அரசு பொதுத் துறை நிறுவனமான நிலக்கரி நிறுவன பங்குகளை காங்கிரஸ், தனியாருக்கு விற்க முயன்றபோது, தமிழ்நாட்டில் தி.மு.க., அ.தி.மு.க உள்ளிட்ட அனைத்து கட்சிகளும் எதிர்த்தன. இப்போது, மோடி ஆட்சியில் ரூ.22,588 கோடி மதிப்புள்ள நெய்வேலி நிலக்கரி நிறுவன பங்குகள் தனியாருக்கு விற்கப்பட்டுள்ளன. இந்திய எஃகு நிறுவன பங்குகள் ரூ.1720 கோடியும், கிராமப்புற மின்மயம் நிறுவனத்தின் (ஆர்.இ.சி.) பங்குகள் ரூ.1610 கோடி அளவுக்கும் தனியாருக்கு விற்கப்பட்டுவிட்டன. குறுகிய காலத்தில் ரூ.25000 கோடிக்கான பங்குகள் விற்கப்பட்டுவிட்டன. இது தவிர 13 பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை ரூ.65000 கோடி அளவுக்கு இந்த ஆண்டில் விற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
- காப்பீட்டுத் துறையில் அன்னிய முதலீடு 26 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்துக்கு அதிகாரிக்கப்பட்டுள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் இந்த முயற்சி நடந்தபோது, பா.ஜ.க. கடுமையாக எதிர்த்தது. பா.ஜ.க. முன்னாள் அமைச்சர் யஷ்வந்த் சின்கா தலைமையில் ஒரு குழு அமைத்து, அறிக்கை தயாரித்து, காப்பீட்டுத் துறையை தனியாருக்கு திறந்து விடுவதால் உருவாகும் ஆபத்துகளை சுட்டிக்காட்டினர். இப்போது கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதரவோடு அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் அவர்கள் நலனுக்குத்தானே முன்னுரிமை தருவார்கள்?
- தொடர் வண்டித் துறையில் பல பணிகள் தனியாருக்கு திறந்து விடப்பட்டுவிட்டன. எதிர்காலத்தில் அரசும் தனியாரும் இணைந்து செயல்படப் போகிறார்களாம். அதற்குப் பெயர் பி.பி.பி. திட்டம் (பொது தனியார் கூட்டு). இத்திட்டத்தினால் இலாபம் தனியாருக்கு - நட்டம் அரசுக்கு என்பதே கடந்த கால அனுபவம்.
- 2014 ஜூலையில், 108 மருந்துகளின் விலையை அரசின் ‘கட்டுப்பாட்டு விலை’யின்கீழ் மோடி அரசு கொண்டு வந்தது. மருந்து தயாரிப்பு நிறுவனங்கள் இதை எதிர்த்து கூச்சலிட்டன, அவ்வளவுதான். மீண்டும் மருந்து விலைகள் உயர அனுமதி கிடைத்துவிட்டது. புற்று நோய்க்கு ‘நாட்கோ’ நிறுவனம் தயாரித்த மருந்தின் விலை ரூ.5900-லிருந்து ரூ.11,500 ஆனது. இதே நோய்க்கு நோவார்டிஸ் நிறுவனம் தயாரித்த மருந்து ரூ.8,500-லிருந்து ரூ.10,800-க்கும், இருதய நோய்க்கு ‘சனோபி’ நிறுவனம் தயாரித்த மருந்து ரூ.147-லிருந்து ரூ.1618-க்கும், நோய்க் கொல்லிக்கு சிம்லா நிறுவனம் தயாரித்த மருந்து ரூ..250-லிருந்து ரூ.399-க்கும், சர்க்கரை நோய்க்கு ‘சனோபி’ நிறுவனத்தின் மருந்து ரூ.98லிருந்து ரூ.208க்கும், நாய்க்கடிக்கு இதே நிறுவனத்தின் தயாரிப்பு ரூ. 2670-லிருந்து ரூ. 7000-க்கும், இரத்த அழுத்தத்துக்கு ‘ஆஸ்டிரா’ நிறுவனம் தயாரித்த மருந்து ரூ.78-லிருந்து ரூ.164-க்கும் உயர்ந்து விட்டன.

# அதிகார மமதையில் ஆணவக் குரல்கள்!

வானத்தை வில்லாக்குவேன்; மணலைக் கயிறாக்குவேன் என்ற தொனியில் மக்களிடம் தேர்தலுக்கு முன்பு மோடி பேசினார். ஆட்சியைப் பிடித்தது பா.ஜ.க. அதிகாரத்துக்கு வந்தவுடனே நாட்டை பார்ப்பன மயமாக்க வேகவேகமான அறிவிப்புகள் வரத் தொடங்கின. இவற்றிற்கு எதிர்பாராத இடங்களிலிருந்துகூட எதிர்ப்புகள் வரத் தொடங்கின. சில அறிவிப்புகளை பின் வாங்கிக் கொண்டார்கள். சிலவற்றை நடைமுறைப்படுத்துகிறார்கள். அவ்வப்போது அதிகார மமதையில் பார்ப்பன ஆணவக் குரல்கள் காதைத் துளைத்துக் கொண்டே இருக்கின்றன. அது குறித்த ஓர் தொகுப்பு இது:

- மோடி பிரதமரானவுடன் இந்தி மொழியில் மட்டுமே பேசுவார் என்று அரசு அறிவிப்பு வந்தது.
- சமூக வலை தளங்களில் மத்திய அரசு அதிகாரிகள் இந்தியிலேயே கருத்துகளைப் பதிவிட வேண்டும் என்று அரசு அறிவித்தது. எதிர்ப்பு வந்தவுடன் இந்தி பேசாத மாநிலங்களுக்கு இது கட்டாயமில்லை என்று குரலை மாற்றிக் கொண்டார்கள்.

**மோடியின் ஓராண்டு**



- தமிழ் நாளேடுகளில் தொடர் வண்டித் துறை இந்தியில் மட்டுமே விளம்பரத்தை வெளியிட்டது (8.7.2014 ‘தினத்தந்தி). அதே நாளில் மத்திய அரசின் வருமான வரித்துறையின் விளம்பரம் தமிழில் வந்தது. (அரசுக்கு வரக்கூடிய வருமானம் என்பதால் - தமிழில்)
- தொடர்வண்டி நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு ஒரு சில நாள்கள் முன் பயணிகள் கட்டணத்தை 14.2 சதவீதமும், சரக்குக் கட்டணத்தை 6.5 சதவீதமும் உயர்த்தி விட்டார்கள்.
- மத்திய அரசின் சி.பி.எஸ்.ஈ. பள்ளிகளில் ‘சமஸ்கிருத வாரம்’ கொண்டாடி, சமஸ்கிருதத்தில் போட்டிகள், விழாக்கள் நடத்த மத்திய மனித வளத்துறை அமைச்சகம் சுற்றறிக்கை அனுப்பியது.
- அனைத்து மாநிலங்களிலுள்ள பள்ளிகளிலும் சமஸ்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்று பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஓம்பிரகாஷ் என்பவர் நாடாளுமன்றத்தில் தனியார் மசோதா ஒன்றை தாக்கல் செய்தார். செயல்படுத்தாத பள்ளிகளின் அங்கீகாரத்தை நீக்க வேண்டும் என்று அம்மசோதா கூறியது. (ஜூன் 7, 2014)
- நாடு முழுதும் பசு, எருது, காளைகளை வெட்டத் தடை செய்யவும், மாட்டுக்கறி விற்றால் 10 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கவும் வலியுறுத்தும் தனி நபர் மசோதாவை பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் யோகி ஆதித்யா நாத் தாக்கல் செய்தார். (ஜூன் 25, 2014)
- இங்கிலாந்து நாட்டுக்காரர்கள் இங்கிலாந்துக்காரர்களாக தங்களைக் கூறுவதுபோல், ஜெர்மன் நாட்டுக்காரர்கள் அனைவரும் ஜெர்மானியர்கள் என்று கூறுவதுபோல், அமெரிக்காவில் பிறந்தவர்கள் அனைவரும் அமெரிக்கர்கள் என்று கூறுவதுபோல், இந்துஸ்தானத்திலேயே பிறந்த அனைவருமே தங்களை இந்துக்கள் என்று ஏன் கூறக் கூடாது என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் பேசினார். (இந்தியாவில் பிறந்த அனைவரும் இந்தியர்கள் என்று கூற வேண்டும் என்று இந்த ‘ஒரிஜினல் தேச பக்தர்கள்’ கூறுவதற்குத் தயாராக இல்லை)
- ‘இந்து’ நாடாக இருந்து, பிறகு மதச்சார்பற்ற நாடாக மாறிய, நேபாளத்துக்கு மோடி, காவி உடை, சந்தனப் பொட்டு, உருத்திராட்ச மாலையுடன் அங்குள்ள ‘பசுபதி நாதன்’ கோயிலுக்குப் போனார். புதிய அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் அந்நாட்டின் நாடாளுமன்றத்தில் பேசும் போது சட்டத்தை வேதங்கள், உபநிஷத்து களுக்கு இணையாக மதிக்க வேண்டும் என்று மதக் கண்ணோட்டத்தையே முன்வைத்தார்.
- ‘ஆசிரியர் நாளை’ பள்ளிகளில் ‘குரு உத்சவ்’ நாளாக வேதகால பண்பாட்டின் வழி நடத்திட மத்திய மனித வளத் துறை அமைச்சகம் சுற்றறிக்கை அனுப்பியது. எதிர்ப்பு வந்தவுடன் ஆசிரியர் நாளை அப்படி மாற்றக் கூறவில்லை; ‘குருஉத்சவ்’ பெயரில் கட்டுரைப் போட்டிகள் நடத்துவதே நோக்கம் என்று நிலையை மாற்றிக் கொண்டார்கள்.
- நாக்பூரில், ஆர்.எஸ்.எஸ். நடத்திய தசரா விழாவையும் அதன் தலைவர் மோகன் பகவத் உரையையும் அரசு தொலைக்காட்சி நிறுவனமான ‘தூர்தர்ஷன்’ நேரடி ஒளிபரப்பு செய்தது. பகவத் தனது உரை முழுவதிலும், சுமார் 60 முறை ‘இந்தியா’ என்ற சொல்லைத் தவிர்த்து, அதற்குப் பதிலாக ‘பாரத்’ என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்தினார்.
- இந்தியாவின் தேசிய நூலாக ‘இந்து’ மத நூலான ‘பகவத் கீதை’ அறிவிக்கப்படும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் டெல்லியில் பேசினார் (டிச.7, 2014).
- அகில இந்திய வானொலி, தமிழ் ஒலிபரப்பில் 7 மணி நேரம் இந்தி நிகழ்ச்சிகள், இந்தி திரைப்பாடல்களை ஒலி பரப்பி வருகிறது.
- மோடி போலி அறிவியலை, அறிவியல் என்று அம்பானி தொடங்கிய மருத்துவ மனை மற்றும் ஆய்வு மய்யத்தில் பேசினார். புராண காலத்தில் கர்ணன், தனது தாயின் கர்ப்பப் பையிலிருந்து பிறக்கவில்லை. இது மரபணு விஞ்ஞானம். வினாயகன் தலையில் யானைத் தலை ஒட்டியிருப்பது, பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை, என்றெல்லாம் மோடி பேசியதை, விஞ்ஞானிகள் எள்ளி நகையாடினர்.

## அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத் தடை நீங்கியது

சென்னை அய்.அய்.டி.யில், மாணவர்களின் அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத்துக்கான தடையை நிர்வாகம் நீக்கிவிட்டது. தமிழ்நாட்டில் உருவான கடும் எதிர்ப்புகளுக்குக் கிடைத்த வெற்றி. தமிழ்நாட்டின் அரசு, தனியார் கல்வி நிறுவனங்களிலும் இதேபோல் அம்பேத்கர்-பெரியார் சிந்தனை வட்டங்களை உருவாக்கிட முன்வரவேண்டும்; அதற்கு கல்லூரி நிர்வாகம் அனுமதிக்க வேண்டும் என்பது நமது வேண்டுகோள்!

மோடியின் ஓராண்டு

# அம்பேத்கருக்கு சொந்தம் கொண்டாடும் பா.ஜ.க.வினரின் 'தலித்' விரோதக் கொள்கைகள்!

- கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை, 82.771 கோடியாக இருந்தது. இப்போது 69.74 கோடியாக வெட்டப்பட்டு விட்டது. ஆனால், 'கங்கை'யை தூய்மையாக்குவதற்கு ரூ.25,000 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 50 ஆண்டுகாலமானாலும் இத் திட்டம் நிறைவேறப் போவது இல்லை என்கிறார், முன்னாள் பா.ஜ.க. அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி. இதைவிடக் கொடுமை, பள்ளிக் குழந்தைகளை மீண்டும் 'குலக்கல்வி'யான ஜாதித் தொழிலுக்கு குழந்தைகளை தள்ளி விடுவதற்கு இந்த ஆட்சி ஒப்புதல் தந்திருப்பதாகும். கல்வி உரிமைப் பாதுகாப்பு சட்டத்தின் நோக்கத்தையே குலைத்துவிட்டது மோடி ஆட்சி. 'பள்ளிக் குழந்தைகள், குடும்பத்தில் பெற்றோர்கள் செய்யும் வேலைகளில் ஈடுபடலாம்' என்று குழந்தைகள் வேலை பாதுகாப்புச் சட்டத்தை திருத்த ஒப்புதல் தந்துள்ளது. "குழந்தைத் தொழிலாளர் தடுப்பு மற்றும் முறைப்படுத்துதல்" எனும் சட்டம் 1986ல் கொண்டு வரப்பட்டு, குழந்தைகளை தொழிலாளர்களாக்குவதை தடுத்தது. கல்விக்கான நிதியை குறைத்துவிட்டு, குழந்தை களையும் குலத்தொழிலில் பங்கேற்க பச்சைக் கொடி காட்டிவிட்டார்கள்; மீண்டும் 'வர்ணா ஸ்ரமம்' திரும்புகிறது.

- அதுமட்டுமல்ல; பட்டியல் இனப் பிரிவினரான தாழ்த்தப்பட்டோர் நலத் திட்டங்களுக்கான ஒதுக்கீட்டில் 12 ஆயிரம் கோடியையும், பழங்குடியினருக்கான ஒதுக்கீட்டில் ரூ.5 ஆயிரம் கோடியையும், மகளிர் நலனுக்கான ஒதுக்கீட்டில் ரூ.20 ஆயிரம் கோடியையும், ஒருங்கிணைந்த குழந்தைகள் நலனுக்கான ஒதுக்கீட்டில் ரூ.8 ஆயிரம் கோடியையும் வெட்டி விட்டார்கள். குழந்தைகள் மற்றும் சமூக நலத்துறையே முடக்கப்பட்டுவிட்டது. துறை அமைச்சரான மேனகா காந்தி, இதைச் சுட்டிக்காட்டி, நிதியமைச்சர் அருண்ஜெட்லிக்கு கடிதமே எழுதியிருக்கிறார்.

- ஆர்.எஸ்.எஸ். குடும்பங்களும், பா.ஜ.க. பார்ப்பனர்களும் இப்போது அம்பேத்கருக்கு சொந்தம் கொண்டாடுகிறார்கள். அம்பேத்கரை ஆர்.எஸ்.எஸ். நண்பராக, திரித்து சித்தரிக்கத் துடிக்கும் இவர்கள்தான் பட்டியல் இன, பழங்குடியின மக்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மிக மோசமாகக் குறைத்திருக்கிறார்கள். ஜாதியமைப்பு, தலித் தொழிலாளர்களை முடக்கிப் போட்டிருப்பது குறித்து கவலைப்பட்ட அம்பேத்கர், இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கே தடையாகி விடுவதால், அதற்கேற்ற பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்க வேண்டும் என்றார். அந்தக் கண்ணோட்டத்தில், திட்டக்குழு, அனைத்துத் துறைகளிலும் மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்ற விகிதாச்சாரத்தில் நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று முடிவெடுத்தது. இதற்கான சட்ட வரைவை தயாரித்தவர் மிகச் சிறந்த சமூகநீதியாளர், மண்டல் குழு பரிந்துரையை உருவாக்குவதில் பெரும் பங்காற்றிய முன்னாள் அய்.ஏ.எஸ். அதிகாரி பி.எஸ். கிருஷ்ணன். 1978இல் இந்த தலித் உட்கூறு திட்டம், சட்டப்படி அமுலுக்கு வந்து விட்டது என்றாலும், 16.2 சதவீதம் பட்டியல் இனப் பிரிவினருக்கோ, 8.2 சதவீதம் பழங்குடியினருக்கோ நிதி ஒதுக்கீடு செய்யப்படவேயில்லை. மொத்த திட்ட ஒதுக்கீட்டில் இதுவரை பட்டியல் இன மக்களுக்கான நிதி ஒதுக்கீடு 8.1 சதவீதத்தைத் தாண்டியதே இல்லை. பழங்குடியினருக்கு 4 சதவீதத்தைத் தாண்டியது இல்லை. 1932ஆம் ஆண்டு உருவான பூனா ஒப்பந்தம் - பட்டியல் இன மக்களின் மக்கள் எண்ணிக்கைக்கேற்ப தொகுதி ஒதுக்கீடுகள் தரப்பட வேண்டும் என்று கூறுகிறது. இது, நிதி ஒதுக்கீட்டுக்கும் பொருந்தக் கூடியதே. இப்போது மோடி ஆட்சி, திட்டக் குழுவையே ஒழித்து விட்டதால் பட்டியல் இன மக்களுக்கான உட்கூறு திட்டமும் அதனுடன் சேர்ந்து ஒழிந்து போய்விட்டது. இனி, தலித் மக்களின் மக்கள் தொகைக்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக் கையையே சட்டரீதியாக எழுப்ப முடியாது.

- 'நிலத்தைக் கைப்பற்றும்' சட்டத்தை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்ற முடியாமல், மூன்று முறை குடியரசுத் தலைவர் வழியாக அவசர சட்டமாக பிறப்பித்து வருகிறது பா.ஜ.க. ஆட்சி. ஆனால், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான வன்கொடுமை தடுப்புச் சட்டத்தில் அதன் ஓட்டைகளை அடைத்து, புதிய வடிவில், 2014இல் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி, குடியரசுத் தலைவர் வழியாக, அவசர ஆணை பிறப்பித்தது. அதைத் தொடர்ந்து, நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வந்துவிட்டது. இந்த நிலையில், 6 மாதம் மட்டுமே இந்த அவசர ஆணை சட்டப்படி நீடிக்க முடியும். அதற்குப் பிறகு, நாடாளுமன்றத்தில் இதை நிறைவேற்ற வேண்டும். இந்த மசோதாவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்துக் கட்சியினர் ஆதரவும் இருப்பதால் இரு அவைகளிலும் நிறைவேற்றுவதில் எந்தத் தடையும் இல்லை. சமூக நீதிக்கான நாடாளுமன்ற நிலைக் குழு, இந்த மசோதாவை பரிசீலித்து, குழுவில் இடம் பெற்ற அனைத்துக் கட்சியினரின் ஒப்புதலோடு டிசம்பர் 19, 2014 இல் பா.ஜ.க. அரசிடம் சமர்ப்பித்தது. இவ்வளவுக்கும் பிறகு, பா.ஜ.க. ஆட்சி, அவசர சட்டத்துக்கு உயிர் தர விரும்பாமல், அப்படியே அமைதியாக 'காலாவதியாக்கி' கல்லறையில் புதைத்துவிட்டது. அனைத்துக் கட்சி ஆதரவு இருந்தும் தலித் மக்களுக்கான இந்த சட்டத்தைக் கொண்டுவர பா.ஜ.க. விரும்பவில்லை. இவர்கள்தான் அம்பேத்கருக்கு சொந்தம் கொண்டாடுகிறார்கள்.

# ஆர்.எஸ்.எஸ்சிலிருந்து அதிகார மய்யம் நோக்கி...



மோடியின் ஓராண்டு

- 'தகவல் அறியும் உரிமைச் சட்டம்' - மேல் மட்டத்து ஊழல்களை வெளிக் கொண்டு வருவதற்கும், 'அரசு இரகசியங்கள்' என்ற போர்வையில் முடக்கப்பட்ட மக்கள் விரோத செயல்பாடுகளை வெளியே கொண்டு வருவதற்கும் மக்களுக்குக் கிடைத்த ஆயுதம். ஆனால், இந்தச் சட்டத்தை சுரண்டும் ஆளும் வர்க்கங்களால் செரிமானம் செய்ய முடியவில்லை; சட்டம் வழங்கியுள்ள உரிமைகள், காங்கிரஸ் ஆட்சி காலத்திலிருந்து படிப்படியாக பறிக்கப்பட்டு வருகின்றன. இதில் வேடிக்கை என்னவென்றால், 2014 ஆகஸ்டிலிருந்து தலைமைத் தகவல் ஆணையர் பதவி நிரப்பப்படாமல் காலியாகவே வைக்கப்பட்டிருப்பதுதான். 2008ஆம் ஆண்டு இப்பதவிக்கு சைலேஷ் காந்தி என்பவர் நியமிக்கப்பட்டார். 2014ஆம் ஆண்டு ஆகஸ்டில் அவர் ஓய்வு பெற்று விட்டார். 9 மாதங்களாக இப்பதவி காலியாகவே இருந்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை முடக்கும் நோக்கத்துடனேயே மோடி ஆட்சி, ஆணையர் பதவியை நிரப்பாமல் காலம் கடத்தி வருவதாக ஊடகங்களுக்கு சைலேஷ் காந்தி பகிரங்க கடிதம் எழுதினார். இதன் காரணமாக ஊழல் தடுப்பு அமைப்புகள், பிரதமர் அலுவலகம், அமைச்சரவை செயலகங்கள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய நிர்வாக அமைப்புகள் போன்ற அரசு நிறுவனங்களிலிருந்து முக்கிய தகவல்கள் பெற முடியாமல் தடுக்கப்பட்டிருப்பதாக டெல்லி உயர்நீதிமன்றத்தில் பிரசாத் பூஷன் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் பொது நலன் வழக்கு தொடர்ந்தனர். இவ்வளவுக்குப் பிறகு (இந்தக் கட்டுரை அச்சேறும்போது) ஜூன் 8 ஆம் தேதி, மத்திய ஊழல் கண்காணிப்பு தலைமை ஆணையராக கே.வி.சவுத்ரி, மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையராக டி.எம். பாசினும் நியமிக்கப்பட்டுள்ள செய்தி வந்துள்ளது. இருவரும் பார்ப்பனர்கள். இந்த நிலையில் 2015 பிப்ரவரியில், பிரதமர் அமைச்சகம் ஒரு அதிரடி முடிவை எடுத்திருக்கிறது. அமைச்சர்கள் அறிவித்த சொத்து விவரங்களை இணையதளத்தில் எல்லோராலும் பார்க்க முடியாதவாறு தடை செய்துவிட்டது. உரிய அங்கீகாரம் பெற்று அதற்குள் சென்று பார்ப்பதற்கான அடையாள மொழிகள் (Password) தெரிந்தவர்கள் மட்டுமே அமைச்சர்கள் சொத்துக்களை இணையதளத்தில் பார்க்க முடியும். வெளிப்படையான ஒளிவுமறைவற்ற நிர்வாகத்தை நடத்துவோம் என்று தேர்தலுக்கு முன் மக்களுக்கு மோடி அளித்த உறுதிமொழி இப்படி காற்றில் பறக்கிறது.

- கல்வி, கலாச்சாரம் ஆய்வு மய்யங்களில் 'இந்துத்துவா' ஆதரவாளர்களை அதிகாரப் பொறுப்புக்கு கொண்டு வருவது பா.ஜ.க. அரசின் மற்றொரு திட்டமாகும். பள்ளிப் பாடத் தி ட்டங்களை மாற்றியமைப்பதற்கான திட்டம் – அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் 2005இல் தொடங்கப்பட்டு, அதற்கான பணிகள் முடியாத நிலையில் இப்பொறுப்பை ஏற்று வந்த கல்வி, ஆய்வு மற்றும் பயிற்சிக்கான நிறுவனத்தின் இயக்குனரான பர்வின் சின்களர் என்ற பெண் கணித ஆய்வாளரை மத்திய மனித வளத்துறை அமைச்சர் ஸ்மிருதி ராணி, நெருக்கடி தந்து அவரை பதவி விலகச் செய்தார். 'இந்துத்துவா' கொள்கைக்கேற்ப பாடத் திட்டங்களை உருவாக்குவதற்கு ஏற்ற ஆட்களை நியமித்து வருகிறார்கள். அதன்படி, இந்திய வரலாறு மற்றும் ஆய்வு மய்யத்தின் (அய்.சி.எச்.ஆர்.) தலைவராக ஆய்வாளர்களிடையே அறியப்படாதவரும், தனது புலமையை வெளிப்படுத்த ஆய்வுகள் ஏதும் வெளியிடாதவருமான ஒய்.சுதர்சனராவ் எனும் பார்ப்பனர், இப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இஸ்லாமிய வெறுப்பில் ஊறிப் போனவர்; இவர் பதவி ஏற்றவுடன், சர்வதேசப் புகழ் பெற்ற 'இந்திய வரலாற்று மதிப்பீடு' (Indian Historical Review) என்ற சர்வதேச இதழின் ஆலோசனைக் குழுவை கலைத்தார். இந்தக் குழுவில் ரொமீலாதாப்பர், இஃப்ரான் ஹபீப், சதீஷ் சந்திரா போன்ற புகழ்பெற்ற ஆய்வாளர்கள் இடம் பெற்றிருந்தனர். இதைத் தொடர்ந்து இதழின் ஆசிரியராக பணி யாற்றிய சய்யாச்சி பட்டாச்சாரியா, சுதர்சனராவின் போக்கு பிடிக்காமல் பதவியிலிருந்து விலகி விட்டார். இந்துமதம், புராணங்கள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்வதே தனது நோக்கம் என்று ராவ் கூறி விட்டார்.

- அரசுத் தொலைக்காட்சியான 'தூர்தர்ஷன்' விவசாயிகளுக்கான தனிப்பிரிவு ஒன்றை தொடங்க இருக்கிறது. இதற்கான தலைமை ஆலோசகராக ஒளி பரப்புத் துறையில் எந்த அனுபவமும் இல்லாத நரேஷ்சிரோகி என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர், பா.ஜ.க.வின் விவசாயப் பிரிவான 'கிசான் மோர்ச்சா'வின் செயலாளர்; இது ஒன்றே அவருக்கான தகுதி.

- 'விவேகானந்த சர்வதேச மய்யம்' என்பது ஆர்.எஸ்.எஸ். ஆதரவு நிறுவனம், இந்த அமைப்பில் செயல்பட்டவர்களான அஜித்டோவல், இப்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர். நிர்பேந்திர மிஸ்ரா பிரதமரின் முதன்மை செயலாளர் டேப்ராய் என்பவர் பிரதமர் அலுவலகத்தில் மற்றொரு முக்கிய பொறுப்பில் உள்ளார். இப்படி பல முக்கிய பொறுப்புகளில் அமர்ந்திருப்பவர்கள் விவேகானந்த சர்வதேச மய்யத்திலிருந்து வந்தவர்கள்தான். இந்த மய்யம் 1972 இல் ஆர்.எஸ்.எஸ். பொதுச் செயலாளராக இருந்த ஏக்நாத் ராணடே என்பவரால் உருவாக்கப்பட்டது.

**தகவல்: 'பிரன்ட் லைன்' ஜூன் 2, 2015**

## திருவாரூர் நூல் வெளியீட்டு விழாவில் கொளத்தூர் மணி பேச்சு

# ‘தமிழவேள்’ சாரங்கபாணியிடம் பெரியாரின் பெருமதிப்பு

*தோழர் கவி தொகுத்துள்ள “மலாயா தமிழ் முன்னோடிகளும் பெரியார் வருகையும்” நூல் வெளியீட்டு விழா 8.5.2015 அன்று திருவாரூர் எத்திராஜ் திருமண மண்டபத்தில் முக்கூடல் அமைப்பின் சார்பில் நடைபெற்றது. நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டு ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி.*

சுந்தரமூர்த்தி நாயனார் கிரிமினல் கேசு நூலுக்கு முன்னுரை எழுதும் போது, அதன் ஆசிரியர் அ.சி.சுப்பய்யா ஒன்றை சொல்லுகிறார். நம்மவர் என்பதற்காக எல்லோரையும் ஏற்றுக் கொள்வதில்லை. 1948இல் முன்னுரை எழுதுகிறார் என்றால், அதற்கு முன்பு பல ஆண்டுகள் நூலை எழுதியிருக்க வேண்டும். இந்த விரிவான நூலை நீண்ட காலம் எழுதியிருக்க வேண்டும். 1938இல் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்தது. இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்த போது சுயமரியாதை இயக்கத்தோடு பலர் உடன் இணைந்து போராடியவர்கள் இருந்தார்கள். மறைமலையடிகள் இருந்தார். சோமசுந்தர பாரதியார் இருந்தார். உமாமகேசுவரம் பிள்ளை இருந்தார். திரு.வி.க. இருந்தார். எல்லோரும் கூட இருந்தவர்கள்தாம். பெரியாரோடு இருந்தவர்கள்தாம். அவரைப் பற்றியெல்லாம் சொல்லுகிறார். ‘தமிழறிஞர்கள் மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், உமா மகேசுவரம் பிள்ளை, திரு.வி.க போன்றவர்கள் புராணங்களை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், பார்ப்பன சடங்கை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஆனால் பெரிய புராணத்தை மட்டும் விட்டுவிட மாட்டார்கள்’ என்று அ.சி.சுப்பையா எழுதுகிறார். ‘அதை மட்டும் தூக்கிப் பிடித்திருப்பார்கள். அதைப் பற்றித் தான் நாம் பார்க்கப் போகிறோம்’ என்கிறார். நம்மாள் தான், அதற்காக அவர்களை விட்டுவிட முடியாது என்பதைப் போல் பேசி, விளக்கம் கொடுக்கிறார். அதில் அவர் சொல்லுகிற போது, ‘இப்போது நமக்கு சுயராஜ்யம் கேட்கப்படுகிறது’. இது பெரியார் சொன்னதுதான். பெரியார் கருத்தைதான் அவர் பிரதிபலிக்கிறார். ‘சுயராஜ்யம் கிடைத்தால் இராம இராஜ்யத்தைத் தவிர வேறு எந்த இராஜ்யமும் வரும் என்று நினைக்காதீர்கள்’ என்று முன்னுரையில் எழுதுகிறார். ஒன்னும் பெரிய சுதந்திரம் கிடைக்கல. வந்தா இராம ராஜ்யம்தான் வரும். பார்ப்பான்தான் ஆட்சிக்கு வருவான். பெரியார் சொன்னாருல... வெள்ளைக் காரன் போனால் பார்ப்பன கொள்ளைக் காரன் கையில் கொடுத்துவிட்டு போய்விட்டான் என்று சொன்னதைப் போலத்தான். அவர் அப்போதே எழுதுறார். சுயராஜ்யம் கேட்டுகிட்டு இருக்கான், என்ன வரப்போவுது பெரிசா? இராமராஜ்யம்தான் வரப்போவுது. இப்பவும் அதுதான் வந்திருக்கு. இன்னும் அய்ந்து ஆண்டுகளுக்கு இருக்கும்.

முதல்முறை பெரியார் மலாயா (மலேசியா) போகும்போது எஸ்.இராமநாதன் கூடப் போகிறார். பெரியார் ஒவ்வொரு இடங்களில் பேசிமுடித்த பின், அங்கிருக்கிற பிற மொழிக்காரர்களுக்காக எஸ்.இராமநாதன் அரைமணி நேரம், ஒருமணிநேரம் ஆங்கிலத்தில் பேசுகிறார். பெரியார், இரண்டாவது முறை போகும்போது எஸ்.இராமநாதன் வேறு இயக்கத்திற்கு போய்விட்டார், இராஜாஜி அமைச்சரவையில் அமைச்சாராகிவிட்டார். அப்போது ஒரு சட்டக்கல்லூரி மாணவர் பெரியாருடன் போகிறார். அவர்தான் இராஜாராம். தி.மு.க.வில் அமைச்சராகவும், பிறகு சட்டப் பேரவைத் தலைவராகவும் இருந்தவர் அதே இராஜாராம் தான். சட்டக்கல்லூரி மாணவராக இருந்த இராஜாராம் பெரியாரோடு பர்மாவுக்கு புத்த மாநாட்டுக்கு போய் அங்கிருந்து மலாயா போகிறார். இராஜாராம் ஆங்கிலத்தில் பேசுகிறார். அதைவிட சிறப்பாக, பெரியாருடைய பேச்சுகளை முழுமையாக எழுதி அங்கிருக்கும் ஏட்டில் வரச் செய்கிறார். இது பற்றி (கவி) சொல்கிறார், அங்கிருக்கும் ‘தமிழ்முரசு’ ஏட்டில் எப்போதும் நிகழ்ச்சிகளின் சுருக்கங்கள்தான் வரும். உரை வந்ததில்லை. இப்போது பெரியார் உரைகள் மட்டும் எப்படி வந்திருக்க முடியும்? இந்த நூலை தொகுத்த கவி ஒரு கேள்வி எழுப்புகிறார். அப்போது உடன் பயணம் சென்ற இராஜராம் எல்லா



உரைகளையும் ‘தமிழவேள்’ கேட்டுக் கொண்டதற்காகவே எழுதியுள்ளார் என்பதை பதிவு செய்கிறார்.

அய்யா தமிழவேள், பெரியார் மீது கொண்டிருந்த மதிப்பென்பது சாதாரணமானதல்ல. ஒரு கட்டத்தில் தமிழவேள் சாரங்கபாணிக்கும் மலாயா திராவிடர் கழகத்துக்கும் மனக்கசப்பும் அதனால் வழக்கும் ஏற்பட்டு விடுகிறது. அந்த சமயத்தில் இங்கிருந்து நம்முடைய திருவாரூர் தங்கராசு அங்கு போகிறார். திருவாரூர் தங்கராசு அவர்களிடத்தில் ஒரு கடிதத்தைக் கொடுத்தனுப்புகிறார் பெரியார்.

அதில் சொல்லுகிறார், ‘நமது மதிப்புமிக்க நண்பர் உயர்திரு சாராங்கபாணி அவர்கள் சங்கத்தின் (கழகத்தின்) மீது மன வருத்தம் ஏற்பட்டு விவகாரம் தொடங்கி இருப்பதாக சொன்னார்கள். திரு.சாரங்கபாணி அவர்கள் இல்லாதிருந்தால் அங்கு நமது இயக்கமோ கழகமோ கட்டிடமோகூட ஏற்பட்டிருக்க முடியாது. ஏதோ காரணமாக ஏற்பட்டுவிட்டது’ என்று சொல்லி விட்டு, ‘ஆதலால் நீங்கள் அங்கிருந்து உயர்திரு. சாரங்கபாணி அவர்களைக் கேட்டுக் கொண்டு ஏதாவது வகை செய்து நல்ல முடிவு ஏற்படும்படி செய்ய வேண்டுகிறேன்’ என்று பெரியார் கடிதம் எழுதி 1971 இல் கொடுத்தனுப்புகிறார். மலேசியாவில் திராவிடர் கழகத்துக்கு பெரும் உதவி செய்த மூன்று பேர் மீது பெரியாருக்கு மிகுந்த மரியாதை உண்டு. அ.சி.சுப்பய்யா, மற்றவர் சாரங்கபாணி, மற்றொருவர் இராமசாமி நாடார், இவர் சி.பா. ஆதித்த னாருடைய மாமனார்.

இந்தத் தொகுப்பில் இடம் பெற்றுள்ள மற்றொரு கட்டுரைப் பற்றி குறிப்பிட வேண்டும். மலாயா அரசு, இராமசாமி நாடாருக்கு, ‘சமாதான நீதிபதி’ (Justice of Peace) என்ற பட்டத்தை வழங்கியது. இதைப் பாராட்டி, ‘விடுதலை’, ‘குடிஅரசு’ ஏட்டில் கட்டுரைகள் வருகின்றன. ‘குடிஅரசு’ ஏட்டில் பெரியார் வரவேற்றுப் பாராட்டி எழுதும்போது, அவரை ‘தோழர் நாடார்’ என்று எழுதுகிறார். ஆனால், ‘விடுதலை’யில் வேறு விதமாக குறிக்கப்படுகிறது. அப்போது ‘விடுதலை’யில் யார் ஆசிரியராக இருந்திருக்கிறார் என்பது தெரியவில்லை. ‘சத்திரிய குல சிகாமணி உ.இராமசாமி நாடார்’ என்று ‘விடுதலை’யில் வருகிறது. ஆனால், சாரங்கபாணி ‘தமிழ்முரசில்’, ‘சூத்திர குல சிகாமணி உ.இராமசாமி நாடார்’ என்று எழுதுகிறார். அங்க எங்கடா சத்திரிய குலம் இருக்கிறது? எல்லாருமே சூத்திர குலம்தானடா என்று எழுதுகிறார்.

ஒரு கூட்டத்தில் பேசுகிற போது சுப்பய்யா அவர்கள் தனிநாடு கோரிக்கையை வலியுறுத் துகிறார். ‘ஏன் நாம் தனி நாடாக இருக்க முடியாது? நம்மை ஆளுகின்ற இங்கிலாந்தை விட நாம் இரண்டு மடங்கு பெரிய நாடு’. ‘பெல்ஜியத்தைவிட பத்துமடங்கு பெரிய நாடு நம்நாடு. கிரேக்கத்தைவிட மூன்று மடங்கு பெரிய நாடு நம் நாடு. ஆலந்தைவிட பத்து மடங்கு பெரிய நாடு. போர்ச்சுக்கல்லைவிட 4 மடங்கு பெரிய நாடு பாலஸ்தீனத்தைவிட 14 மடங்கு பெரிய நாடு. நாம் ஏன் தனிநாடாக இருக்க முடியாது’ என்று சுப்பையா கேட்கிறார்.

திராவிட நாடு என்று குறிப்பிடுகிற இடத்தில் எல்லாம் அடைப்புக்குறியில் சென்னை மகாணம் என்று எப்போதும் தவறாமல் பெரியார் குறிப்பிடுவார். இங்கே பேசிய அய்யா (சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் பேரன் மார்டின் செல்வம்) கூட குறிப்பிட்டார், இதே திருவாரூரில் இந்தக் கூட்டம் நடக்கும் இடத்தின் அருகேதான் நீதிக்கட்சியினுடைய மத்திய குழுக் கூட்டம் 1940இல் நடந்தது என்று சொன்னார்கள். அங்கு தான் முறையான தீர்மானமாக, திராவிடநாடு கோரி போடப்பட்டது. அதிலும் அடைப்புக்குறியில் சென்னை மாகாணம் என்று போட்டார்கள். இந்திய அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விலகி நேரடியாக இங்கிலாந்தோடு தொடர்புடைய நாடாக சென்னை மாகாணம் விளங்க வேண்டும் என்று தீர்மானம் போட்டார்கள். அப்போது நீதிக்கட்சியாக இருந்தது.

(தொடரும்)

---

**மோடியின் ஓராண்டு**

# துள்ளிக் குதிக்கும் சு.சாமி

*பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தவுடன் அக்கட்சிக்கான செயல் உத்திக் குழுவின் தலைவர் என்ற பதவி கிடைத்தது, சுப்ரமணியசாமிக்கு. அதிகார போதை தலைக்கேறி, அவர் அவ்வப்போது உதிர்த்த ‘முத்துக்கள்’ சில:*

- இராஜபக்சே அதிபராக இருந்தபோது, அந்த இனப்படுகொலையாளரை நேரில் சந்தித்துப் பேசினார் சுப்ரமணியசாமி. “அய்.நா. மனித உரிமைக் குழுவில் இலங்கைக்கு எதிராக வரும் தீர்மானங்களைக் கண்டு பயப்பட வேண்டாம். அந்த அமைப்புக்கு எந்த அதிகாரமும் இல்லை. கல்லெறிந்தால், ஓடும் காக்கையைப் போன்றது அந்த அமைப்பு என்று கொழும்பிலிருந்து வெளிவரும் ‘டெய்லி மிர்ரர்’ நாளேட்டுக்கு பேட்டி அளித்தார் (ஜூலை 23, 2014).
- கொழும்பு பண்டாரநாயகா சர்வதேச இராணுவ ஆய்வு மய்யத்தில் ‘மோடியின் இந்தியா’ எனும் தலைப்பில் சுப்ரமணியசாமி பேசினார். அவரது பேச்சால் துணிவும் நம்பிக்கையும் பெற்ற இலங்கை இராணுவத் துறை, ஆணவத்தின் உச்சிக்குப் போனது. “மீனவர்கள் சிறை பிடிப்புக் குறித்து, தமிழக முதல்வர், மோடிக்கு எழுதும் கடிதங்கள், காதல் கடிதங்களைப் போன்றது” என்று இராணுவத்துறை தனது இணையதளத்தில் திமிருடன் பதிவிட்டது, ஒட்டு மொத்த தமிழகமும் இதை எதிர்த்தவுடன் தனது பதிவை, திரும்பப் பெற்றுக் கொண்டது இலங்கை இராணுவம்.
- ‘தமிழக மீனவர்களை சிறை பிடிப்பதற்கு பதிலாக, அவர்களது படகுகளை பறிமுதல் செய்யுங்கள் என்று இராஜபக்சேவுக்கு ஆலோசனை கூறியது நான்தான்’ என்று சுப்ரமணியசாமி, ‘தந்தி’ தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் பெருமையுடன் கூறினார்.
- மோடி அமைச்சரவை விரிவாக்கத்தின்போது தனக்கு அமைச்சர் பதவி கிடைக்காதது குறித்து சுப்பிரமணியசாமி வெளியிட்ட கருத்து: “வரலாற்றில் அரசர்களுக்கு ஆலோசகர்களாக இருந்தவர்கள் ‘பிராமணர்கள்’ தான். இப்போதும் நான் மோடிக்கு ஆலோசகராக இருக்கிறேன்; இதைவிட, அமைச்சர் பதவி எதற்கு?”
- டெல்லி அய்.அய்.டி.யின் இயக்குனராக இருந்தவர் சச்சின் டெண்டுல் சன். இவர் சுப்பிரமணியசாமிக்காக தனது பதவியை விட்டே விலக வேண்டியதாயிற்று. காரணம் இதுதான்: டெல்லி அய்.அய்.டி.யில் பொருளாதாரப் பேராசிரியராக 1969இல் சுப்பிரமணியசாமி பணியாற்றினார். இந்திரா பிரதமரானபோது அவரைப் பதவி நீக்கம் செய்தார். அப்போது தனக்கு ஊதியமாக கிடைக்க வேண்டிய ரூ.70 இலட்சத்தைக் கேட்டு சுப்ரமணியசாமி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். வழக்கு நிலுவையில் உள்ளது. மோடி ஆட்சி வந்தவுடன், மத்திய வேலை வாய்ப்பு அமைச்கம் சுப்பிரமணியசாமிக்கு ரூ.70 இலட்சத்தைத் திருப்பித் தர, அய்.அய்.டி. இயக்குனரை கட்டாயப்படுத்தியது. வழக்கு நிலுவையில் இருப்பதை சுட்டிக்காட்டி, இயக்குனர் இதற்கு உடன்படவில்லை. அரசு கட்டாயப்படுத்தி, இயக்குனரிடம் விலகல் கடிதத்தைப் பெற்றது ‘இந்து’ ஆங்கில நாளேடு வெளியிட்ட செய்தி இது.

DATE OF PUBLICATION 11.06.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

மோடியின் ஓராண்டு

# அருண் ஜெட்லி, கதை இது!



மோடி, அமித்ஷா, அருண் ஜெட்லி – இந்த மூவர் குழுதான், இப்போது ஆட்சியில் அதிகாரத்தைக் கையில் வைத்திருப்பவர்கள். அருண் ஜெட்லி, நிதியமைச்சராகவும், தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சராகவும் உள்ளார். ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதே போயஸ் தோட்டத்துக்கு வந்து அவரை நேரில் சந்தித்துப் பேசியவர் அருண் ஜெட்லி! பார்ப்பன அம்மையாரை பார்ப்பன அமைச்சர் சந்தித்ததால் இந்த அப்பட்டமான அதிகார முறைகேட்டை ஊடகங்கள் ஊதிப் பெருக்கவில்லை.

பல கார்ப்பரேட் நிறுவனங்களின் வழக்கறிஞராகவும், சட்ட ஆலோசகராகவும் செயல்பட்டவர் ஜெட்லி. இவருடைய இரட்டை வேடம் அதிகார முறைகேடுகளுக்கு இரண்டு உதாரணங்கள்:

2012இல் மாநிலங்களவையில் பா.ஜ.க. எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர் அருண் ஜெட்லி. நிலக்கரி ஒதுக்கீட்டில் மன்மோகன் சிங் ஆட்சி மீது புகார்கள் வந்த நேரம். அப்போது நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சுஷ்மா சுவராஜுடன் இணைந்து போர் முரசு கொட்டினார். இருவரும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில், “நாடாளுமன்றத்தை நடத்தவிட மாட்டோம்; இது அரசியல் பிரச்சினை மட்டுமல்ல; நமது பொருளாதார வளங்களைப் பாதுகாக்கும் போராட்டம்” என்றெல்லாம் அந்த அறிக்கை ஆவேசக்கனல் கக்கியது.

இதே அருண் ஜெட்லி, பன்னாட்டு நிறுவனம் ஒன்று, தான் கொள்ளை அடித்த இலாபத்தில், ஒரு பகுதியை அரசுக்கு அளிக்க முன் வந்தபோது, அது தேவையில்லை என்று ஆலோசனை கூறி தடுத்தார். அந்த பன்னாட்டு நிறுவனத்தின் பெயர் ‘ஸ்ட்ரா ஜெடிக் எனர்ஜி டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்’, டாட்டா நிறுவனம் மற்றும் தென்னாப்பிரிக்க நிறுவனங்கள் இணைந்த அமைப்பு 2008இல் இந்தியாவில் நிலக்கரி ஒதுக்கீடுகளைப் பெற்று கொள்ளை இலாபம் அடித்தது இந்த நிறுவனம். இதன் சட்ட ஆலோசகர் அருண் ஜெட்லி, இலாபத்தில் ஒரு பகுதியை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள முடிவு செய்து இந்த நிறுவனம், அருண் ஜெட்லியிடம் கருத்து கேட்ட போது, அவர் 21 பக்க அறிக்கையாக தனது கருத்துகளை முன் வைத்தார். “சட்டப்படி இலாபத்தை இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை” என்பதுதான் அருண் ஜெட்லி கூறிய அறிவுரை. பொருளாதார வளங்கள் எல்லாம் மக்கள் உரிமை என்று சூளுரைத்த ஜெட்லியின் யோக்கியதை இது.

இப்போது, தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் என்ற முறையில், அரசு தொலைக்காட்சி மற்றும் அரசு வானொலியின் சுயேச்சைத் தன்மையை முடக்கி, நேரடியாக தனது அதிகாரக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டார். ‘பிரச்சார் பாரதி’ என்ற அமைப்பின் கீழ் தொலைக்காட்சிகள், வானொலிகள் செயல்பட்டு வருகின்றன. ‘பிரச்சார் பாரதிக்கு’ தனிச் சட்டம், விதி முறைகள் உண்டு. தொலைக்காட்சி, வானொலிகளுக்கான பதவி நியமனங்களை அரசே நேரடியாக செய்துவிட முடியாது. ‘பிரச்சார் பாரதி’ சட்டப்படி மேற்குறிப்பிட்ட ஒலி, ஒளிபரப்பு நிறுவனங்களின் இயக்குனர்கள் அடங்கிய குழுவின் ஒப்புதலோடு தான் நியமனங்கள் நடக்க வேண்டும். ஆனால், ‘தூர்தர்ஷன்’ செய்தித் துறை இயக்குனர் ஜெனரல் பதவியில் வீணா ஜெயின் என்பவரை விதிகளை மீறி அருண் ஜெட்லி தன்னிச்சையாக நியமித்துள்ளார்.

அதுமட்டுமல்ல, வானொலியில் ஒலிபரப்பாகும் அனைத்து நிகழ்ச்சி உள்ளடக்கங்களையும் தனது அமைச்சகத்துக்கு அனுப்ப வேண்டும் என்று, 2015, ஏப். 30ஆம் தேதி உத்தரவிட்டுள்ளார். அருண் ஜெட்லியின் இந்த அத்துமீறல்களுக்கு பிரச்சார பாரதியின் தலைவர் சூர்ய பிரகாஷ் எதிர்ப்பு தெரிவித்து முடிவுகளை நியமனங்களை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அனைத்து நிறுவனங்களையும் ‘காவி மயமாக்கி’ அதிகாரத்தில் பார்ப்பன மய்யம் உறுதியாக்கப்பட்டு வருகிறது!

# மதவெறிக் கூச்சல்கள்

மோடியின் ஓராண்டு

- ‘இராஜீவ் காந்தி ஒரு நைஜீரிய நாட்டுப் பெண்ணை (கருப்பர் இனம்) திருமணம் செய்திருந்தால், காங்கிரஸ் கட்சி, அவரை தலைவராக ஏற்றிருக்குமா?’ என்று மத்திய அமைச்சர் கிரி ராஜ்சிங் என்பவர் பேசினார். (மோடியே, இதற்காக இவரை மன்னிப்புக் கேட்கச் சொன்னார்)
- டெல்லி சட்டசபை தேர்தலில் ஓட்டு கேட்ட மத்திய அமைச்சர் சாத்வி நிரஞ்சன் ஜோஷி, ‘இராமனின் பிள்ளைகளை தேர்ந்தெடுக்கப் போகிறீர்களா? முறை தவறிப் பிறந்தவர்களை தேர்ந்தெடுக்கப் போகிறீர்களா?’ என்று வாக்காளர்களிடம் பேசினார். (வாக்காளர்கள், ‘இராமனின் பிள்ளைகள்’ வேண்டாம் என்று தீர்ப்பளித்தனர்)
- காந்தியைக் கொன்ற கோட்சே, ஒரு தேசபக்தர் என்றார், உ.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சாக்ஷி மகராஜி. ‘காந்திக்கு பதிலாக நேருவை கோட்சே சுட்டுக் கொலை செய்திருக்க வேண்டும்’ என்றார், கேரளாவைச் சார்ந்த ஒரு பா.ஜ.க. தலைவர்.
- ‘இந்துப் பெண்கள் நான்கு குழந்தைகளைப் பெற்று, அதில் ஒரு குழந்தையை கோயிலுக்கும், ஒரு குழந்தையை ஆர்.எஸ்.எஸ்.சுக்கும் முழுநேர சேவைக்கு அனுப்ப வேண்டும்’ என்று பேசியவரும், இதே சாக்ஷி மகராஜ் என்பவர்தான். ‘இந்துப் பெண்கள் ஒவ்வொருவரும் 5 குழந்தைகள் பெற வேண்டும்’ என்று மற்றொரு பா.ஜ.க. பிரமுகர் சியாமன் கோஸ் என்பவர் பேசினார். சாத்வி பார்ச்சி என்ற பா.ஜ.க. பெண் துறவி, ‘இந்துப் பெண்கள் 4 குழந்தைகள் பெற வேண்டும்; மற்றவர்களைப் போல் 40 நாய்க்குட்டிகளை அல்ல’ என்று மதவெறியைத் தூவினார்.
- ‘முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் வாழும் பகுதிகளில்தான் வன்முறைகள் வெடிக்கும்’ என்று பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினரான யோகி ஆதித்யநாத், உ.பி. இடைத் தேர்தலில் பிரச்சாரம் செய்தார். ‘நீங்கள் ஒரு இந்துப் பெண்ணை திருமணம் செய்தால், நாங்கள் 100 முஸ்லிம் பெண்களை எடுப்போம்’ என்று மதவெறியை கக்கியவரும், இதே ஆதித்யநாத்தான்.
- ‘இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் வாக்குரிமையை பறிக்க வேண்டும்’ என்று மகாராஷ்டிரா பா.ஜ.க. தலைவர் சஞ்சய் ராவுத் என்பவர் வெளிப்படையாக பேசினார்.
- ‘அன்னை தெரசா, இந்தியாவுக்கு சேவை செய்ய வரவில்லை. கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்வதே அவரது நோக்கம்’ என்று பேசினார், ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்.
- ‘பிரபல இந்தி திரைப்பட நடிகர்கள் சத்ருகான், சல்மான்கான், அமீர்கான் நடித்த திரைப்படங்களைப் பார்க்காதீர்கள். அவர்கள் படங்களின் சுவரொட்டிகளை கிழித்து, நெருப்பில் போட்டு, ‘போகி’ கொண்டாடுங்கள்’ என்று பேசினார், வெறிப் பேச்சுக்கு புகழ் பெற்ற பா.ஜ.க. தலைவர் சாத்வி பிராச்சி.
- ‘பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க முடியாது; வீட்டுக்கு ஒரு காவலரை நிறுத்தினாலும் இருக்கத்தான் செய்யும்’ என்று பேசினார் மகாராஷ்டிரா உள்துறை அமைச்சர் ஆர்.ஆர். பாட்டில்.
- ‘சிகரெட் பிடிப்பதால் புற்றுநோய் வராது’ என்று பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சியாம் சரண் குப்தா, இராம்நாத் சர்மா ஆகியோர் கூறினர். இவர்கள் இருவரும் புகைப் பழக்கத்துக்கு எதிரான செயல்திட்டக்குழுவில் உறுப்பினர்கள். ஒருவர் புகையிலை வர்த்தகம் செய்பவர்.

# ‘அவாள்’பிடிக்குள் அமைச்சரவை



மோடி அமைச்சரவையை விரிவாக்கம் செய்தபோது புதிதாக நியமனமான 4 காபினட் அமைச்சர்களில் 3 பேர் பார்ப்பனர்கள். மோடியின் அமைச்சரவையில் அதிகாரங்களுடன் அமர்த்தப்பட்டுள்ள பார்ப்பன அமைச்சர்கள். அவரது துறைகள்:


சுஷ்மா சுவராஜ் - வெளி விவகாரத் துறை; அருண் ஜெட்லி - நிதித் துறை; நிதின் கட்காரி - கப்பல் போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைத் துறை; கல்ராஜ் மிஸ்ரா - சிறு, குறு, நடுத்தரத் தொழில் துறை; அனந்த் குமார் - இரசாயனம் மற்றும் உரத் துறை; மனோகர் பாரிக்கர் - பாதுகாப்புத் துறை; சுரேஷ் பாபு - தொடர்வண்டித் துறை; ஜெ.பி. நட்டா- சுகாதாரத் துறை.

இது தவிர, வணிக வரித்துறை அமைச்சராக முழு அதிகாரம் பெற்ற இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன். இந்தியாவில் மத்திய அமைச்சரவையில் இதற்கு முன் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் பார்ப்பனர்கள் இடம் பெற்றதில்லை. முக்கியத் துறைகள் அனைத்துப் பார்ப்பனர்களின் கட்டுப்பாட்டில்தான் முடங்கிக் கிடக்கின்றன.

தனிப் பொறுப்புடன் கூடிய 10 இணை அமைச்சர்களில் 5 பேர் பார்ப்பனர் மற்றும் உயர்ஜாதியினர், 4 பேர் பிற்படுத்தப்பட்டோர். 12 இணை அமைச்சர்களில் பார்ப்பனர் மற்றும் உயர்ஜாதி 4 பேர், பிற்படுத்தப்பட்டோர் 4 பேர், பழங்குடியினர் 4 பேர், காபினட் அமைச்சர்களில் ஒரே ஒருவர் மட்டும் முஸ்லிம். பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் களில் ஒருவர்கூட முஸ்லிம் இல்லை. மோடி தத்து எடுத்த கிராமமான உ.பி.யில் உள்ள ஜெய்பூரில் ஒரு முஸ்லிம்கூட கிடையாது. பா.ஜ.க. ஆளும் 9 மாநிலங்களில் ஒரே ஒரு முஸ்லிம் மட்டுமே அமைச்சர். ஆனால், மத அடிப்படையில் பிளவுபடுத்துவதை தாம் ஆதரிக்கவில்லை என்று மோடி ‘வசனம்’ பேசிக் கொண்டிருக்கிறார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 11 June 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜுன் 18, 2015 | புரட்சி 14 | முழக்கம் 23 | விலை: ரூ.3.00

## வரலாற்று நிகழ்வுகளை சுட்டி கொளத்தூர் மணி உரை

# ஒரே பாதையில் பயணித்த பெரியார்–அம்பேத்கர்

*தோழர் கவி தொகுத்துள்ள “மலாயா தமிழ் முன்னோடிகளும் பெரியார் வருகையும்” நூல் வெளியீட்டு விழா 8.5.2015 அன்று திருவாரூர் எத்திராஜ் திருமண மண்டபத்தில் முக்கூடல் அமைப்பின் சார்பில் நடைபெற்றது. நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டு ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி.*

திராவிட நாடு என்பது சிலர் சொல்வதைப் போல கர்நாடக, ஆந்திரா, கேரளாவைச் சேர்ந்ததல்ல என்பதை பெரியார், எப்போதும் தெளிவாக புரிந்திருக்கிறார். தெளிவற்றவர்கள்தான் இப்போது பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஒரே அரசியல் அலகாக இருந்த சென்னை மாகாணத்தில் தன்னோடு அரசியல் பணி ஆற்றிக் கொண்டிருந்த பார்ப்பனரல்லாதாருடைய நலனுக்காக போராடிக் கொண்டிருந்தவர்களை உடன் இணைத்துக் கொண்டு பெரியார் சொன்னார், ‘எப்போது அவர்கள் மொழி வழி மாநிலமாக தனியாகப் பிரிந்து போனார்களோ அப்போது தமிழ்நாடு தமிழருக்கே’ என்று பெரியார் சொல்லி விட்டார். 1956 இல் மொழிவழி மாநிலம் பிரிந்தது. ‘பிரிஞ்சு போனதை விட்டுவிடு. மீதியெல்லாம் நம்ம நாடு’ என்றார் பெரியார். ஆனால் இவர்களெல்லாம் பெரியார், ஆந்திராவை, கேரளாவை, கர்நாடகாவை இணைத்த ஒரு நாடு கேட்டதைப் போல பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்ணா, திராவிட நாடு கேட்டார். உண்மை தான். அண்ணாகூட ஒரே நாடு என்று கூட கேட்க வில்லை. அவர் சொன்னது, ‘மொழி வழி பிரிந்து இனவழி கூடியிருக்கும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய திராவிடநாடு’ தான் கேட்டார். எல்லோரும் எப்ப வேண்டுமானாலும் பிரிந்து போகலாம். அதைத்தான் அண்ணா கேட்டார். ‘மொழிவழியாகப் பிரிந்து தனி மாநிலமாக இருப்போம். இனவழியாக கூடி திராவிட நாடாக இருப்போம். எப்ப வேண்டுமானாலும் பிரிந்து போகலாம்’. சம உரிமை யுடன் கூடிய சம தர்ம திராவிட குடியரசு நாடுதான் கேட்டார். அது கூட இவர்கள் சொல்வதைப் போல தென் மாநிலங்களை ஒன்றாக இணைக்கக் கூடிய திராவிட நாடு கேட்க வில்லை. ஆனால் இவர்கள் அதை ஏதோ பெரிய குற்றத்தைக் கண்டு பிடித்ததைப் போன்று பேசிக் கொண்டு திரி கின்றார்கள். நூலில் இடம் பெற்றுள்ள மற்றொரு செய்தியை குறிப்பிட வேண்டும்.

கலியன் என்ற ஒரு தாழ்த்தப்பட்டவர் இறந்து விட்டார். அவர் உடலைக் கொண்டு போய் வழக்க மான இடுகாட்டில் புதைத்து விட்டார்கள். உடனே ஒரு உயர் ஜாதிக் காரன் மறுப்புத் தெரிவிக் கிறான். அது இந்துக் களுக்கான இடம். தாழ்த்தப் பட்டவனை இங்கு புதைத்து விட்டாயே என்று கூறி, புதைத்த உடலை எடுத்துக் கொண்டு போய் தாழ்த்தப்பட்டவர்களுக்கான இடத்தில் புதைக்கிறார்கள். இதை எதிர்த்து மலாயா திராவிடர் கழகம் வழக்கு போடுகிறது. தன்னை பார்க்க வந்த ஒருவரிடம் பெரியார் கேட்கிறார், அவர், ‘கலியன் வழக்கில் நாம் வெற்றி பெற்றுவிட்டோம்’ என்கிறார். அதைக் கேட்டவுடன் ‘எனக்கு நூறு வருசம் வாழவேண்டும் என்ற தெம்பு வந்து விட்டதய்யா’ என்கிறார் பெரியார்.

‘அம்பேத்கர் என்றால் தாழ்த்தப்பட்டவர்களின் தலைவர். பெரியார் என்றால் பிற்படுத்தப்பட்டவர் களின் தலைவர்’ என்று பிரித்துவிட்டார்கள். ஆனால் அவர்களின் சிந்தனை எப்படி இருந்தது என்பதற்கு வரலாற்றைப் பார்க்க வேண்டும்.

மகர் குளப் போராட்டத்தை மகாராஷ்டிரத்தில் அம்பேத்கர் நடத்தினார். அதற்கு முன்னால் அவர் தனது மூக் நாயக்’ (ஊமைகளின் தலைவன்) கில் எழுதுகிறார். அதில், தென்னாட்டில் நடந்த செய்தி களைப் பற்றி எழுதிவிட்டு, ‘தென்னாட்டில் பார்ப் பனரல்லாத மக்களின் தலைவரான ஈ.வெ.இராமசாமி நாயக்கர் வைக்கத்தில் நடத்திய போராட்டம் எனக்கு ஊக்கத்தைக் கொடுத்தது’ என்று எழுதுகிறார் அம்பேத்கர். இந்தப் போராட்டத்தைப் பார்த்துதான் மகர்க் குளப் போராட்டத்தை நடத்துகிறார்.

அடுத்து அம்பேத்கர், இன் னொன்றையும் எழுது கிறார். ‘இன்னொரு போராட்டம் என் நெஞ்சை உலுக்கியது’ என்கிறார். இங்கிருந்து சென்னை யிலுள்ள புரசைவாக்கத்தைச் சார்ந்த முருகேசன் என்பவர் சித்தூருக்கு போகிறார். திருப்பதிக்குப் பக்கத்தில் உள்ள கோயிலுக்குள் போகிறார். எல்லோரும் சாமியை கும்பிட்டு விட்டு ‘கோவிந்தா கோவிந்தா’ன்னு உள்ளே போயிடுறாங்க. அவரும் பக்தி பரவச உணர்ச்சியில் உள்ளே போயிடுறார். போனதற்கு பின்னால்தான் தெரிகிறது இவர் தாழ்த்தப்பட்டவர் என்று. உடனே அவரைப் பிடித்து வழக்கு மன்றத்தில் நிறுத்தி தண்டனை கொடுத்தார்கள். அவருக்கு 75 ருபாய் அபராதம். ஒரு வருடம் சிறை தண்டனை அளிக்கிறார்கள். ‘தவறிப் போய் கோயிலுக்குள் நுழைந்தவனுக்குத் தண்டனைக் கொடுத்து விட்டார்கள்’ என்று அம்பேத்கர் எழுதுகிறார். 1927 இல் எழுதுகிறார். தண்டனை கொடுத்தது உண்மை தான். ஆனால் அந்த மாதமே டிசம்பர் மாதம் வழக்கு சித்தூர் நீதிமன்றத்தில். மேல் முறையீடு செய்யப்பட்டது. அப்போது பெரியார் காங்கிரசிலிருந்து வெளி வந்து விட்டார். ஆனால் இராஜாஜியை வைத்து எதிர்த்து வழக்காடச் சொல்கிறார். சரியாக ஒரு மாதத்தில், 22.11.1925 இல் பெரியார் காங்கிரசைவிட்டு வெளியே வருகிறார். 22.12.1925 இல் அங்கு வழக்கு வருகிறது. இராஜாஜி போய் வாதாடி விடுதலை பெற்று வருகிறார். இது பற்றி குடிஅரசில் மூன்று பக்கம் பெரியார் எழுது

( 3ஆம் பக்கம்)



## மதமாற்றம்: அம்பேத்கர் எடுத்த உறுதிமொழி

சாதி வேறுபாடு, குறிப்பாகத் தீண்டாமையை ஏற்றுக் கொள்ளாத புத்தமதத்திற்கு மாறுவதென்று அம்பேத்கர் முடிவு செய்தார். 1956 அக்டோபர் 14, 15 ஆகிய நாள்களில் நாகபுரியில் புத்தமதத்தை அம்பேத்கர் தழுவினார். அவருடன் ஆயிரக்கணக்கான மகர்களும் வேறு சமூகங்களைச் சேர்ந்த தோழரும் இணைந்தனர்.

மக்கள், புத்தமத முறைப்படி தீட்சை ஏற்றனர். 83 வயது நிரம்பியவரும், பர்மா (மியான்மர்) நாட்டினருமான புத்த பிக்கு, அவருக்கு தீட்சை வழங்கினார். இவர்கள் தழுவிய புத்தமதம் தேரவாத பௌத்தமாகும். திரி சரணம் (புத்தம் சரணம், தர்மம் சரணம், சங்கம் சரணம்) கோட்பாடுகளுடன், 22 உறுதி மொழிகளையும் கூறி மதம் மாறினார்கள். மராத்தி மொழியில் எடுக்கப்பட்ட அவ்வுறுதிமொழிகளில் சில வருமாறு:

1. பிரம்மா, விஷ்ணு, மகேஷ் ஆகியோரை நான் கடவுளாகக் கருதவும் மாட்டேன், வணங்கவும் மாட்டேன்.
2. இராமனையும் கிருஷ்ணனையும் கடவுளாகக் கருதி வணங்க மாட்டேன்.
3. கௌரி, கணபதி போன்ற இந்துக் கடவுளர்களை வணங்க மாட்டேன்.
4. கடவுள் பிறப்பதாகவோ, எந்த வடிவிலும் அவதரிப்பதாகவோ நான் நம்ப மாட்டேன்.
5. விஷ்ணுவின் அவதாரமே புத்தர் என்பதை நம்ப மாட்டேன். இப் பரப்புரையாவது தவறானதும், குறும்புத்தனமானதும் ஆகும்.
6. சிரார்த்தம் கொடுப்பது, பிண்டம் படைப்பது போன்றவற்றை ஒருபோதும் செய்ய மாட்டேன்.
7. புத்தமதக் கோட்பாடுகளுக்கு எதிரானவை எதையும் செய்ய மாட்டேன்.
8. ‘பிராமணர்கள்’ மேற்கொள்ளும் ‘சமஸ்காரா’ (பரிகாரம்) சடங்குகளைப் பெற்றுக் கொள்ள மாட்டேன்.
9. அனைவரும் சமம் என்பதை நம்புகிறேன்.
10. சமத்துவத்தை நிலைநாட்ட முயற்சி செய்வேன்.
11. மனித உரிமைகளை நசுக்குவதில் உறுதியாய் இருக்கும், சமத்துவத்தை விரும்பாத பார்ப்பனர்களைத் தவிர மற்றவர்களை கீழான பிறவிகள் என்று கூறும் இந்து மதத்தைத் தூக்கி எறிகிறேன்.
12. புத்த தர்மமே சிறந்த மதம் என்பது என் உறுதியான கருத்து.
13. இன்று நான் ஒரு புதிய பிறவி எடுத்ததாக நம்புகிறேன்.
14. இன்று முதல் புத்த தர்மத்தின்படியே நடப்பேன் என்று உறுதி ஏற்கிறேன்.

இப்படி உறுதியேற்று இந்த மதத்தையும் அதன் கடவுள்களையும் பார்ப்பனர்களையும் எதிர்த்த அம்பேத்கரைத்தான் சங்பரிவாரங்கள் தங்களுக்கு சொந்தம் கொண்டாடத் தொடங்கியுள்ளன.

## ஆர்.கே. நகர் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்கு கழகம் ஆதரவு

*திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை:*

சென்னை ஆர்.கே. நகர் இடைத் தேர்தலில் திராவிடர் விடுதலைக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் சி.மகேந்திரனுக்கு ஆதரவு அளிக்கிறது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிராக அரசியல் ரீதியாக எதிர்ப்புத் தெரிவிக்க இடதுசாரிகள் முன் வந்திருப்பது வரவேற்கத்தக்கது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும், மதவாதம் ஆட்சிக்கு வரக் கூடாது என்ற நோக்கத்தோடு, திராவிடர் விடுதலைக் கழகம், இடதுசாரி கட்சி வேட்பாளர்களையே ஆதரித்தது. அதே கண்ணோட்டத்தோடு இப்போது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை ஆதரிப்பதோடு, ஆர்.கே. நகர் தொகுதி வாக்காளர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளரை ஆதரிக்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் கேட்டுக் கொள்கிறது.

# கார்ப்பரேட் கலாச்சார கயமைகளை தோலுரிக்கும் 'காக்கா முட்டை'

கோழி முட்டைகளை வாங்கும் வசதியில்லை; காக்காய் இடும் முட்டைகளை திருடி, அப்படியே முட்டைபோல் விழுங்கலாம்; இது விலை இல்லாத முட்டை. இதேபோல் கோழி, ஆட்டுக்கறியை விலை கொடுத்து வாங்க முடியாத மக்களுக்கு, அதைவிட குறைந்த விலையில் கிடைக்கும் புரதச் சத்து மாட்டுக்கறி. ஆனால், 'மதவெறி' ஆட்சியாளர்கள் மாட்டுக் கறிக்குத் தடைப் போட்டு, எளிய மக்களின் உணவு உரிமையைப் பறிக்கிறார்கள். நல்லவேளை, கருப்பு காக்காய் வணங்கப்படும் 'புனித'ப் பறவையாக இல்லை. இல்லையேல், 'காக்கா முட்டைக்கும்', காவிக்காரர்கள் தடைகேட்டுப் போராடக் கிளம்பியிருப்பார்கள்.

'உலகமயமாக்கல்' என்ற கொள்கை வந்து விட்டாலே, சர்வதேச நாடுகளிடையே ஏற்றுமதி இறக்குமதிகள் அதிகரித்து, அதனால் இந்தியாவுக்குள் நவீன விஞ்ஞானம், தொழில்நுட்பங்கள் வந்து சேரும். ஜாதிய தீண்டாமைகள், பழமைவாதங்கள் நெருக்கடிக்கு உள்ளாகும் என்று கணித்தவர்கள் உண்டு. ஆனால், என்ன நடந்தது? ஜாதிய-சமூக இடைவெளியை மேலும் அகலப்படுத்தி, விளிம்பு நிலை மக்களை வேகமாக மய்ய நீரோட்டத்திலிருந்து விரட்டி அடித்து விட்டது. பார்ப்பனியம் மேலும் இறுக்கமாகி, அதன் சமூகச் சுரண்டல் பன்னாட்டு நிறுவனங்களின் வழியாக நவீன முகமூடியோடு வீறு நடைபோடுகிறது. வாழ்வாதாரங்களும் இயற்கை வளங்களும் சூறையாடப்படுகின்றன. பலித்தவரை லாபம் என்ற பார்ப்பனியமும், கிடைத்தவரை லாபம் என்ற பன்னாட்டு கம்பெனிகளும் ஒரே தத்துவத்தில் கைகோர்த்து நடைபோடத் தொடங்கி விட்டன.

மக்களின் உயிருக்கே உலை வைக்கும் மருத்துவக் கழிவுகளையும், அணுக் கழிவுகளையும் கொட்டும் குப்பைத் தொட்டிகளாக 'இந்தியா' மாற்றப்படுவதை எதிர்த்துப் போராடி தூக்குத் தண்டனைக்குள்ளாகிய ஒரு புரட்சியாளன் கதை 'புறம்போக்கு எனும் பொதுவுடைமை'. தோழர் ஜனநாதன் இயக்கத்தில் திரைப்படமாக வெளிவந்துள்ளது.

'உலகமயமாக்கல்' கொள்கை தூண்டுதலில் வெளிநாடுகளுக்கு பறக்கத் துடிக்கும் கணவன், மகள் பேராசையால் அவமானத்துக்கும் மன அழுத்தத்துக்கும் உள்ளாகும் ஒரு நடுத்தரக் குடும்பத்துப் பெண்ணின் பிரச்சினையை மய்யமாகக் கொண்டு வெளிவந்த படம் '36 வயதினிலே'. இப்போது மற்றொரு திரைப்படம் 'காக்கா முட்டை'.

சென்னை நகரத்தின் மய்யப் பகுதியிலேயே சமூக நீரோட்டத்திலிருந்து ஓரம் கட்டப்பட்டு, ஊடகங்களின் வெளிச்சம் பரவாத விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கையில் 'உலகமயமாக்கல்' உருவாக்கிடும் சமூக-பண்பாட்டுத் 'தீண்டாமைகளை' பேசுகிறது 'காக்கா மூட்டை'. மக்களுக்காகவே கலை எனும் மானுடத் தத்துவத்துக்கு உயிர் கொடுத்திருக்கும் அற்புதப் படைப்பு என்று துணிந்து கூற முடியும். இளம் மனைவியின் கணவன் சிறையில். அவரைப் பிணையில் வெளியில் எடுப்பதற்கு வழக்கறிஞர் கேட்கும் தொகையைத் தர முடியாத கவலை; மன அழுத்தம். பெரிய காக்கா முட்டை, சிறிய காக்கா முட்டை என்ற அடையாளப் பெயர்களைக் கொண்ட பள்ளிப் படிப்பைத் தொடர முடியாத இரண்டு மகன்கள். அவர்கள் மீது பாசமழை பொழியும் அப்பத்தா. காக்கைக்கும் 'குப்பத்து' சிறுவர்களுக்கும் சுதந்திரமான வெளியை தந்த அந்த பரந்த மைதானம், பன்னாட்டுக் கம்பெனியால் அரசியல் தலைவர்களின் தரகுகளோடு விலை பேசப்பட்டு விற்கப்படுகிறது. காக்கைகள் பறப்பதும்; அவர்களுக்கு அடைக்கலம் தந்த மரங்கள் வெட்டி சாய்க்கப்படுவதும்; வெறுமையும் சோகமும் கலந்த உணர்வுகளோடு சிறுவர்கள் அதைக் கண்டு வேதனைப்படுவதும் - அங்கே நிறுவப்பட்ட 'பீட்சா' உணவகத்தினால் தூண்டப்பட்டு, அதை வாங்கிச் சாப்பிடும் ஆசை வெறியில், அதற்காக காசு சேர்க்கத் துடிப்பதும், அதில் சிறுவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளுமாக - கதை நகருகிறது.

படத்தின் கதை மாந்தர்கள் அனைவருமே இயல்பாகப் பேசுகிறார்கள். எவருக்கும் பெயர்



இல்லை. 'கதாநாயகர்கள்' என்ற பிம்பங்களை தகர்த்து, படம் முழுதும் இந்த சிறுவர்களே நாயகர்களாக வலம் வருகிறார்கள் - பெரிய காக்கா முட்டை, சிறிய காக்கா முட்டை என்ற அடையாளப் பெயர்களுடன். இவர்களின் தோழராக வரும் 'பழரசம்' என்பவருக்கும் அடையாளப் பெயர்தான். கதை பாத்திரங்கள் வெளிப்படுத்தும் தனித்துவமான பண்புகளும் குணங்களுமே அவர்களுக்கான அடையாளங்களாக்கப்பட்டிருக்கிறது. பணக்கார சிறுவனை அவன் வீட்டுக் கம்பிக்கு வெளியே எப்போதும் சந்திக்கும் 'காக்கா முட்டை' சகோதரர்களுக்கு - பணக்கார சிறுவன் அணிந்திருக்கும் உண்மை கடிகாரம்; அவர்கள் வீட்டு 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நாய்; சொகுசு வாழ்க்கை எல்லாம் வியப்பைத் தருகிறது; ஏங்குகிறார்கள். பணக்கார சிறுவனின் வீட்டு நாயின் விலை ரூ.25 ஆயிரம். ஆனால், இந்த சிறுவர்களின் அப்பா, பிணையில் வெளிவர ரூ.30,000 இருந்தாலே போதும்.

ஒரு பீட்சாவின் விலை ரூ.300. அதை வாங்கிச் சாப்பிட, ஒரு மாதம் முழுதும் கரித்துண்டுகளைப் பொறுக்கி விற்கிறார்கள். பணத்தைச் சேர்ந்து கடைக்குப் பேகும்போது உள்ளே நுழைய அனுமதி கிடைக்க வில்லை. காவலாளியால் விரட்டப்படுகிறார்கள். கால் சட்டைப் பையோடு எப்போதும் இணைந்திருந்த 'பீட்சா' படம் போட்ட விளம்பர நோட்டீசு, அப்பத்தா மரணத்திற்காக முழுக்குப் போடும் தண்ணீரில் அப்படியே அடித்துச் சென்று, சாக்கடைக்குள் போய்விடுகிறது. பேரப் பிள்ளைகளின் 'பீட்சா' ஆசையை நிறைவேற்ற அப்பாத்தா முயற்சிக்கிறார். 'பீட்சா' விளம்பரப் படத்தைக் கையில் வைத்துக் கொண்டு, தோசையை சுட்டு, அதன் மீது பழங்களை காய்கறிகளை அடுக்கி, பீட்சாவாக்கி சாப்பிடச் சொல்கிறார். அந்த பீட்சா, அவர்களின் வாயில் இறங்க மறுக்கிறது. படத்தின் இறுதிக் காட்சியில், 'பீட்சா' நிறுவனம் மேள தாளத்துடன் சிறுவர்களை வரவேற்று, பீட்சாவை சாப்பிடக் கொடுக்கிறது. வாயில் வைத்து சாப்பிடத் தொடங்குகிறார்கள். "என்னடா இது? கொழ கொழன்னு நல்லவா இருக்குது... இதுக்கு, பாட்டி சுட்ட தோசையே நல்லா இருக்குடா" - அத்துடன் படம் முடிகிறது.

ஒவ்வொரு காட்சியும் நுணுக்கமான செய்திகளைக் கூறுகிறது. 'பீட்சா கார்ப்பரேட்' நிறுவன முதலாளிக்கு ஆலோசகர்களாக வரும் அவரது வகுப்புத் தோழர், ஆர்வக்கோளாறில் முன் வைக்கும் கருத்துகள் நகைச்சுவை வெடிகளாகின்றன. கார்ப்பரேட் முதலாளியின் ஆலோசகர் குழுவில் பார்ப்பனர் ஒருவரையும் அடையாளப்படுத்தியிருக்கிறார்கள். நிலக்கரித் துண்டுகளை எடைக்கு வாங்கும் கடை உரிமையாளர், குடிபோதையில் சத்ரபதி சிவாஜி வீரனாகப் போராடி நாட்டைப் பிடித்தாலும், அவன் ஆட்சியைப் பிடிக்க முடியாமல், 'வர்ணாஸ்ரமம்' தடுப்பதை வசனங்களாக பேச வைத்திருக்கிறார், இயக்குனர் மணிகண்டன். 'குப்பங்' களிலும், ஏமாற்றுக்காரர்கள் இருக்கிறார்கள்; இவர்கள் 'குற்றவாளி'களாக தள்ளப்படுவதற்கான சமூகக் காரணங்களை நுட்பமாக படம் சித்தரிக்கிறது.

மிகையற்ற நடிப்பு; ஒப்பனை இல்லாத கதாபாத்திரங்கள், தெளிவான திரைக்கதை, தேசிய விருது பெற்றுள்ள இந்தப் படம், இப்போது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் வெற்றிகரமாக ஓடுகிறது. குழந்தைகள் வழியாக, 'உலகமயம்' உருவாக்கிடும் - சமூகச் சீரழிவுகளை கூறும் இத் திரைப்படத்துக்கு குழந்தைகளுக்கான சிறந்த படமாக மட்டும் தேர்வு செய்தது நியாயம் தானா? சிறந்த திரைப்படத்துக்கான விருதை வழங்கியிருக்க வேண்டும். இயக்குனர் உள்ளிட்ட தயாரிப்புக் குழுவினர் அனைவருமே பாராட்டுக்குரியவர்கள்.

படத்தைப் பார்ப்பவர்கள் மனத் திரையிலிருந்து படத்தின் காட்சிகளும் பேச்சுகளும் நீங்க மறுக்கின்றன என்பதே இப்படத்தின் வெற்றி.

**– கண்டு வந்தவன்**

## சக்தி ரேணுகா–பிரபாகரன் மணவிழா

சேலம் மாநகர திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் இரா. வீரமணி–வீரலட்சுமி ஆகியோரின் மகன் வீ.பிரபாகரன், பி.பி.ஏ., மோட்டூர் ஞா. சக்திவேல்–ச. தாமரைச் செல்வி ஆகியோரின் மகள் ச. சக்தி ரேணுகா ஆகியோர் வாழ்க்கை துணை ஏற்பு விழாவை சேலம் மாநகர திராவிடர் கழகத் தலைவர் பூ.வடிவேல் தலைமையில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி நடத்தி வைத்தார். காவேரிப்பட்டிணம் எஸ்.எம். கல்யாண மகாலில் நடந்த மணவிழாவில் தி.க. பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அருள்மொழி, சேலம் மாநகர கழகத் தலைவர் பாலு, சேலம் கழக மாவட்டத் தலைவர் ச. சக்திவேல், திருப்பூர் பின்னலாடை ஏற்றுமதி யாளர் சு.மகேந்திரன், திருச்சி பின்னலாடை விற்பனையாளர் எம்.இராஜவேல் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி உரையாற்றினர்.



# ஆட்சிகளை விமர்சனத்துடன் ஆதரித்தவர்தான், பெரியார்!

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கிறார். பெரிய செய்தியாக அந்த முருகேசன் வழக்கைப் பற்றி எழுதுகிறார். 'ஆதிதிராவிடர் கோயில் பிரவேச வழக்கு. எதிரி விடுதலை பெற்றார். சீமான் இராஜகோபாலாச்சாரி வாதம்' என்று பெரியதாக செய்தி போட்டு பெரியார் எழுதியிருக்கிறார்.

ஒரு தலித் உடலை, தாழ்த்தப்பட்டவரின் உடலை புதைத்த இடத்திலிருந்து எடுப்பது எவ்வளவு பெரிய அவமானம். அதற்காக வழக்கு போட்டு, அதில் வெற்றி பெற்ற செய்தி கிடைத்தபோது பெரியார் சொல்கிறார், 'நான் இன்னும் நூறு வருசம் வாழ்வதற்கு தெம்பு வந்துருச்சு' அப்படின்னு சொன்னாருன்னா, பெரியார் எந்த உணர்விலிருந்திருக்கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள்.

மற்றொரு செய்தியும் இதில் இடம் பெற்றுள்ளது. பெரியார் மலாயாவில், தோட்டப் பகுதிக்குப் போகிறார். தொழிலாளர் பகுதிக்கு அழைத்துச் செல்கிறார்கள். அப்ப பெரியார் சொல்கிறார், 'நான் இந்த நாட்டிற்கு வந்து முக்கியமானவர்களைச் சந்திக்காமல் போய் விடுவோமோ என்று எண்ணிக் கொண்டிருந்தேன். எனக்கு வருத்தமாக இருந்தது. அந்த வருத்தம் எனக்குத் தீர்ந்து விட்டது, இன்று உங்களை பார்த்ததுமே' என்கிறார். அவர் யாரைப் பார்க்க வேண்டும் என்று கருதுகிறார் என்பதைதான் நான் சொல்ல வர்றேன், 'மலாயாவில் நான் கால் வைத்தப் பிறகு பெரிய அதிகாரிகளைப் பார்த்தேன். செல்வர்களைப் பார்த்தேன். நகரவாசிகளைப் பார்த்தேன். ஆனால் இப்போது உங்களைக் காணும் போது ஏற்படும் திருப்தி மகிழ்ச்சியெல்லாம் அப்போது ஏற்படவில்லை' என்கிறார். தோட்டத் தொழிலாளர்களைப் பார்த்துப் பேசுகிறார்.

இதே பெரியார்தான் காங்கிரஸ்காரராக இருந்த போது காங்கிரசு மாநாட்டில் பேசினார். பெரியார், 'குடிஅரசு' இதழை 1925இலேயே தொடங்கிவிட்டார். 5 ஆம் மாதம் தொடங்கிவிட்டார். ஆனால் 11ஆம் மாதம் தான் கட்சியை விட்டு வெளியே போறார். 6 மாதம் காங்கிரசு கட்சிக்காகத்தான் பத்திரிக்கை நடந்தது. காங்கிரசு மாநாட்டில் பெரியார் பேசிய பேச்சுகளெல்லாம் 'குடிஅரசி'ல் வருகிறது. அதில் காரைக்குடியில் ஒரு மாநாடு நடக்கிறது. பள்ளத்தூர் அருகில். இராமநாதபுரம் ஜில்லா மாநாடு. பெரியார்தான் காங்கிரசு கமிட்டியின் பொதுச் செயலாளர்.

தலைமையுரையில் அவர் பேசுகிறார். உலகமே தொழிலாளர்களுடையதுதான். அவர்கள்தான் பெரும்பான்மையானவர்கள். நியாயமாக காங்கிரசு தொழிலாளர்களுடையதாகத்தான் இருக்க வேண்டும். இப்போது பணக்காரர்களுடையதாகவும் படித்தவர்களுடையதாகவும் பார்ப்பனருடையதாகவும் கட்சி இருக்கிறது. இது எப்போது தொழிலாளர்களுடையதாக ஆகிறதோ அப்போதுதான் இது உண்மையான கட்சியாக இருக்குமென்று காங்கிரசுகாரன்கிட்ட காங்கிரசு மாநாட்டுல பேசுறார்.

வேடிக்கையான மனிதராகத்தான் பெரியார் இருந்திருக்கிறார். ஆதரித்தவர்களை இப்படியா ஆதரிப்பார் என்பது போல பலர் பேசித் திரிகிறார்கள். இவை சரியான பார்வையல்ல என்பதை படித்தால்தான் தெரியும். அண்ணாவை ஆதரித்தார். காமராஜரை ஆதரித்தார். காமராஜரைக் காப்பாற்றினால் போதும் என்றுதான் சொன்னார். அண்ணாவை ஆதரிப்பேன் என்று சொன்னார். சொன்னது மட்டும்தான். ஆனால், தேவையானபோது கடுமையான விமர்சனங்களை எதிர்ப்புகளை தெரிவித்தே வந்திருக்கிறார்.

'மதப் பண்டிகைகளுக்கு விடுமுறை விடக் கூடாது' என்று பெரியார் பேசிவிட்டார். 'முன்பெல்லாம் எவனோ விடுமுறை விட்டுகிட்டு இருந்தான். இப்ப பகுத்தறிவுவாதிகள் நீங்களெல்லாம் வந்துவிட்டீர்கள். மதப்பண்டிகைகளுக்கு விடுமுறை விடாதீர்கள்' என்று எழுதினார். பெரியார் அறிக்கை வந்தது. விடுமுறைப் பட்டியலும் வந்தது. அதில் மீண்டும் மத விடுமுறைகள் இருந்தன. ஆவணி அவிட்டத்திலிருந்து எல்லாம் இருந்தது. பெரியார் தலையங்கம் ஒன்று எழுதினார். 'உனக்கும் பே...பே... உங்கப்பனுக்கும் பே... பே...' தலைப்பு. கீழே எழுதினார், 'அண்ணாதுரை நமக்கும் பே... பே... என்று சொல்லி விட்டார்' என்று எழுதினார். அதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. நாம் ஆதரிக்கிறோம் என்பதற்காக விமர்சனம் செய்யக் கூடாது என்பதெல்லாம் கிடையாது.

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது எழுதினார் பெரியார், "ஆராய்ச்சி மாநாடு என்றால் அறிஞர்கள் இருப்பார்கள். ஆராய்ச்சி செய்வார்கள், ஆய்வுக் கருத்துக்களை வெளியிடுவார்கள். அதைப் படித்துப் பார்த்து எங்கள் கருத்துகளை மாற்றிக் கொள்வோம். ஆனால் அண்ணாதுரை மகாமகத் திருவிழா நடத்திக் கொண்டிருக்கிறார். ஊர்வலம் விட்டுகிட்டு, சிலைகளை திறந்துகிட்டு, என்னய்யா இதெல்லாம் வேலை என்று. அரசாங்க கஜானாவைக் காலி செய்வதற்கு அண்ணாதுரைக்கு யார் அதிகாரம் கொடுத்தது" என்றார். ஆதரிப்பவர்களை கண்டிப்பது பற்றி கவலைப்பட்டதில்லை பெரியார்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, கலைஞர் தமிழுக்கு ஆபத்தென்றால் உயிரை விட்டுவிடுவேன் என்றார். 'கடவுளுக்காக உயிரைக் கொடுக்கும் முட்டாள் பக்தனுக்கும் இந்த மந்திரிக்கும் என்ன வித்தியாசம் என்று கேட்கிறேன்' என்று பெரியார் எழுதினார். 'நீ, நான் தேர்தல் அறிக்கையில் சொன்னதை நிறைவேற்றாவிட்டால் பதவியைத் துறப்பேன் என்று கப்சா விட்டுக் கொள்ளலாம்'. 'உயிரை விட்டுக் கொள்வேன் என்று கூட கப்சா விட்டுக் கொள்ளலாம். ஆனால் அந்த முட்டாள் பக்தனுக்கும் உனக்கும் என்ன வேறுபாடு' என்று அறிக்கை விட்டவர்தான் பெரியார்.

இப்போது மட்டுமல்ல, நீதிக்கட்சியை ஆதரிக்கும்போதும், பெரியார் இப்படித்தான் 1925 இல் காங்கிரசிலிருந்து வெளியே போய் 1927 நீதிக் கட்சியை ஆதரிக்கிறார். கோயமுத்தூரில் ஒரு தொழிலாளர் போராட்டம். அதில் பெரியார் பேசுகிற போது சொல்கிறார், "தொழிலாளர்களே! தொழிலாளர்கள் இல்லாமல் இந்நாட்டில் உற்பத்தியில்லை. பணம் இருந்தால் சாப்பிட முடியாது. உற்பத்தி இருந்தால்தான் சாப்பிட முடியும். ஆனால் இந்த நாட்டினுடைய கேட்டைப் பாருங்கள். யார் இந்த நாட்டிற்கு முதலமைச்சர் என்று பாருங்கள். அப்ப பொப்லி ராஜா இருக்கிறார். ஒரு ஜமீன்தார் இந்த நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார். கேவலம் நடந்து கொண்டிருக்கிறது" என்று பெரியார் பேசுகிறார். 'நீதிக்கட்சியை ஆதரித்துக் கொண்டிருக்கிறார். சென்னைக்கு மேயர் யாரென்று பாருங்கள், ஒரு கந்துவட்டிக்காரர் முத்தையா செட்டியார் இருக்கிறார், இதுதான் இந்த நாட்டிற்கு வந்த கேடா?' என்று எழுதுகிறார். யாரை, ஆதரிக்கிறவர்களைப் பற்றி எழுதுகிறார்.

இப்படி தொழிலாளர்கள் பற்றிய பார்வை, தொழிலாளர்களுக்கான இயக்கம்தான் திராவிடர் கழகம். அவர் சொல்றார், "உண்மையான தொழிலாளர் இயக்கம் தான் திராவிடர் கழகம். வேலை செய்றவங்கதான் எங்ககிட்ட இருக்காங்க. அவங்களுக்காகத்தான் நாங்க. வேலை செய்யாத பார்ப்பானுக்கு வேற இயக்கம் இருக்கு. உழைப்பாளிகள் கட்சிதான் எங்க கட்சி" என்று பேசுகிறார்.

அதே போல் இன்னொரு செய்தியைப் பார்க்கலாம். 1947 இல் பெரியார் மலாயா வருவார் என்பதற்காக 'தமிழ்ச் சங்கம்' என்ற அமைப்பின் சார்பாக நிதித் திரட்டுகிறார்கள். பெரியாருக்கு கொடுக்க வேண்டுமென்று நிதி திரட்டுகிறார்கள். 214 வெள்ளி 15 காசு வசூலாகியிருக்கிறது. ஆனால் பெரியார் பயணம் வரவில்லை. பின் 1954 இல்தான் வருகிறார். 54 இல் வந்த போது, அதில் சொல்லி, அதில் பதிவு செய்கிறார்கள், 1947 இல் தங்கள் பயணம் நிறுத்தப்பட்டதையொட்டி, நாங்கள் வசூல் செய்த பணத்தை இப்போது அளிக்கிறோம். எவ்வளவு, ஏழு ஆண்டுகள் கழித்து இது நடைபெறுகிறது. நம்ம ஆளு மறந்துவிடுவான். அப்ப வசூல் செய்து கொள்ளலாம் என்று, ஆனால் அவர்கள் அதைத் தனியாக வைத்திருந்து அதைக் கொடுக்கிற பல நெறிமுறைகளை காட்டியிருக்கிறார்.

அவர் (பரமசிவம்) மலேசியத் திராவிடர் கழகம் இயங்குகிற முறையைப் பற்றியெல்லாம் சொன்னார். தோழர்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கலாம். அங்குதான் 5 மாடிக் கட்டிடத்தில் திராவிடர் கழகம் தலைமையகம் இருக்கிறது. திருமணம் பதிவு செய்கிற உரிமையை மலேசிய திராவிடர் கழகம் பெற்றிருக்கிறது. திருமணத்தை ரிஜிஸ்டர் ஆபிசில் பதிவு செய்ய வேண்டியதில்லை. திராவிடர் கழக அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டால் போதும் என்ற உரிமை திராவிடர் கழகத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி சிறப்புமிக்க கழகமாக முறையாக இயங்குகிறது. பல நெறிப்பாடுகளை நாம் பார்க்கிறோம்.

இன்னொன்றும் பெரியார் சொல்கிறார். "தயவு செய்து நீங்கள் மீண்டும் இந்தியாவிற்கு வந்துவிடாதீர்கள். நீங்க போனீங்க. அங்க நன்றாக இருக்கிறீர்கள். நீங்கள் ஜாதி இல்லாமல் இருங்கள். எங்கள் நாட்டில் இருக்கிற மாதிரி அந்த அளவில் இங்க ஜாதி இல்லை. ஒரு முறை மலாயா நாட்டுக்குப் போயிட்டு வந்து இரண்டாவது முறை போனபோது ஜாதி இல்லாத நாட்டை பார்க்கிறார். ஜாதி இல்லாத நாடல்ல, ஜாதிக் கொடுமைகள் குறைந்த நாட்டை, ஜாதி வேறுபாடு இல்லாத நாட்டைப் பார்க்கிறேன்" என்கிறார். அதைப் பார்த்து அவர் மகிழ்ச்சி அடைகிறார். பெருமையோடு சொல்றார். 'நீங்கள் இந்த நாட்டிலிலேயே இருங்கள். திரும்பி தமிழ்நாட்டிற்கு வந்துவிடாதீர்கள்' என்று பேசுகிறார்கள். இதில் தேசப்பற்றெல்லாம் போயிடும் என்றெல்லாம் எப்போதும் பெரியார் பார்க்கவில்லை. அவர் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி வருகிறார். "எனக்கு மொழிப்பற்று இல்லை. நாட்டுப்பற்று இல்லை. இனப்பற்று இல்லை. ஒன்றும் இல்லை. ஒரே பற்று இருக்கிறது. மாந்தப் பற்று மட்டும்தான். மனித நேயம்தான் எனது கொள்கை. அது போதும் எனக்கு. வேறு ஒன்றும் வேண்டாம். எதுபோனாலும் கவலையில்லை" என்பதாகத்தான் பெரியார் எழுதுகிறார். அதை அங்கிருந்த தலைவர்களும் வரவேற்றிருக்கிறார்கள். பெரியாருக்கு உடன் பணியாற்றியவர்கள் கிடைத்ததைவிட அங்கிருந்தவர்களெல்லாம் பெரியாருக்கு உதவியாக இருந்திருக்கிறார்கள்.

### ஏ.ஜி.கே. பற்றிய நூல்

நூலைத் தொகுத்துள்ள தோழருடைய (கவி) பணிகளைப் பற்றி கொஞ்சம் சொல்லிவிட வேண்டும். இதில் பழைய துண்டறிக்கைள், எப்போதோ போட்ட துண்டறிக்கைகள், அதையெல்லாம் எடுத்து படியெடுத்து பதிவு செய்திருக்கிறார். அடுத்து தோழர் பசு.கவுதமன் இருக்கிறார். ஓர் அரிய நூலை படைத்திருக்கிறார். ஏ.ஜி.கே. வாழ்வைப் பற்றி எழுதியிருக்கிறார். அதன் தொடர்ச்சியாக வெண்மணி பற்றிய உண்மைகளைக் கொண்டு வரவேண்டும் என்பது அவரது நோக்கம். வெண்மணியில் திராவிடர் கழகத்தின் பங்கு என்ன என்பது மறைக்கப்பட்டுவிட்டதே என்பதுதான். கோபால கிருட்டிண நாயுடு என்பவர் பின்னால் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டவர். பின்னர் கொல்லப்பட்டார் என்று. ஆனால் அதில் கைதானவர்கள் யாரென்றால் 11 பேர் திராவிடர் கழகத்துக்காரர்கள். ஒருவர் கம்யூனிஸ்ட். கொலையை செய்தவர்கள். மார்க்சிய லெனினிய அமைப்பைச் சார்ந்தவர்கள். உண்மைதான். ஆனால், இதில் கைது செய்யப்பட்டவர்கள் திராவிடர் கழகத்தினர். அவர்கள் எல்லாம் ஆயுள் தண்டனைப் பெற்றார்கள். மேல் முறையீட்டிற்கு போய் அனைவரையும் சென்னை உயர் நீதிமன்றம் விடுவித்துவிட்டது. அதற்கான ஆவணத்தை தோண்டி எடுக்க வேண்டியுள்ளது.

ஆனால், தோழர் (கவி) எப்போதோ நடந்த 30 களில் 40 களில் 29 களில் நடந்ததையெல்லாம் எடுத்து இன்றைக்கு கொடுத்திருக்கிறார். தமிழரின் வரலாற்றை சுயமரியாதை இயக்கத்தின் வரலாற்றை பல செய்திகளை பார்க்க முடிகிறது.

பள்ளிகளின் பெயர்களை எல்லாம் பார்க்க முடிகிறது. ஈ.வெ.ரா. பள்ளி, தாலமுத்து தொடக்கப் பள்ளி, பாரதிதாசன் தொடக்கப் பள்ளி, இராவணன் தொடக்கப் பள்ளி. அப்படித்தான் பெயர் இருக்கு. அங்கிருக்கிற தொடக்கப் பள்ளிகளின் பெயர், தமிழர் வாழ்வியலுக்காக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களின் பெயர்களை வைத்துதான் பள்ளிகளுக்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். வெறும் தமிழ்ப்பள்ளி மட்டும் அவர்கள் நடத்திட வில்லை. அங்கிருந்த மாணவர்களாக இருந்தவர்கள், ஆசிரியராக இருந்தவர்கள் பாடினார் என்பது போன்ற பதிவுகளெல்லாம் மகிழ்ச்சியாக நாம் அங்கே போய் இருந்துவிடக் கூடாதா என்ற வண்ணம் பதிவுகளை தோழர் கவி திரட்டிக் கொடுத்திருக்கிறார்.

(அடுத்த இதழில் முடியும்)

DATE OF PUBLICATION 18.06.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# கழகத் தோழர்களுக்கு முக்கிய வேண்டுகோள்

சிறீலங்காவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன் அய்.நா. நிறுத்தக் கோரி, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் உலகம் முழுதும் கையெழுத்து இயக்கங்களை நடத்தி வருகிறது. தமிழ்நாட்டிலும் கையெழுத்து இயக்கம் நடந்து வருகிறது. ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புகள், மனித உரிமை இயக்கங்கள், கையெழுத்து இயக்கங்களை - மதுரை தூத்துக்குடி, திருச்செந்தூர், சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் தொடங்கியுள்ளனர். திராவிடர்விடுதலைக் கழகத் தோழர்கள் கையெழுத்து இயக்கங்களுக்கான படிவங்களை கீழ்க்கண்ட இணையத் தளங்கள் வழியாகப் பெற்றுக் கொள்ளலாம். அலைபேசியில் குறுஞ்செய்தி வழியாக இணையதள முகவரிகளை அனுப்பியும், விண்ணப்பங்களைப் பெறலாம். ஜூலை 10ஆம் தேதிக்குள் கையெழுத்தினைப் பெற்று அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கையெழுத்துகள் - அய்.நா. அவைக்கு உரிய முறையில் அனுப்பி வைக்கப்படும். படிவம் பெற வேண்டிய இணையதள முகவரி: periyarmuzhakkam.gmail.com. & periyarthalamweb@gmail.com.

**– கொளத்தூர் மணி, தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.**

# அய்.அய்.டி.யை எதிர்த்து திருச்சியில் கழகம் ஆர்ப்பாட்டம்

சென்னை அய்.அய்.டி.இல் இயங்கி வந்த அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டத்திற்கு மத்திய அரசு விதித்துள்ள தடையை இரத்து செய்யக் கோரியும், மத்திய அமைச்சர் ஸ்மிருதி இராணியை கண்டித்தும், அவரது படத்தை எரித்தும் 1.6.2015 திங்கள்கிழமை காலை 11 மணிக்கு, திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள பெரியார் சிலை முன்பு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் புதியவன், முருகானந்தம், திருவரங்க நகர செயலாளர் அசோக் மற்றும் த.பெ.தி.க. தோழர்கள் மாநில பரப்புரை செயலாளர் விடுதலை அரசு, மாவட்டச் செயலாளர் கமலக்கண்ணன், வின்சென்ட், பெரியார் பாசறை அன்பழகன், ஆதி தமிழர் கட்சி வீரமுருகன் (மாவட்டத் தலைவர்), எஸ்.டி.பி.ஐ. மாவட்டத் தலைவர் சம்சுதீன் உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர். அனைவரும் கைது செய்யப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர்.

### நெமிலியில்

3.6.2015 அன்று வேலூர் மாவட்டம் நெமிலியில் தமிழின உரிமை கூட்டமைப்பு சார்பில் சென்னை அய்.அய்.டி.யில் அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டத்தை



தடை செய்ததைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நெமிலி பெரியார் சிலை அருகில் மாலை 4 மணியளவில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட அமைப்பாளர் திலீபன் தலைமை வகித்தார். மோகன் (ம.க.இ.க.), சங்கர் (தி.க.), ஜனார்த்தனன் (தி.மு.க.), பழனி (வி.சி.), சென்னை இரா. உமாபதி (தி.வி.க.) ஆகியோர் கண்டன உரையாற்றினர். திருநாவுக்கரசு, பாலாஜி, இராதாகிருஷ்ணன் உள்பட பல்வேறு அமைப்பைச் சார்ந்த தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். நரேஷ் நன்றி கூறினார்.

# மன்னை கழகத் தோழர்கள் விடுதலை

மன்னார்குடியில் திராவிடர் விடுதலைக்கழகத்தினர் 7 பேர் இரண்டு வழக்குகளில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுபற்றிய விவரம்: கடந்த ஆண்டு திருப்பதிக்கு வருகை தந்த இலங்கை அதிபர் இராஜபக்சேவை கண்டித்து மன்னார்குடியில் அவரது உருவபொம்மையை எரித்து கழகத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதுபோல் சென்னையில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் செய்தி தொடர்பாளர் உமாபதி தாக்கப்பட்டதைக் கண்டித்தும் மன்னார்குடியில் ஆர்பாட்டம் நடைபெற்றது. மேற்கண்ட இரண்டு போராட்டங்களும் போலீசாரின் அனுமதியின்றி நடைபெற்றதாக கூறி போரட்டத்தில் ஈடுபட்ட கழக மாவட்ட செயலாளர் காளிதாசு உள்பட 7 பேர் மீது மன்னார்குடி போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கு விசாரணை மன்னார்குடி சிறப்பு குற்றவியல் நீதிமன்றத்தில் நடைபெற்றது. வழக்கறிஞர்கள் செந்தமிழ்செல்வன், பாலசுப்ரமணியன் ஆகியோர் கழகத்தினருக்காக வாதாடினர். வழக்கை விசாரித்த நீதிபதி பன்னீர்செல்வம் அனைவரையும் விடுதலை செய்து நேற்று முன்தினம் தீர்ப்பளித்தார்.

# கழக முன்னணி செயல்வீரர் ‘ஆட்டோ’ சரவணன் முடிவெய்தினார்





சென்னை மாவட்ட கழகச் செயல்வீரர் ஆட்டோ சரவணன் என்று அழைக்கப்பட்ட சரவணன் (39), 11.6.2015 அன்று சென்னை அரசு பொது மருத்துவமனையில் முடிவெய்தினார். 1996ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயல்பட்ட முன்னணித் தோழர்களில் ஒருவர் சரவணன். திருவல்லிக்கேணி பகுதி கழகத் தோழர்கள், உடல் நலிவடைந்த சரவணனுக்கு உரிய மருத்துவ சிகிச்சைகள் வழங்கி காப்பாற்றிட பெரும் முயற்சிகளை மேற்கொண்டனர். முயற்சிகள் வெற்றி பெறாமலே சரவணன் விடைபெற்றுக் கொண்டார். எப்போதும் கலகலப்பாக பேசுவதிலும், கொள்கைகளை விவாதிப்பதிலும் ஆர்வம் கொண்ட தோழர். கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், தோழர்களுடன் கழக சார்பில் இறுதி மரியாதை செய்தார். ஜூன் 12ஆம் தேதி காலை இறுதி ஊர்வலம் நடந்தது. அவரது உடலை கழகப் பெண்களே சுமந்து, இடுகாடு வரை சென்றனர்.

உடலுக்கு கழகக்கொடி போர்த்தி, கொள்கை முழக்கங்களுடன் சென்ற இறுதி ஊர்வலம், எவ்வித மூடச் சடங்குகளும் இன்றி எரியூட்டப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் கழகத் தோழர்கள், த.பெ.தி.க. தோழர்கள், ஆட்டோ ஓட்டுனர்கள், பகுதி வாழ் தோழர்கள் ஏராளமாக கலந்து கொண்டு, வீரவணக்கம் செலுத்தினர். கழகச் செயல்வீரர் ஒருவரை சென்னை மாவட்டக் கழகம் இழந்தது - கழகத்துக்கு பேரிழப்பாகும்.

# யோகா நாளா? இந்துத்துவ நாளா?

சர்வதேச ‘யோகா நாளை’ இந்துத்துவத்தின் செயல் திட்டமாக்க மோடி ஆட்சி முயற்சிக்கிறது. மதம்-கடவுள் நம்பிக்கைகளோடு தொடர்பில்லாத உடல் - மூச்சுப் பயிற்சியாக யோகாவை பரிந்துரைக்கலாமே தவிர, அதை பள்ளிகளில் கட்டாயப்படுத்தி, கடவுள்-மத நம்பிக்கைகளைத் திணிக்க முயல்வது கண்டிக்கத் தக்கது. பசி, வறுமை, சமூக நெருக்கடிகள் சூழ்ந்து நிற்கும் மக்கள் பிரச்சினைக்கு ‘யோகா’ தீர்வாகிட முடியாது. பிரச்சினைகளிலிருந்து மக்களை விடுவிக்கச் செய்ய வேண்டுமே தவிர, தப்பிக்கச் சொல்லும் வழிமுறைகள் வெற்றி பெற முடியாது. அய்.நா. அறிவித்துள்ள உலக யோகா தினத்தை பல இஸ்லாமிய நாடுகளும் ஆதரித்துள்ளன. சிறுபான்மை மக்கள் மீது வெறுப்புகளையும் பகைமை உணர்வையும் திணித்துக் கொண்டிருக்கும் பார்ப்பன மதவாதம், யோகாவின் வழியாக பிரச்சினைகளுக்கு வடிகால் தேடிக் கொள்ள அறிவுறுத்துவது, காதில் பூ சுற்றும் வேலையாகும்.

## கழகத்தின் வெளியீடுகள்

**“இவர்தான் பெரியார்”**–வரலாற்றுச் சுருக்கம்–ஆண்டுவாரியாக
தொகுப்பு: தஞ்சை மருதவாணன் விலை : ரூ.20

**1912லிருந்து 1973வரை திராவிடர் இயக்க வரலாற்றுச் சுவடுகள்**
தொகுப்பு: தஞ்சை மருதவாணன் விலை : ரூ.30


**“ஈழம் முதல் அணு உலை வரை...”**
சமகாலப் பிரச்சினைகளில் பெரியாரியல் பார்வை!
கழகத் தலைவர் கொளத்தூர் மணியின் ‘இமயம்’, ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சிப் பேட்டிகள்
விலை : ரூ.30

**“பண்பாடு–சமூகம்–அரசியலில் ‘மநு’வின் ஆதிக்கம்”**
கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் – விலை : ரூ.10

தொடர்புக்கு 9941759641

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 19 June 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஜூன் 25, 2015 | புரட்சி 14 | முழக்கம் 24 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ சபரிமலை அய்யப்பன் பாதுகாப்புக்கு ‘ரோபோ’க்களை (எந்திர மனிதன்) பயன்படுத்த நிர்வாகம் முடிவு.
**– செய்தி**

பெண் ‘ரோபோ’வாக இருந்துடப் போவுது; அப்புறம் சாமிக் குத்தமாயிடும்.

+ யோகாவில் ‘சூரிய நமஸ்காரம்’ வேண்டாம் என்பவர்கள் – கடலில் போய் விழலாம்.
**– பா.ஜ.க. எம்.பி. ஆதித்ய நாத்**

வேண்டாம் என்று முடிவு செய்தவர் மோடிதான்!

+ ‘அங்கன்வாடி’யில் குழந்தைகளுக்கு முட்டை போட ம.பி. பா.ஜ.க. ஆட்சி தடை.
**– செய்தி**

இப்படியே போனா, கோழிகளே முட்டை போட தடை விதிச்சுடுவாங்க போல!

+ இந்தியாவில் 2015இல் பசி, பட்டினியால் வாடுவோர், 19 கோடியே 40 இலட்சம் பேர்.
**– சீத்தாராம் எச்சூரி**

அம்புட்டு பேரையும் அப்படியே ‘யோகா’வுக்கு கொண்டு வாங்க! மனசோடு உடலை இணைச்சுக் காட்டுவோம்; அப்பவே பசி பறந்து போயிடும்!

+ கோயிலுக்கு தேர் செய்வதில் ரூ. 60 இலட்சம் மோசடி; திருநின்றவூர் பார்ப்பன அர்ச்சகரை நீக்கியது அறநிலையத் துறை.
**– செய்தி**

இதற்குத்தான் கோயிலில் அரசு தலையீடே இருக்கக் கூடாதுன்னு இராம கோபாலன் தலையில அடிச்சுக்குறாரு! யாரு கேட்கிறா?

+ பல ஆண்டுகளாக போர் எதுவுமே நடக்காததால் இராணுவத்துக்கு மரியாதையே இல்லை.
**– இராணுவ அமைச்சர் மனோகர் பாரிக்கர்**

அதுக்காக, உள்நாட்டுப் போரை தொடங்கிடாதீங்கய்யா...

+ பீகாரில் ஷேக்புரா மாவட்டத்தில் கோயில் பிரசாதம் சாப்பிட்ட 50 குழந்தைகள் வாந்தி மயக்கம்.
**– செய்தி**

‘மேகி நூடுல்ஸ்’ன்னா தடை போட்டிருக்கலாம்; கோயில் பிரசாதமாயிற்றே!

+ வர்ணபூஜை நடத்த சுற்றறிக்கை விட்ட தலைமைப் பொறியாளர் மீது மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு!
**– செய்தி**

அதனால் என்ன? வழக்கிலிருந்து விடுதலை பெற யாகம் நடத்த சுற்றறிக்கை அனுப்புவாரு, பாருங்க!

+ விநாயகன் கடவுள் சிலைகளை சீனாவிலிருந்து இறக்குமதி செய்வது கவலையைத் தருகிறது.
**– இராணுவ அமைச்சர் மனோகர் பாரிக்கர்**

இதுக்கு ஏங்க வருத்தப்படுறீங்க? அவன் தான் ‘மாம்பழத்துக்கு’ உலகத்தையே சுற்றிய உலகக் குடிமகனாச்சே!

# அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் வழக்கு: எந்த நேரத்திலும் தீர்ப்பு வரலாம்

***அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகும் உரிமை குறித்து வழக்கின் விவாதங்கள் உச்சநீதிமன்றத்தில் முடிவடைந்துள்ளன. தீர்ப்பை உச்சநீதிமன்றம் தள்ளி வைத்துள்ளது.***

பெரியார் தனது வாழ்நாளில் இறுதியாக அறிவித்த போராட்டம், அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் ஆகும் உரிமை வேண்டும் என்பதாகும். கோயில் கர்ப்பகிரகத்துக்குள் ‘மதச் சுதந்திர உரிமை’யைப் பயன்படுத்திக் கொண்டு பார்ப்பனர்கள் தங்கள் ‘பிராமண’ பிறவி மேலாண்மையை சட்டப்படி உறுதியாக்கிக் கொண்டு, பார்ப்பனரல்லாத மக்களை ‘சூத்திரர்கள்’ என்று அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். கோயிலுக்குள் நுழையும் உரிமை, அனைத்து ஜாதியினருக்கும் வந்துவிட்டாலும், ‘கடவுளை’ தங்கள் மந்திரத்தின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ள பார்ப்பனர்கள், ‘கர்ப்பகிரக’ உரிமையை உறுதிப்படுத்த துடிக்கிறார்கள். 1971ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராவதற்கு வழிவிட பரம்பரை அர்ச்சகர் முறையை ஒழித்து, சட்டமன்றத்தில் ஒருமித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதை எதிர்த்து, ஜீயர்கள் உள்ளிட்ட பார்ப்பனர்கள் நேராக உச்சநீதிமன்றம் சென்றார்கள். ‘சேஷம்மாள் வழக்கு’ என்று அழைக்கப்பட்ட இந்த வழக்கை, உச்சநீதிமன்ற அரசியல் சட்ட அமர்வு விசாரித்தது. ‘அர்ச்சகர் நியமனம்’ ஒரு மதச்சார்பற்ற செயல்பாடு என்று கூறிய உச்சநீதிமன்றம், பரம்பரை வழியிலான அர்ச்சகர் நியமனத்தை ஏற்க மறுத்தது. அதே நேரத்தில் கோயில்களில் ‘பழக்க வழக்கங்களாக’ தொடரும் பூஜை முறைகள், அர்ச்சகர் முறைகள் தொடர வேண்டும் என்று கூறிவிட்டது.


‘ஆபரேஷன் வெற்றி; ஆனால் நோயாளி இறந்து விட்டார்’ என்று இந்தத் தீர்ப்பு அப்போது வர்ணிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, பெரியார் நூற்றாண்டு விழாவை கொண்டாடிய எம்.ஜி.ஆர். ஆட்சி, இது குறித்து ஆராய நீதிபதி மகாராஜன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. மதப் பண்டிதர்கள் அடங்கிய அந்த குழு, அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆக, ஆகமங்கள் தடை விதிக்கவில்லை என்று திட்டவட்டமாகக் கூறியது.

இதன் பிறகு 2002ஆம் ஆண்டு கேரளாவில் அர்ச்சகராக ஈழவ சமுதாயத்தைச் சார்ந்த இராஜேஷ் என்பவரை கேரள தேவஸ்வம்போர்டு நியமித்ததை எதிர்த்து, பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் போனார்கள். வழக்கை விசாரித்த இரண்டு நீதிபதிகள் அடங்கிய அமர்வு, அரசியல் சட்டம் அமுலுக்கு வந்துவிட்ட பிறகு, ஜாதி பாகுபாடுகளை நிலைநிறுத்தும் எந்த வழிபாட்டு முறைகளையும் ஏற்க முடியாது என்று கூறி, இராஜேஷ் நியமனத்தை உறுதி செய்தது. இந்த வழக்கை முன்னுதாரணமாகக் கொண்டு, 2006ல் தி.மு.க. ஆட்சி அனைத்து ஜாதியினரும் உரிய கல்வித் தகுதியுடன் அர்ச்சகராக நியமிக்க அரசாணை பிறப்பித்தது. இதை எதிர்த்து ‘ஆதி சைவ சிவாச்சாரியார் நலச் சங்கம்’ என்ற பெயரில் பார்ப்பனர்கள் உச்சநீதிமன்றம் சென்றனர். முன்னாள் அட்டர்னி ஜெனரல் கே.பராசரன், பார்ப்பனர்களுக்காக வாதிட்டார். தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வி. ராவ் வாதிட்டார். தமிழக அரசு வழக்கில் எந்த ஆர்வமும் காட்டாது விலகி நின்றாலும், அரசு நியமித்த வழக்கறிஞர் மிகவும் ஆர்வத்தோடு முழு அர்ப்பணிப்புடன் தனது கடமையை செய்தார். தமிழ்நாட்டில் அர்ச்சகர் பயிற்சிப் பெற்ற அனைத்து ஜாதி மாணவர் அமைப்பும் இந்த வழக்கில் தன்னை இணைத்துக் கொண்டது. இவர்கள் சார்பில் வழக்கறிஞர் கோவிலன் பூங்குன்றன் வாதாடினார்.

தமிழ்நாட்டில் இந்தப் பிரச்சினையில் தீவிர ஆர்வம் காட்டிய தமிழின உணர்வாளர்கள் சிலர், டெல்லியில் முகாமிட்டு, இதற்கான முழு செலவினையேற்று செயல்பட்டது குறிப்பிடத்தக்கது. கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணியுடன் தொடர்பு கொண்டு வழக்கிற்குத் தேவையான ஆவணங்களையும் பெற்று வந்தனர். 2001ஆம் ஆண்டு பெரியார் திராவிடர் கழகம் சார்பில், காஞ்சி காமாட்சியம்மன் கோயிலில் கர்ப்பகிரக நுழைவுப் போராட்டம் நடந்தது. 1000 தோழர்கள் கைதானார்கள். இதன் மூலம் இப் பிரச்சினை மீண்டும் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. வாதங்கள் உச்சநீதிமன்றத்தில் மே மாதம் முடிவடைந்த நிலையில் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. தீர்ப்பு எந்த நேரத்திலும் வெளி வரக் கூடும். ✦

# ஒரு களப்போராளியின் நினைவுகளும் நிகழ்வுகளும்

நாகை வட்டத்தில் களப் போராளியாக செயல்பட்ட தோழர் ஏ.ஜி. கஸ்தூரிரெங்கனின் (ஏ.ஜி.கே.) ‘நினைவுகளும் நிகழ்வுகளும்’ நூலை, கும்பகோணம் சாக்கோட்டையிலிருந்து ‘ரிவோல்ட்’ பதிப்பகம் வெளிக் கொண்டு வந்திருக்கிறது. ஏ.ஜி.கே. அவர்களுடன் நேரில் உரையாடி பதிவு செய்து மிகச் சிறப்பான தொகுப்பாக்கியிருக்கிறார் தோழர் பசு. கவுதமன். வெளியிட்டிருப்பவர் தோழர் இளங்கோவன்.




“வர்ண வேறுபாடுகளையும், வர்க்க வேறுபாடுகளையும் வெட்டிப் புதைத்த இரத்தக் கறை படிந்த கொடுவாளாய் - தூக்குக் கயிற்றைத் தொட்டு நின்ற சிறைப் பறவையாய் - சுயமரியாதையே சுதந்திரம் என்ற சுயத்தோடு அமைப்பாய் - இயக்கமாய் வாழ்ந்து கொண்டுள்ள ஒரு கருப்பு மனிதனின் சிகப்புப் பதிவு இது” - என்று தொகுப்பாசிரியர் முன்னுரையில் சுட்டியிருப்பது மிகைக் கூற்று அல்ல; உண்மைகளே என்பதை, நூலைப் படிக்கும்போது நிச்சயமாக உணர முடியும். நாகை, திருவாரூர், கீழ்வேளூர், திருக்குவளைப் பகுதிகளை உள்ளடக்கிய பகுதி நாகை வட்டம். இந்தப் பகுதியில் பல்லாயிரக்கணக்கில் விவசாயிகளை ஒருங்கிணைத்து, நடத்தப்பட்ட ஜாதிய ஒடுக்கு முறைகளுக்கு எதிரான போராட்டக்களம் வீறு கொண்டிருந்த காலம் 1962 முதல் 1975 வரையாகும். களப் போராளியாக பெரியார் இயக்கத்தின் போராட்டத் தளபதியாக நின்றவர் ஏ.ஜி.கே. விவசாயிகளைத் திரட்டி, பார்ப்பன பண்ணையார் கொடுமைகளுக்கு எதிராக விவசாயத் தோழர்களின் சுயமரியாதைக்கு நடத்தியப் போராட்டங்களின் பதிவுகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. அந்தணப்பேட்டை என்ற ஊரில், நீதிக்கட்சிக்காரரின் மகனாகப் பிறந்த ஏ.ஜி. கஸ்தூரி ரெங்கன், ‘குடிஅரசு’, ‘விடுதலை’ப் பத்திரிகைகளை படிக்கும் குடும்பச் சூழலில் வளர்ந்தவர். பெரியார் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை அறிவித்த 1957 ஆம் ஆண்டிலிருந்து, இவரின் தீவிரமான பெரியார்

**( 4ஆம் பக்கம்)**

**தலையங்கம்**

## மீண்டும் அவசர நிலையா?

இந்தியாவில் மீண்டும் நெருக்கடி நிலை வராது என கூற முடியாது என்று அத்வானி, ஆங்கில நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டி – பலத்த விவாதங்களை உருவாக்கியுள்ளது. அத்வானி, மோடியைத்தான் மறைமுகமாக குறிப்பிட்டுள்ளார் என்று எதிர்க்கட்சிகள் கூறுவதை, ஆளும் கட்சியினர் மறுக்கின்றனர். அவர் பொதுவாகக் கூறிய கருத்து என்கிறார்கள்.

1975ஆம் ஆண்டு இந்திரா காந்தி பிரதமராக இருந்தபோது, அரசியல் சட்டம் வழங்கியுள்ள ‘அடிப்படை உரிமைகளை’ தற்காலிகமாக நிறுத்தி வைத்து, அவசர நிலையை அறிவித்தார். ‘மிசா’ சட்டத்தின் கீழ் எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப் பட்டனர். ‘மிசா’ சட்டம் என்றால், (Maintenance of Internal Security Act) எந்தக் காரணமும் இல்லாமல் ஒரு வருடம் வரை சிறையில் அடைக்கும் சட்டம். பத்திரிகைகள், அரசு அதிகாரிகளால் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்கள் அனுமதித்த செய்திகள் மட்டுமே வெளியிட முடியும். அப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த அத்வானியும், ‘மிசா’வில் கைது செய்யப்பட்டவர்தான்.

‘அவசர நிலை’ இந்தியாவில் சட்டப்படி இப்போது அமுலில் இல்லை என்பது உண்மைதான். ஆனால், தமிழ்நாட்டிலோ அது வேறு வேறு வடிவங்களில் அமுலில் இருக்கிறது. இப்போது ‘மிசா’ சட்டம் இல்லை; அதற்கு பதிலாக ‘தேசிய பாதுகாப்பு’ சட்டம் இருக்கிறது. இப்போது ‘பத்திரிகை தணிக்கை’ என்று ஒன்று இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் ஆட்சியாளர்களை எதிர்த்து எழுதினால், ‘அவதூறு’ சட்டங்கள் உடனே பாய்ந்து விடுகின்றன. அவசர நிலை காலங்களில் பொதுக் கூட்டங்கள் நடத்த முடியாது. இப்போதும் தமிழ்நாட்டில் பொதுக் கூட்டங்கள் நடத்துவது அவ்வளவு எளிதானது அல்ல. காவல்துறை, கூட்டங்களுக்கு அனுமதிப்பது இல்லை. நீதிமன்றங்கள் வழியாகவே அனுமதி பெற வேண்டியிருக்கிறது. நீதிமன்ற அனுமதிக்குப் பிறகு கூட்டங்களில் பேசப்பட வேண்டிய கருத்துகளைக்கூட காவல்துறையே ‘கட்டளை’களாக பிறப்பிக்கிறது.

அவசர நிலை காலத்தில் ஆட்சி எந்திரங்கள் இந்திராவின் புகழ் பாடின. தமிழ்நாட்டிலும் அரசு எந்திரங்கள் முதல்வர் புகழ் பாடிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் அதிகார ஒடுக்குமுறைகளின் பிடியில் எதிர்க்கட்சிகள் கொண்டு வரப்பட்டு விட்டன. எனவே தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இனி புதிதாக அவசர நிலை என்று ஒன்று அறிவிக்க தேவையில்லை. இதே நிலை, இந்திய முழுவதிலும் எதிர்காலத்தில் வராது என்று உறுதியாக சொல்ல முடியாது. மத்தியில் மோடி ஆட்சிக்கு வந்த பிறகு அவரது நேரடி கட்டுப்பாட்டின் கீழ் அமைச்சகங்கள் கொண்டு வரப்பட்டு விட்டன. மோடியின் நம்பிக்கைக்கு உரிய பார்ப்பன அதிகார வர்க்கம், அமைச்சர்களை மீறி மோடியுடன் நேரடி தொடர்பில் செயல்படுகிறது. கல்வி, பண்பாட்டு மய்யங்களில் ஆர்.எஸ்.எஸ். காரர்களே தலைமைப் பதவிகளில் அமர்த்தப்படுகிறார்கள். இந்துக்களின் உரிமை என்ற பெயரில் பார்ப்பன மேலாண்மை திணிக்கப்படுவதோடு, பார்ப்பனர்கள் ‘மனுதர்ம பொற்காலம்’ மீண்டும் வந்துவிட்டது போலவே பேசி வருகிறார்கள். மாநில ஆட்சிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றி வரும் மதவாத சக்திகள், அதற்குப் பிறகு இந்தியாவை முழுமையான பார்ப்பன ஆட்சி யாக்குவதற்கு அதிகாரத்தைக் கையில் எடுக்கும் ஆபத்துகள் எதிர்நோக்கியிருக்கின்றன.

அத்வானி, மோடியைத்தான் குறி வைத்துப் பேசினார் என்ற கருத்துக்கு மறுப்பாக அத்வானி தந்துள்ள விளக்கம், ‘குளிக்கப் போய் சேறு பூசிக் கொண்ட கதை’யாகவே இருக்கிறது. “காங்கிரஸ் கட்சியை மனதில் வைத்துத்தான் அப்படிக் கூறினேன்” என்கின்றார். அப்படியானால் அதை வெளிப் படையாக சொல்லியிருக்கலாமே! காங்கிரசை குற்றம் சாட்டுவதில் அப்படி என்ன தயக்கம் அவருக்கு? அத்துடன், அத்வானி தனது விளக்கத்தை நிறுத்திடவில்லை. “ஆணவம் தான் சர்வாதிகாரத்துக்கு வழி வகுக்கிறது. இன்றைய தலைவர்கள் வாஜ்பாய் போல் அடக்கமானவர்களாக இருக்க வேண்டும்” என்கின்றார். இன்றைய தலைவர்கள் என்பது யாரை குறிக்கிறது என்று கேள்வி கேட்டால், அதற்கு ஒரு நீண்ட பட்டியலைத்தான் அத்வானி போட வேண்டியிருக்கும். அதில் மோடியும் அடங்கு வாரா என்பது குறித்து, அவர் விளக்க வேண்டியிருக்கும்.

ஒரு கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும். அவசர நிலையை அறிவிப்பதற்கான அதிகாரம் யாரிடம் இருக்கிறது? மத்தியில் ஆட்சியில் இருப்பவர்களிடம் தானே! இந்த நிலையில், ஆட்சியி லிருந்து விரட்டப்பட்ட காங்கிரசைத் தான் அப்படி கூறியதாக அத்வானி கூறுவது, காதில் பூ சுற்றுவது அல்லவா? கட்சிக்குள் தனது இருப்பை அடையாளப்படுத்திக் கொள்ள அத்வானி இத்தகைய சலசலப்புகளை உருவாக்கியிருந்தாலும்கூட, அவர் முன் வைத்துள்ள கருத்து மிகவும் ஆபத்தானது. தமிழ்நாட்டில் நடக்கும் அறிவிக்கப்படாத அவசர நிலையையும் இந்தியா முழுதும் எதிர்பார்க்கக்கூடிய அவசரநிலை ஆபத்துகளையும் எதிர் கொள்ள இயக்கங்கள் தயாராக வேண்டிய நேரம் வந்துவிட்டது.

# தமிழ்நாடு அறிவியல் மன்றம் நடத்திய குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம்

தமிழ்நாடு அறிவியல் மன்றம் சார்பாக குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம், 2015 மே 6 முதல் 10 முடிய ஐந்து நாள்கள் திண்டுக்கல் லைஃப் மையத்தில் நடைபெற்றது. திருப்பூர், ஈரோடு, கோவை, சென்னை, சேலம், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த நாற்பது குழந்தைகள் கலந்து கொண்டனர்.

முதல் நாள் மாணவர்கள் அறிமுக வகுப்புடன் தொடங்கியது. அறிமுக வகுப்பை ஆசிரியர் ரஞ்சிதா, பயிற்றுநர்கள் நீலாவதி, சந்திரமோகன், அறிவியல் மன்ற உறுப்பினர் மணிமாறன் ஆகியோர் நெறிப்படுத்தினர். ‘உடலியல்-உளவியல் ஓர் அறிமுகம்’ என்ற வகுப்பு நீலாவதி, சந்திரமோகன், மணிமாறன் ஆகியோரால் நடத்தப்பட்டது.

இரண்டாம் நாள் திருக்குறள் கவனகர் தமிழ் மகிழ்நன் அவர்களால் நெறிப் படுத்தப்பட்ட திருக்குறள் கவனக நிகழ்ச்சியும் திருக்குறளை எளிதாகப் படிப்பது குறித்த பயிற்சியும் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது.

பிற்பகலில் தொடர்பு கொள்ளுதல், திறன் குறித்த கலந்துரையாடல் வகுப்பு மணிமாறன், நீலாவதி, சந்திரமோகன் ஆகியோரால் நடத்தப்பட்டது. மாலை உடற்பயிற்சியும், தற்காப்புக் கலை பயிற்சியும், சூலூர் சிவ குமாரால் பயிற்றுவிக்கப்பட்டது. தொடர்ந்து திரைப்படங்களை எவ்வாறு பகுத்தாய்வது என்பது குறித்த வகுப்பு நடைபெற்றது. இவ்வகுப்பில் திருப்பூர் பாரதிவாசன் கலந்துகொண்டு, திரைப்படங்கள் குறித்து குழந்தைகளிடம் பேசினார்.

மூன்றாம் நாள், சுற்றுலா நாளாகக் கழிந்தது. ‘சிறுமலை’ பகுதிக்கு சுற்றுலா சென்று இயற்கை குறித்த பல்வேறு விளக்கங்களை அறிந்து கொண்டனர். மாலை அருளகம் பாரதிதாசன் சூழல் பாதுகாப்புக் குறித்த ஒளிப்படங்களைத் திரையிட்டு குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

நான்காம் நாள் காலை நிகழ்வாக, மூடநம்பிக்கைகள் குறித்த செயல் விளக்கம் நகுலன், பிரசாத் ஆகியோரால் நடத்தப் பட்டது. இதில் தாயத்து வைப்பது, பில்லி சூன்யம் வைப்பது போன்ற பல்வேறு மூட நம்பிக்கைகளை குழந்தைகளின் ஐயங்களைப் போக்கும் வண்ணமாக நிகழ்ச்சிகள் நடத்தப் பட்டன.

பிற்பகல் வகுப்பு பெருந்துறை லாவண்யா, சம்பத்குமார் ஆகியோரால் நடத்தப்பட்டது. ஆங்கிலத்தில் அழகாக எழுதும் பயிற்சியும், புத்துணர்வு பயிற்சிகளும் வழங்கப்பட்டன. அதைத் தொடர்ந்து சொர்க்கம், நரக மூடநம்பிக்கைக் குறித்த கலந்துரையாடல் வகுப்பு, ஆசிரியர் தமிழ்ச் செல்வனால் நடத்தப்பட்டது. இரவு உணவிற்குப் பின் ‘சிற்றுளி’ சிறுவர் மன்றங்கள் தொடங்குவது குறித்த கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இறுதி நாள் காலை பெருந்துறை தண்டா யுதபாணியின் உடற்பயிற்சி வகுப்பு நடை பெற்றது. பின்னர் திருப்பூர் ஆசிரியர் ராஜேஷ் குமாரின், ‘ஐ.ஏ.எஸ். தேர்வு ஓர் அறிமுகம்’ என்ற தலைப்பில் வகுப்பு நடத்தப்பட்டது. இறுதியாக பிற்பகலில் மீளாய்வு நடந்தது.

இம்முகாமில் அனைத்து நாள்களும் புகைப்படங்கள் மற்றும் ஒளிப்பதிவு ஆகியவற்றை ஆசிரியர் தனகோபால் எடுத்தார். ஆசிரியர் மாலதி கைவினைப் பொருள்கள் செய்வது குறித்த வகுப்பு எடுத்ததோடு குழந்தைகளை பரிவோடு கவனித்துக்கொண்டார்.

அனைத்து வகுப்புகளும் குழந்தைகளின் பங்கேற்பு மற்றும் செயல்பாடுகளுடன் நடந்தது. கூறப்பட்ட கருத்துகளை ஏற்றுக் கொள்வது என்கிற மனநிலையில் இல்லாமல் தமக்கு மாறுபட்ட கருத்து இருந்தபோது உறுதியோடு அதைத் தெரிவித்தது சிறப்பாக இருந்தது.

ஒவ்வொரு நாள் காலையும் குழந்தைகள் பங்கேற்ற மீளாய்வும் இரவு உணவுக்குப் பின் பயிற்றுநர்கள் பங்கேற்ற மீளாய்வும் நடத்தப் பெற்று முகாம் சிறப்பாக நடப்பதற்கான ஆலோசனைகள் பெறப்பட்டன.

‘நிகழ்’ நாடகக் குழுவைச் சேர்ந்த சந்திர மோகன் நாடகம் நிகழ்த்துவது குறித்த அருமையான, விரிவான வகுப்பை எடுத்த துடன் நடித்தும் காட்டினார். குழந்தைகளும் நாடகங்கள் தயாரித்து நிகழ்த்திக் காட்டினர்.

கலந்துகொண்ட குழந்தைகளைக் கொண்டு ‘சிற்றுளி சிறுவர் மன்றங்கள்’ தொடங்கப்பட்டு, அதற்கான பொறுப் பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

முகாமில் குழந்தைகளுக்கான உணவு மற்றும் பிற ஏற்பாடுகளை இராவணன், திட்டமிடலில் தாமரைக்கண்ணன் ஆகியோர் பங்கேற்று ஒத்துழைத்தனர். தலைவர் கொளத்தூர் மணியின் வழிகாட்டுதலோடு ஆசிரியர் சிவகாமியின் ஒருங்கிணைப்போடு முகாம் சிறப்பாக நடந்தது.

**செய்தி: ஆசிரியர் சிவகாமி**

### மன்னையில் வாசகர் வட்டம் தொடக்க விழா

# பெரியாருக்கு எதிராக அம்பேத்கரை நிறுத்த சதி

சென்னை ஐஐடியில் அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்டம் தடை செய்யப்பட்டதை கண்டித்து திருவாரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் ஜூன் 4ம் தேதியன்று மன்னார்குடியில் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. முறையாக 5 நாட்களுக்கு முன்பே காவல்துறையில் அனுமதி கேட்டும் காவல்துறை திடீரென அனுமதி மறுத்தது. அதைத் தொடர்ந்து திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி குமாரசாமி திருமண அரங்கத்தில் கடந்த ஜூன் 15ம் தேதி மாலை கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்று கவிஞர் கலைபாரதி உரையாற்றினார். திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா.காளிதாசு கருத்தரங்கத்திற்கு தலைமையேற்றார். திராவிடர் விடுதலைக்கழக தலைமைக்குழு உறுப்பினர்கள் தூத்துக்குடி பால்பிரபாகரன், திருப்பூர் துரைசாமி, ஈரோடு இரத்தினசாமி, கோபி, இராமஇளங்கோவன், தமுமுக மாவட்ட செயலாளர் நூர்தீன் ஆகியோர் முன்னிலையேற்று உரையாற்றினர்.

அம்பேத்கர் பெரியார் "சமூக விடுதலையின் கலகக் குறியீடுகள்" என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக்கழக தலைவர் தோழர் கொளத்தூர்மணி உரையாற்றினார். அவர் தனது உரையில், சென்னையில் ஐஐடியில் படிக்கின்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் கடந்த 2014ஆம் ஆண்டு தங்கள் உரிமைகளை நிலைநாட்டுவதற்காக அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டம் என்ற அமைப்பை உருவாக்கினார்கள், 1959ம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை ஐஐடியில் ஏராளமான மாணவர் அமைப்புகள் பல்வேறு ஆண்டுகளாக செயல்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய மாணவர் அமைப்புகள் அனைத்தும் இந்துத்துவா

( 4ஆம் பக்கம்)

## வரலாற்று நிகழ்வுகளை சுட்டி கொளத்தூர் மணி உரை

# மருத்துவமனை–கல்லூரிக்கு வாரி வழங்கிய ‘கஞ்சன்’தான் பெரியார்!

*தோழர் கவி தொகுத்துள்ள “மலாயா தமிழ் முன்னோடிகளும் பெரியார் வருகையும்” நூல் வெளியீட்டு விழா 8.5.2015 அன்று திருவாரூர் எத்திராஜ் திருமண மண்டபத்தில் முக்கூடல் அமைப்பின் சார்பில் நடைபெற்றது. நூலை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வெளியிட்டு ஆற்றிய உரையின் சென்ற இதழ் தொடர்ச்சி.*

மலாயா தமிழர்களின் முக்கிய தலைவரான உ.இராமசாமி நாடார் தமது சொந்த வீட்டை தமிழர் சீர்திருத்தச் சங்கத்திற்கு கொடுத்திருக்கிறார். அந்த படத்தையெல்லாம் இதில் போட்டிருக்கிறார். மீண்டும் அ.சி.சுப்பய்யா 74 வது பிறந்த நாள் வருகிறது. கேட்கிறார். கட்டிடம் பழுதாகி இருக்கிறது. உடனே கூறுகிறார்: “கவலைப் படாதீர்கள். ரிப்பேர் செய்ய நான் பணம் தருகிறேன். முழுச்செலவையும் தான் ஏற்றுக் கொள்கிறேன்” என்று சொல்கிறார். உடனே அதை முழுமையாகச் சரி செய்கிறார்கள்.

பெரியாரை கஞ்சன் கஞ்சன் என்று சொல்லு வார்கள். அப்படி சொல்லித்தான் நமக்கு பழக்கம். கோவையில் மருத்துவக் கல்லூரி வருகிறது. தலைமை மருத்துவமனை மருத்துவக்கல்லூரி வந்தவுடன் கல்லூரியின் மருத்துவமனையாக மாற்றப்பட்டு விடுகிறது. மாவட்ட மருத்துவமனையை எங்கு கொண்டு செல்வது என்று பிரச்சனை வருகிறது. திருப்பூருக்கா? ஈரோட்டுக்கா? இரண்டு ஊரும் ஒரே மாவட்டம். யார் ஒரு இலட்சம் தருகிறார்களோ, அப்போது 1964இல் அது பெரிய தொகை. அந்த ஊருக்கு கொண்டு போவோம் என்று சொல்லு கிறார்கள். அப்போது எல்லாரும் பெரிய நோட்டை எடுத்துகிட்டு பெரியாரிடம் பெரிய பணக்காரங்க ளெல்லாம் வர்றாங்க. ‘அய்யா நாம 100 பேரு ஆளுக்கு 1000 ருபாய் போட்டு, ஒரு இலட்சம் ருபாய் கொடுத்திடலாம்’ என்று சொல்லுகிறார்கள். பெரியார் சொல்கிறார், ‘நீங்க ஒருத்தரே ஒரு இலட்சம் கொடுக்கலாமே’ என்று முன்னாலே உட்கார்ந்து இருக்கிற முதலாளியைப் பார்த்து சொல்கிறார். ‘முடியல்லன்னா சொல்லுங்க. நான் கொடுத்துடுறேன்’ என்று சொல்கிறார். அவர் அமைதியாக இருக்கிறார். ‘நான் ஒரு இலட்சம் கொடுக்கிறேன். கொண்டு போய் கட்டிடுங்க’ என்கிறார். அப்படித்தான் ஈரோட்டில் பெரியார் ஈ.வெ.ரா. தலைமை மருத்துவமனை வந்தது. பெரியார் பெயர் போட்டிருக்காங்க. சும்மா பெயர் போடல. அவர் தான் பணம் கொடுத்தார்.

ஈ.வெ.ரா கல்லூரிக்கு ஐந்தரை இலட்சம் கொடுத்தால் கல்லூரி வரும் என்றார்கள். அப்போது திருச்சியில் அரசுக் கல்லூரி இல்லை. நேசனல் கல்லூரி, செட்டியார் கட்டினதுதான். ஆனால் அது பார்ப்பனர் கல்லூரியாக மாறி விட்டது. பணம் வேண்டுமானால் செட்டியார் போட்டிருக்கலாம். பாப்பான் பிடிச்சுகிட்டான் அதை. ஜமால் முகமது கல்லூரி இஸ்லாமியர்களுக்கென்று ஆகிவிட்டது. செயிண்ட் ஜோசப் கல்லூரி கிருத்துவர்களுக்கு என்று ஆகிவிட்டது. அரசு கல்லூரி என்று ஒன்று இல்லை.

எங்க ஊர்ல ஒருத்தர் இருந்தாரு. ‘மாமனிதர்’ என்று பட்டமெல்லாம் அவருக்கு கொடுத்தார்கள். அவர்தான் பொள்ளாச்சி மகாலிங்கம். அவர் அரசு கல்லூரி வராம பார்த்துக்கிட்டார். அந்த ஊர்ல அவர் கல்லூரி மட்டும்தான் இருக்கும். வேற எந்தக் கல்லூரியையும் விடமாட்டார். அதுபோல் இருந்த திருச்சியில் ‘ஐந்தரை இலட்சம் கொடுத்தால் கல்லூரி கட்டுகிறேன்’ என்றவுடனே ஐந்தரை இலட்சம் ரூபாயை கொடுத்தார் பெரியார். அதுதான் ‘ஈ.வெ.ரா. கல்லூரி’. ‘எனக்கெல்லாம் காலேஜ் நடத்துற வேலை வேண்டாம். நீ நடத்திக்க’ என்று அரசுக்கு ஐந்தரை இலட்சம் கொடுத்தார். அவரைத்தான் நம்பாளு கஞ்சன் என்பான். அதனால்தான் பெரியார் தொண்டனா வாழ்ந்து சிக்கனமாக சிறுக சிறுக சேமித்து வைத்திருந்தாலும் தமிழர் நலனுக்காக ஒரு அலுவலகம், கட்டடம், நூலகம் என்று வருகின்ற போது கவலைப்படாமல் பணத்தை கொடுப்பவர் களாக நமது முன்னோடிகள் இருந்திருக்கிறார்கள்.

நமக்கு வழிகாட்டியாகப் பார்க்க வேண்டிய பல அரிய செய்திகளை தொகுத்து கொடுத்திருக்க, நம்முடைய தோழர் கவி அவர்கள், ஏராளமான நூல்களை கொடுத்திருக்கிறார், பெரியாரின் மொழிக் கொள்கை பற்றி அருமையான தகவல் அடங்கிய ஒரு நூலை கொடுத்திருக்கிறார். சிறு நூல்தான். ஆனால் பெரியாரின் மொழிக் கொள்கை மீது திறனாய்வு செய்கிறவர்களுக்கு நல்ல விளக்கம் தரும் நூல்” என்றார் கொளத்தூர் மணி.

விழாவில் மலாயாப் பெரியார் அ.சி.சுப்பய்யா, தமிழவேள் கோ.சாரங்கபாணி ஆகியோரின் வழித் தோன்றல்களுக்கு மலேசிய சிலாங்கூர் மாநிலத் திராவிடர் கழகத் தலைவர் சிறப்பு செய்தார். சிறப்பு விருந்தினர்களுக்கு அரிமா.அருண் சிறப்பு செய்தார். நூலாசிரியர் கவி அவர்களுக்கு ஜவகர் சிறப்பு செய்தார். நிகழ்ச்சியினை பேராசிரியர் முனைவர் தெ.வெற்றிச் செல்வன் ஒருங்கிணைத்தார். நிகழ்ச்சிக்கு திருவாரூர் மாவட்ட தி.வி.க. செயலாளர் காளிதாசு, நாகை மாவட்டச் செயலாளர் மகேசு, தலைமைக் குழு உறுப்பினர் இளைய ராசா ஆகியோர் ஒத்துழைப்பு நல்கினர். இரவு 9.30 மணிக்கு நிகழ்வு நிறைவடைந்தது.

**(நிறைவு)**

# 13 வயது கனல்மதி எழுதிய ‘இப்படிக்கு மழை’ கவிதை நூல்






அரசுப் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும் 13 வயது சிறுமியான கனல்மதி எழுதிய ‘இப்படிக்கு மழை’ என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா திருப்பூரில் 24.05.2015 அன்று நடைபெற்றது. சுயமரியாதை கலை பண் பாட்டுக் கழகம், பதியம் இலக்கிய அமைப்பு இணைந்து நடத்திய இந்த நிகழ்வு, அரோமா உணவகம் அருகில் உள்ள ஹெரிட்டேஜ் அரங்கத்தில் நடைபெற்றது

சுயமரியாதை கலை பண் பாட்டுக் கழகத்தின் கோவை மாவட்ட அமைப்பாளர் அ.ப. சிவா வரவேற்புரையாற்ற, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று நூலை வெளியிட்டார். பேராசிரியர் சரசுவதி நூலைப் பெற்றுக் கொண்டார். நூலை அறிமுகப்படுத்தி நூலாசிரியர் கனல்மதியின் தாய், தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர், ஆசிரியர் சிவகாமி பேசினார்.

எழுத்தாளர் பாமரன் பேசும்போது, “13 வயது பெண் இந்தக் கவிதைகளை எழுதியிருக்கிறார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை, எதையெதையோ கவிதை என்று பலர் எழுதும் போது தரமான கவிதைகளை கனல்மதி எழுதியிருப்பது நம்பிக்கையளிக்கிறது” என்றார்.

பேராசிரியர் சரசுவதி பேசும் போது, “காலம் காலமாக ஆண்களுக்குரிய இசைக்கருவி என்று புல்லாங்குழல் இருந்ததை மாற்றி பெண்களுக்கு உரிய கருவியாக உருவகிக்கிற இவரது கவிதை பெண்ணிய நோக்கில் சிறப்பானது என்றும், பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு சுதந்திர வானில் சிறகடித்து பறக்க வேண்டும் என்பதை கவிதைகள் அழகாகக் குறிப்பிடுகிறது” என்றும் பேசினார்.

கொளத்தூர் மணி தனது உரையில், “பிராய்லர் பள்ளிகளில் அல்லாமல் தாய்மொழிவழிக் கல்வி பயின்றதும், அரசுப் பள்ளியில் பயின்றதும்தான் சிறுமி கனல்மதியின் இந்த கவிதைத் திறனுக்குக் காரணம். கனல்மதியின் கவிதைகளில் பெரும்பான்மை இயற்கையை உருகி உருகி நேசிக்கும் கவிதைகளாக இருக்கின்றன. அழிக்கப்பட்டு வரும் இயற்கை வளங்களைப் பாதுகாக்க வேண்டியதன் தேவை, தமிழர் பாரம்பரிய இசைக்கருவியான பறையை முன்னெடுக்க வேண்டியதன் தேவை, பெண்கள் மீது செலுத்தப்படுகிற வன்முறை கூட அவர்களை போராடத் தூண்டி வலிமை உள்ளவர்களாக மாற்றும் தன்மை ஆகியவை குறித்தும் கனல்மதியின் கவிதைகள் பேசுவதாக குறிப்பிட்டார்.

நூலாசிரியர் கனல்மதி தனது ஏற்புரையில், “பெரியாரியல் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட குடும்பத்தில் இருப்பதே சுதந்திரமாக சிந்திக்கவும், அதை வெளிப்படுத்தவும் உதவியாக இருந்தது. அனைத்து குழந்தைகளும் தங்களது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்த வேண்டும் என்பதே தனது விருப்பம்” என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியை பதியம் இலக்கிய அமைப்பின் அமைப்பாளர் பாரதிவாசன் தொகுத்து வழங்கினார். கோவை ‘ஓசை’ சுற்றுச் சூழல் அமைப்பின் நிறுவனர் காளிதாசன், திருப்பூர் தாய்த் தமிழ்ப் பள்ளி தாளாளர் தங்கராசு, அம்மாபாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர் தனபாக்கியம், கவிஞர் கோவை சதாசிவம், இயற்கை வாழ்வகம் முத்துச்சாமி, திராவிடர் விடுதலைக் கழக மாவட்டத் தலைவர் தோழர் துரைசாமி, த.பெ.தி.க. மாவட்ட செயலாளர் ரமேஷ்பாபு, கவிஞர் து.சோ.பிரபாகர், நஞ்சப்பா பள்ளியின் முன்னாள் தலைமையாசிரியர் துரைசாமி, உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியாக திராவிடர் விடுதலைக் கழக மாவட்டச் செயலாளர் முகில்ராசு நன்றி கூறினார்.

# பெரியாரும் அம்பேத்கரும் ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக்களை பரப்புகின்ற வகையில் பல்வேறு வகையான கருத்துப் பிரச்சாரங்களை ஐஐடியில் தொடர்ந்து செய்து வருகின்றன. இந்து மக்கள் கட்சியை சேர்ந்த அர்ஜுன் சம்பத் போன்றோர்கள் சென்னை ஐஐடிக்கு அம்பேத்கர் பெயரை வைக்க வேண்டும் என்றும் எக்காரணத்தை முன்னிட்டும் பெரியாரின் பெயர், அவர் கருத்துக்கள், ஐஐடியில் பரவுவதை அரசு தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் தொடர்ச்சியாக கூறி அம்பேத்கரையும், பெரியாரையும் வேறு வேறு சிந்தனைகள் கொண்ட தலைவர்களாக மக்கள் மத்தியில் தவறான பிரச்சாரத்தில் ஈடுபடுகிறார்கள். தான் இறக்கும் போது இந்துவாக இறக்கமாட்டேன் என்றும் இந்துமதத்தின் புராணக் குப்பைகளை அதன் வேதநூல்களின் வாயிலாகவே அம்பலப்படுத்திய அம்பேத்கரை பெரியாரை எதிர்ப்பதற்காக துணைக்கு அழைக்கிறார்கள். பெரியாரை எதிர்க்க இவர்கள் அண்ணலை நாடுகிறார்கள் என்றாலே அது பெரியாரை கண்டு இவர்கள் எவ்வளவு நடுங்கி போயிருகிறார்கள் என்பது நமக்கு தெளிவாகிறது. புரட்சியாளர் அம்பேத்கர் 1951ல் தனது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்யும் போது அதற்கென கூறிய நான்கு காரணங்களை கூறினார். பிற்படுத்தப்பட்டவர்களின் நலன் காக்க, அதற்கென பிற்படுத்தப்பட்ட ஆணையம் அமைக்க-அரசியல் சட்டத்தில் இடமிருந்தும், அதை நேரு அரசாங்கம் செய்யவில்லை என்பது அதில் ஒன்று. பிற்படுத்தப்பட்டோர் நலனுக்காக பல்வேறு பிரச்சனைகளை முன்வைத்தவர் மற்றும் அதற்காக போராடியவர் அம்பேத்கர். ஆனால் இந்துத்துவ மதவாத சக்திகள் ஜாதியை தூக்கி பிடிக்கின்ற சனாதான சக்திகள் புரட்சியாளர் அம்பேத்கரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கான தலைவரென பொய்யான கருத்தை மக்கள் மத்தியில் நச்சு விதைகளாக விதைத்து வருகின்றன. அம்பேத்கரும் பெரியாரும் பிற்படுத்தப்பட்ட ஒடுக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான ஆயுதங்களாவார்கள். சென்னை ஐஐடியில் அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்டத்தை தடை செய்ததின் நோக்கத்தை நாம் சிந்தித்து பார்க்க வேண்டும். வசிஷ்டர், வியாசர்கள் உலவும் அய்.அய்.டி. வளாகத்திலே அம்பேத்கரும், பெரியாரும் நுழைந்தால்.... அதன் விளைவை அவர்கள் அறிவார்கள் அல்லவா! அதற்குத் தானே இந்தத் தடைவிதித்தார்கள்? நம் நாட்டில் நடக்கின்ற சமூகப் போராட்டத்தின் அடிநாதமே இதுதான்” என்று கூறினார்.

அம்பேத்கர்-பெரியார் "சனாதானத்திற்கு எதிராக சுழலும் போர்வாள்கள்" என்ற தலைப்பில் தமுமுக பொதுச் செயலாளர் தோழர் ப.அப்துல்சமது உரையாற்றினார். அவர் தனது உரையில், அம்பேத்கர் பெரியார் பெயரில் உள்ள புரட்சிகர அமைப்புகளை ஒடுக்குவதற்கு இந்துத்துவா சக்திகள் நீண்ட நெடிய காலமாக முயற்சித்து வருகின்றன. அதன் ஒரு பகுதியாகவே




சென்னை ஐஐடியில் உள்ள அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்டத்தை தடைசெய்ததாகும். எதிர்த்து அழிக்க முடியவில்லை என்றால் தோளில் கை போட்டு கழுத்தறுப்பதுதான் பார்ப்பனீய சக்திகள் காலம் காலமாக செய்துவரும் சூழ்ச்சியாகும். அதற்கு உதாரணம் கூறவேண்டுமென்றால் புத்தமதத்தை இந்தியாவில் இவர்கள் அழித்தனர். மலம் கழித்தால் அந்த பாகத்தை மட்டும் கழுவுகிறோம், ஆனால் தாழ்த்தப்பட்டோரை உடம்பெல்லாம் தீட்டு என்று கூறி ஜாதிய வெறியோடு குளித்தார்களே இது நியாயமா? பார்ப்பனீய கண்டுபிடிப்பான சனாதானம் என்ற சாக்கடை சிந்தனையை அம்பேத்கர், பெரியார் என்கின்ற ஆயுதங்களை கொண்டு நாம் வேரோடும், வேரடி மண்ணோடும் நம் மண்ணிலிருந்து பிடுங்கி எரிய வேண்டும். அப்துல் சமது ஆகிய நான் அரேபியாவிலிருந்தோ, துருக்கியிலிருந்தோ இந்த நாட்டிற்கு வரவில்லை. இந்த பார்ப்பனீய சனாதான கொடுமை காரணமாக கோவில்-நுழைய முடியாத ஜாதியாக தமிழ் நாட்டில் ஏதோ ஒரு குக்கிராமத்தில் பிறந்த ஆறுமுகம் தான் இன்றுஅப்துல் சமதாக உங்கள் முன்பு நிற்கிறேன். அம்பேத்கரும் பெரியாரும் வேறு வேறு தலைவர்கள் என பிரிக்கின்ற முயற்சியும் நடைபெறுகிறது. பாஜகவின் இத்தகைய முயற்சி ஒரு போதும் பலிக்காது. காரணம் அம்பேத்கரும் பெரியாரும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக மக்களால் போற்றப்படுகின்றனர் என்று கூறினார்.

முன்னதாக அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்டத்தை தமுமுக பொதுச் செயலாளர் அப்துல் சமது முன்னிலையில், திராவிடர் விடுதலைக்கழக தலைவர் கொளத்தூர் மணி தொடக்கி வைத்தார். அதன் தலைவராக ‘கருக்கல் விடியும்’ பத்திரிகை ஆசிரியர் அம்ரா பாண்டியன், செயலாளராக மன்னை வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கப் பொருளாளர் சேரன்குளம் செந்தில் குமார், அமைப்பாளர்களாக கவிஞர் தம்பி, கவிஞர் கலைபாரதி மற்றும் அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்டச்செயலாளர் இரா.காளிதாசு ஆகியோர் அறிவிக்கப்பட்டனர். கருத்தரங்கில், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாநில அமைப்பாளர் ஈரோடு சிவக்குமார், மன்னை நகர சிபிஎம் நகர செயலாளர் சந்திரா, தஞ்சை வடக்கு மாவட்ட அமைப்பாளர் கு.பாரி, கடலூர் மாவட்ட அமைப்பாளர் பாரதிதாசன், விருதுநகர் மாவட்ட அமைப்பாளர் கணேசமூர்த்தி, திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட பொறுப்பாளர்கள் மணிகண்டன், செந்தமிழன், சேரன் ரமேஷ், நல்லிக்கோட்டை முருகன், உத்திராபதி, மனோகர், தென்பரை பன்னீர் செல்வம், ஏனாதி சங்கர், குடவாசல் ஸ்டாலின், கரிகாலன், வெங்கடேசன், அம்ஜத்கான், கோவிந்தன், மன்னை சசிக்குமார், சுபஜெயச்சந்திரன், வடசேரி சிவசுப்ரமணியன், பிரபாகரன் உள்ளிட்ட ஏராளமான பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். ✦

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

இயக்கப் பணிகள் தொடங்குகின்றன. 1962ஆம் ஆண்டு இறுதியில் பெரியார், காங்கிரசை ஆதரிப்பதாக எடுத்த நிலைப்பாடு, களப்பணிகளில் முரண்பாடுகளை உருவாக்கியதால் ஏ.ஜி.கே. திராவிடர் கழகத்திலிருந்து விலகுகிறார். இவரது தலைமையில் அமைப்பாக்கப்பட்டிருந்த 15,000 தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள், 5,000 பிற்படுத்தப்பட்ட தொழிலாளர்கள் காங்கிரசில் பெரும் பண்ணையாளர்களாக இருந்தவர்களை எதிர்த்துப் போராடியதால், இந்த முரண்பாடு எழுந்தது. அதே போல், கம்யூனிஸ்ட் விவசாய தொழிலாளர்களை காங்கிரஸ் தன் பக்கம் இழுக்க முயற்சித்த நிலையில், காங்கிரஸ் கம்யூனிஸ்ட் சங்கங்களின் களச் சண்டைகள் நடந்தன. அந்த நிலையில், காங்கிரஸ் பண்ணையாளர்களை எதிர்த்து வந்த ஏ.ஜி.கே. தலைமையிலான திராவிட விவசாய தொழிற் சங்கம் கம்யூனிஸ்ட் தொழிற் சங்கங்களுக்கு ஆதரவு தரும் நிலை உருவாகிறது.

கம்யூனிஸ்ட் விவசாய சங்கத்தில் பெரியாரியல் பார்வையில் அவர் முன்னெடுத்த போராட்டங்களால் அந்தக் கட்சியின் விவசாய சங்கத்திலும் அவரால் தொடர முடியவில்லை. பெண்களை திரட்டி, பண்ணையார்களுக்கு எதிராக மலத்தை வீசச் செய்தல்; ஒப்பாரி வைத்தல் போன்ற போராட்ட வடிவங்களை உருவாக்கி, அதில் பெண்களை ஈடுபடுத்துவதில் பெரும் வெற்றி கண்ட செய்திகளும், பார்ப்பன-பண்ணையார் ஆதிக்கத்தின் கொடுமைகளையும் விரிவாகவும் துல்லியமாகவும் ஏ.ஜி.கே. வாய் மொழியாக பதிவு செய்கிறது இந்த ஆவணம்.

கீழவெண்மணி படுகொலையின் பின்னணியை ஏ.ஜி.கே. விளக்குகிறார். அது கூலி உயர்வுக்காக நடந்த படுகொலை அல்ல; இத்தனைக்கும் கீழவெண்மணி பகுதியில் மற்ற பகுதிகளைவிட கூலி அதிகம். ஆனால், விவசாயத் தொழிலாளர் அமைப்பு நடத்திய போராட்டங்கள், பண்ணையார்களின் ஆதிக்கம் சரியத் தொடங்கின. விவசாய சங்கத்திலிருந்து விலகி, தான் தொடங்கிய நெல் உற்பத்தியாளர் சங்கத்தில் சேருமாறு இரிஞ்சியூர் கோபால கிருஷ்ண நாயுடு வற்புறுத்துகிறார். தாழ்த்தப்பட்ட விவசாயிகளின் சங்க நடவடிக்கைகளை தடுக்கிறார்; மிரட்டுகிறார். கோபால கிருஷ்ண நாயுடுவுக்கு எதிரான போராட்டத்தில் பெரியார் இயக்கத்தின் தொண்டர் களும் முன்னணியில் இருந்தார்கள் என்பதையும் கோபால கிருஷ்ண நாயுடு விடுதலையாகி வந்த பிறகு பெரியாரை சந்திக்க முயற்சித்த போது, பெரியார் சந்திக்க மறுத்ததையும், ஏ.ஜி.கே. பதிவு செய்கிறார். செய்யாத கொலைக்காக குற்றம் சாட்டப்பட்டு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு அதிலிருந்து மீண்டு வந்த தோழர் ஏ.ஜி.கே. மார்க்சியத்தை ஏற்றுக் கொண்ட ஒரு பெரியாரிஸ்ட் டின் கள அனுவங்களைப் பதிவு செய்யும் மிகச் சிறந்த ஆவணம் இது.

– ‘இரா’

**நூல்: ஏ.ஜி.கஸ்தூரி ரெங்கனின்**
**‘நினைவுகளும் நிகழ்வுகளும்’**
**தொடர்புக்கு: 9884991001/9786540367**

---

## சென்னையில் அம்பேத்கர்–பெரியார் படிப்பு வட்டம் தொடக்கம்

அம்பேத்கர்-பெரியார் படிப்பு வட்டத் தொடக்க நிகழ்வு-கருத்துரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு சார்பில் 20.6.2015 மாலை 5 மணிக்கு திருவான்மியூர் ‘பனுவல்’ நூல் அரங்கில் நடைபெற்றது. விடுதலை இராசேந்திரன், ‘பெரியார் ஓர் அறிமுகம்’ என்ற தலைப்பில் சுமார் 3 மணி நேரம் உரையாற்றினார். உரையின் இரண்டாவது பகுதி ஜூலை 18இல் நிகழும்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 25 June 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN